பக்கங்கள் **24**

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 359 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 4, வியாழன் 20.11.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

# ஐஸ்கிறீமில் அரசியல் விசாரணை அவசியம்

## மாகாண சுகாதார அமைச்சரின் கீழான நடவடிக்கை குறித்து கூட்டமைப்பினரே சபையில் போர்க்கொடி

யாழ்ப்பாணம், நவம்பர் 20
யாழ். குடாநாட்டில் உள்ள ஐஸ் கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தி நிலையங்கள் மீது மாகாண சபை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் நேற்று வடக்கு மாகாண சபையில் வலியுறுத்தினர். இந்த நடவடிக்கையின் பின்னணியில் அரசியல் உள்நோக்கங்கள் இருக்கின்றன – என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். எனவே உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று அவர்கள் போர்க்கொடி தூக்கினர்.

**பின்னணி**
குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்திகளில் கிருமித் தொற்று இருப்பதாக வட மாகாண சபை சுகாதார அதிகாரிகள் கண்டறிந்தனர். யாழ்ப்பாணத்தில் பெறப்பட்ட மாதிரிகள் கொழும்பிலுள்ள

❖22 ஆம் பக்கம் பார்க்க

## காலநிலை

### 6 மாகாணங்களில் அதிக மழைவீழ்ச்சி காணப்படும்

யாழ்ப்பாணம், நவ.20
தற்போது காணப்படும் மழையுடன் கூடிய காலநிலை நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடரும் என்று எதிர்பார்ப்பதாக வானிலை அவதான திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை நேற்று அந்தத் திணைக்களம் விடுத்துள்ளது.
அதில், வடக்கு, வடமத்தி, கிழக்கு, ஊவா, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக காலி வரையான கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என்றும், அதன்போது இந்தக் கடற்பகுதிகளில் அலையின் வேகம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதேவேளை, நாட்டின் பெரும்பாலான கடற்பிராந்தியங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்குரிய வாய்ப்புகள் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்

### வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது நேற்று மீண்டும் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 20
தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நேற்று இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்றப்பட்டது.
"வடக்கில் போர் நடந்த காலங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல நூற்றுக் கணக்கான தமிழர்களை எட்டு, பத்து, பதினைந்து வருடங்கள் என்று சிறையில் அடைத்து வைத்துள்ளனர். இவர்களில் அனேகமானவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையிலும் வேறு

❖19 ஆம் பக்கம் பார்க்க

## 'உதயன்' மீது கடும் காய்ச்சல்

யாழ்ப்பாணம், நவ. 20
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் 'உதயனை' கடுமையாக விமர்சித்தார் சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன். அமர்வின் இறுதியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு விமர்சித்து கருத்துக்களை வெளியிட்டார்.
"கொஸ்லந்த மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நிதி உதவி வழங்க பின்னடிப்பு என்று 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அதில் நிதி வழங்காத உறுப்பினர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தது. எனது பெயரை குறிப்பிட்டு, பிரதி அவைத் தலைவரின் மகன் பணம் வழங்கியுள்ளார், பிரதி அவைத்தலைவர் பணம் வழங்கவில்லை என்று செய்தி வெளியிட்டிருந்தது.
நான் அவைத் தலைவ

❖19 ஆம் பக்கம் பார்க்க



## இந்திய மீனவருக்குப் பொதுமன்னிப்பு இலங்கை மீனவர்களின் நிலை என்ன?

யாழ்ப்பாணம், நவ.20
போதைப் பொருள்களைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 8 மீனவர்களில், இந்திய மீனவர்கள் 5 பேருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். ஆயினும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏனைய மீனவர்கள் மூவரது கதி என்ன என்பது குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

❖19 ஆம் பக்கம் பார்க்க

## மிரட்டிய அதிபருக்கு ஒழுக்காற்று

யாழ்ப்பாணம், நவ. 20
வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவுக்கு மிரட்டல் விடுத்தார் என்று கூறப்படும் வவுனியா பாடசாலை அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என்று மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா வாய்மொழிமூல வினாவைக் கல்வி அமைச்சரிடம் எழுப்பியிருந்தார். குறித்த பாடசாலை அதிபரால் இதுவரையில் செய்யப்பட்ட மோசடிகளைப் பட்டியல்படுத்தினார்.
இதன் பின்னர் உரையாற்றிய கல்வி அமைச்சர், குறித்த பாடசாலை அதிபர் அவரது சேவையில் தரம் ஒன்றைச் சேர்ந்தவர். அதனால் அவருக்கு எதிராக நான் நடவடிக்கை மேற்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குடனா இருக்கிறது வெலிஓயா?

### சிறப்பு விவாதம் நடத்தி தீர்வு காண முடிவு

யாழ்ப்பாணம், நவ. 20
வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு வடக்குடனா இணைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் சிறப்பு விவாதம் ஒன்றை நடத்தி முடிவு காண்பதற்கு வடக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 5 பாடசாலைகளை வடமத்திய மாகாணத்துக்கு விடுவிக்குமாறு கல்வி அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு வடக்குடன் இணைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். அதையடுத்தே அது தொடர்பில் உண்மைநிலையை அறிவதற்குச் சிறப்பு விவாதம் நடத்துவதற்கு வடக்கு மாகாணசபை முடிவை எடுத்துள்ளது.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், முல்லைத்தீவு மாவட்ட

❖19 ஆம் பக்கம் பார்க்க



**முன்னாள் போராளி கொலை**

## பதவி நிலை பாராது கைதுகள் நடக்கும்

### பொலிஸ் பேச்சாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், நவ.20
மன்னார் வெள்ளாங்குளத்தில் முன்னாள்

❖23 ஆம் பக்கம் பார்க்க

## பணத்தை வாங்கிக் காணியை தாரைவார்த்தார் உரிமையாளர்

### மாதகலில் 66 பரப்புக் காணி இராணுவத்தினரின் வசமானது

யாழ்ப்பாணம், நவ. 20
மாதகல் ஜோதிப்புலத்தில் தனியாருக்குச் சொந்தமான 66 பரப்புக் காணி கடற்படையினரிடம் பறிபோயுள்ளது.
குறித்த காணியை வழங்குவதற்கு உரிமையாளர் எழுத்து மூலமான சம்மதத்தை வழங்கியதைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றுக் காணியை அளவீடு செய்தனர்.
குறித்த காணியின் உரிமையாளர் மனமுவந்து காணியை விற்பனை செய்ததால் அளவீடு செய்வதை யாரும்

❖23 ஆம் பக்கம் பார்க்க

'மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்''

- ஐ.ஸ்டேர்லிங் மோர்டன் (அமெரிக்க எழுத்தாளர்)

## மஹிந்தவை நினைத்து வருத்தப்படுகின்றேன்

### ரஜீவ விஜேசிங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.20

அரசு தனது யோசனைகளுக்குப் பதிலளிக்காது போனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க.

நல்லாட்சியை வலுப்படுத்துதல் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக சில மாதங்களுக்கு முன்னர் அரசுக்கு யோசனை ஒன்றை அனுப்பியதாகக் குறிப்பிட்டுள்ள பேராசிரியரான விஜேசிங்க, தனது யோசனைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உரிய பதிலை வழங்க தவறினால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க போவதில்லை என்றும் உறுதியாகக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"எனக்கு ஜனாதிபதிக்கும் எந்த பிரச்சினைகளும் இல்லை. அவர் நல்ல மனிதர். ஆனால் அவரைச் சுற்றியிருக்கும் கொத்து கொத்தான திருடர்களே பிரச்சினைக்குரியவர்கள். ஜனாதிபதியை நினைத்து நான் வருந்துகிறேன்.

நான் கட்சி தாவ உள்ளதாக கூறப்படுவதில் உண்மையில்லை. அது முட்டாள்தனமானது. நான் எனது நிலைப்பாடு குறித்து ஏற்கனவே தெளிவான முடிவை எடுத்து விட்டேன். அதில் மாற்றங்கள் இல்லை."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஜனவரி மாதத்தில் தேர்தல் வேண்டாம்

### ஜோன் அமரதுங்க கோரிக்கை

கொழும்பு, நவ.20

ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று பிரதமர் டி.எம். ஜயரட்னவிடம் கோரிய அவர், பாப்பாண்டவரின் இலங்கைப் பயணம் காரணமாகவே இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# சு.கவும் மஹிந்தவுக்கு தக்க பாடத்தை புகட்டும்

### மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 20

அதிகாரபூர்வமாக நமது நாடு இலங்கை ஜனநாயக சோஷலிஸக்குடியரசு என அறியப்பட்டுள்ளது. இதில் இன்று எஞ்சி இருப்பது இலங்கை என்ற பெயர் மட்டும்தான். ஜனநாயகத்தையும், சோஷலிஸத்தையும் ஒழித்துவிட்டு ஒரு முடியரசு இங்கே தோன்றியுள்ளது.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் இடம் பெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றும்போதே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், இந்த நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை மீளமைத்து குடியரசைக் காப்பாற்றும் தேர்தலாகும். எனவே, இந்தத் தேர்தல் கட்சி, நிறம், இனம், மதம் ஆகிய பேதங்களைக் கடந்த தேர்தலாக இருக்க வேண்டும். நாட்டைக் காப்பாற்ற ஒன்று சேரும் இந்தத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி., ஜனநாயகக் கட்சி, ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரிவும் இடம் பெற வேண்டும்.

இவற்றுடன் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நமது கட்சி உட்பட்ட அனைத்துக் கட்சிகளும் இடம்பெற வேண்டும். இந்தக் கூட்டு செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் இந்த சர்வாதிகார முடியரசு ஆட்சியை முதலில் முடிவுக்கு கொண்டு வந்துவிட்டு, நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவோம். அதன் பிறகு நாம் பொதுத் தேர்தலை தனித் தனிக் கட்சிகளாக சந்திப்போம்.

எங்கு போனாலும் உங்கள் பொது வேட்பாளர் யார்? எனக் கேட்கிறார்கள். இதன் காரணம் இந்த அரசுதான். இன்று பொது வேட்பாளர் பற்றி எங்களைவிட அரசுதான் அதிகம் கலவரமடைந்து பதற்றமடைந்துள்ளது. அதனால்தான் 'எங்கே உங்கள் பொது வேட்பாளர் என்று எங்களிடம் கேட்கிறார்கள்.

நாங்கள் பொது வேட்பாளர் பற்றிய விடயத்தை விட, பொது மேடை மற்றும் பொது எதிரணி கூட்டணி பற்றிய விடயத்துக்கே முன்னுரிமை கொடுத்து வந்தோம். அது இப்போது பயனளித்துள்ளது.

அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஹெல உறுமய, நேற்று (நேற்றுமுன்தினம்) நாட்டுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிறந்த நாள் பரிசு வழங்கியுள்ளது. அந்தப் பரிசின் மூலம் இன்றைய அரசில் உள்ளவர்கள் மத்தியில் உடை உடுத்தி தன்மானத்துடன் தெருவில் நடக்கும் தகைமை ஹெல உறுமய கட்சிகாரர்களுக்கு மட்டுமே உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசுவாசிகளுக்கு இங்கே இடம் தயாராக உள்ளது. இன்று ஒரு முடியரசாக மாறியுள்ள இந்நாட்டை காப்பாற்றி, இந்நாட்டை மீண்டும் ஒரு குடியரசாக மாற்ற உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகாரர்கள் தயாராக இருக்கின்றார்கள். அவர்களும் மஹிந்தவுக்கு தக்க பாடம் புகட்டி - பரிசளித்து விட்டு இங்கே வருவார்கள். பொறுத்திருங்கள் - என்றார்.

### விபத்துக்கள்

#### வாகன விபத்தில் ஒருவர் சாவு

மாங்குளம், பனிக்கன்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார். வவுனியா, பொன்னாவரசன் குளத்தைச் சேர்ந்த கோகுலன் செல்வரட்ணம் (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மாங்குளம் பொலிஸாரால் மாங்குளம் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந் துள்ளார். அவரை மோதிய வாகனம் அடையாளம் காணப்படவில்லை. உயிரிழந்தவரின் உடல் தற்போது கிளிநொச்சி மருத்துவம்னையில் வைக்கப்பட்டுள்ளது. (ற-18)

#### ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்

கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி வீதியோர மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த நபருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலையில் இடம்பெற்றது. மீசாலை மேற்கைச் சேர்ந்த வேலுப்பிளை தங்கராசா (வயது-62) என்பவரே கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ற-9)

## அரச நிர்வாகம், அரசியலில் ஈடுபட பிக்குகளுக்கு உரிமை கிடையாது

### சபையில் பிரதமர் காட்டம்

கொழும்பு, நவ. 20

ஏனைய மதங்களை அடக்கியாள்வதற்கு பௌத்தர்களுக்கு உரிமை கிடை யாது என்றும், அரசியலில் ஈடுபடவும், அரச நிர்வாகத்தில் ஈடுபடவும் பௌத்த பிக்குமாருக்கு உரிமை கிடையாது என்றும் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப் படுத்தப்பட்ட அமைச்சுகளுக்கான நிதியொதுக்கீடு குறித்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டில் மதங்களுக்கு எதிராக ஒருசில சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன என்பதை ஏற்கின்றேன். ஒருசில விஷமிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய மதங்களுக்கும் சுதந்திரமாக செயற்படக்கூடிய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதர மதங்களை அடக்கியாளும் உரிமை பௌத்தர்களுக்குக் கிடை யாது. இந்த நாட்டில் சகல மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். ஒரு சிலரே குழப்பங்களில் ஈடுபடுகின்றனர். ஏனைய நாடுகளில் ஒரே மதத்துக்குள்ளேயே மோதல்கள் ஏற்பட்டு அழிவுகள் ஏற்படுகின்றன. எனவே, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு மதச் சுதந்திரம் சிறந்து பேணப்படுகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மதம் முக்கியம். அதுவே அவனை நல்வழிப்படுத்துகின்றது. குறிப்பாக, எந்தவொரு நாட்டிலும் மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு அரசு நிதியொதுக்கீடு வழங்குவதில்லை. இலங்கையில் மட்டும்தான் இவ்வாறு நிதி வழங்கப் படுகின்றது.

அதேவேளை, துறவிகளாக இருக் கும் பிக்குமார்கள் இன்று துறவறத்தை மறந்து அரசியலில் ஈடுபடுகின்றனர். ஒருசிலரே இவ்வாறு செயற்படுகின் றனர். எனவே, அவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது - என்றார். (ற-சி)

## பொதுவேட்பாளர் பற்றி பேசப் போவதில்லை

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, நவ.20

பொது வேட்பாளர் குறித்து பேசப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பி. அத்துடன் கூட்டாக இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது குறித்து தமது கட்சி கவனம் செலுத்தாது என்றும், அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் சட்டவிரோதமானது என்பதே ஜே.வி.பி கட்சியின் நிலைப்பாடு என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியும் என்ற உச்ச நீதிமன்றின் சட்டவிளக்கத்தை தமது கட்சி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் ஜனநாயக நெறிமுறைகள் வீழ்ச்சியடைவதற்கு ஜனாதிபதி முறைமையே காரணம் என பெரும்பான்மையான மக்கள் கருதுவதாகத் தெரிவித்துள்ள அவர், எனவே மக்களின் இந்தக்கருத்துக்கு அரசு செவிசாய்க்காது தேர்தலை நடத்த முயற்சித்தால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க நேரிடும் என்றும் கூறியுள்ளார். (ற)

## பயங்கரவாதம் தலைதூக்காது

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.20

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமில்லை என்று தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பயங்கரவாதம் ஏற்படக் கூடுமென சில சர்வதேச நிறுவனங்கள் எதன் அடிப்படையில் எதிர்வு கூறியுள்ளன என்பது புரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாக பொருளாதார மற்றும் சமாதானத்திற்கான சர்வதேச நிறுவனம் அண்மையில் எதிர்வு கூறியிருந்தது. எனினும், இந்த எதிர்வு கூறல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். பயங்கரவாத நடவடிக்கை ஏற்பட பாதுகாப்புத் தரப்பினர் இடமளிக்கமாட்டார்கள் என்றும் தெரிவித்தார். (ற)

## கடும்போக்கு இயக்கங்களுடன் அரசுக்குத் தொடர்பேதுமில்லை

### சமய விவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.20

பொதுபல சேனா போன்ற கடும் போக்குவாத இயக்கங்களுடன் அரசுக்குத் தொடர்பு கிடையாது என்று பௌத்த சமய விவகார பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா, தௌகீத் ஜமாத் போன்ற கடும் போக்குடைய இயக்கங்களின் செயற்பாடுகள் தொடர்பிலான பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இளைஞர்கள் கடும்போக்குவாத சிந்தனைகளால் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கடும்போக்குவாத செயற்பாடுகளை அரசு ஏற்றுக்கொள் ளாது. அதற்கு அனுமதியளிக்காது. ஜனநாயக நாடு எனவும், ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பான செயற்பாடுகளில் ஈடுபட சுதந்திரம் காணப்படுகின்றது. பொதுபல சேனா போன்ற இயக்கங்கள் பௌத்த சாசன அமைச்சு அல்லது சமய விவகார அமைச்சில் இணைந்துகொள்ளவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 04 வியாழன் (20.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 359

# ஓமந்தைச் சாவடியில் மீண்டும் கெடுபிடிகள்

## பயணிகள் பெரும் சிரமம்

கொழும்பு, நவம்பர் 20

வவுனியா ஓமந்தைச் சோதனைச் சாவடியில் மீண்டும் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால் அதனூடாகப் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குள் செல்லும் வாகனங்களில் சோதனை நடவடிக்கைகளைத் தளர்த்தியுள்ள இராணுவத்தினர் வவுனியாவில் இருந்து யாழ்.வரும் வாகனங்களில் பயணிப்போரிடம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற

## விபத்தின் உண்மையை கண்டறியுமாறு உத்தரவு

மாங்குளம், நவ.20

மாங்குளம் பகுதியில் கடந்த 8ஆம் மாதம் இடம்பெற்ற விபத்தொன்றின் உண்மையைக் கண்டறிந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவுநீதிமன்றம்பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 8ஆம் மாதம் இடம்பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்த மாணிக்கசோதி அபிமன்னசிங்கம் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்றது. இதன்போது உயிரிழந்தவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் முன்னிலையாகியிருந்தார்.

வழக்கு விசாரணையின் போது மாணிக்கசோதி பயணித்த வாகனச் சாரதி சாட்சி

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்-கொழும்பு ரயில் சேவையில் கால தாமதங்கள்

கரணவாய், நவ.20

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ரயில்கள் உரிய நேரத்துக்கு உரிய இடங்களைச் சென்றடையாமல் தாமதமாவதால் அவற்றில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் சேவையில் ஈடுபடும் ரயில்கள் முன்னர் குறித்த நேரத்துக்கு உரிய இடங்களைச் சென்றடைந்தன.

ஆனால் கடந்த இரு நாள்களாகச் சேவையில் ஈடுபடும் அனைத்து ரயில்களும் ஒரு மணித்தியாலங்களுக்கு மேலாகத் தாமதமாகவே கொழும்பு ரயில் நிலையத்தையும், யாழ்ப்பாண ரயில் நிலையத்தையும் சென்றடைகின்றன.

குறிப்பாக யாழ். ரயில் நிலையத்தில் இருந்து மதியம் புறப்படும் ரயில் இரவு 8 மணிக்குக் கொழும்பு ரயில் நிலையத்தைச் சென்றடைய

(22ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் சேவை மன்றத்தின் ஊடக மாநாட்டில் வாக்குவாதம்

### மன்றத்தின் உதவி இயக்குனர்-இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் பரஸ்பரம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.20

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அதன் உதவி இயக்குனர் ஐ.தபேந்திரன், மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் செ.விஜிதரன் இடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் மன்றத்தினரால் இதுவரை காலமும் செய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குனர் ஐ.தபேந்திரன்,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கி வரும் நிறுவனம். எமது நிறுவனத்தினால் செய்யப்படும் செயற்பாடுகளில் யாழ் மாவட்டத்தில் உள்ள ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாங்கள் ஊடகங்களின் பங்களிப்புடன் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளதுடன் எதிர் காலத்திலும் பல செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாகக் கிராமத்துக்கென்று இளைஞர் கழகங்களை உருவாக்கவுள்ளோம். இவை தவிர துறை சார்ந்த ரீதியில் பல திட்டங்களை உருவாக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது உடனிருந்த மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் செ.விஜிதரன்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## பாலைதீவில் மூழ்கிய படகு; உயிர் தப்பினர் 3 மீனவர்கள்

யாழ்ப்பாணம், நவ.20

பாஷையூர் பகுதி மீனவர்களின் படகு ஒன்று பாலைதீவுக் கடலில் திடீரென மூழ்கிய சம்பவத்தில் மூன்று மீனவர்களும் ஒருவாறு காப்பற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்றது.

பாலைதீவுக் கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை திடீரென வீசிய காற்றினால் ஏற்பட்ட கடல் கொந்தழிப்பால் படகு நீரில் மூழ்கியது.

படகு மூழ்கியதை அவதானித்த மற்றொரு மீனவர் படகு விரைந்து சென்று மூழ்கிய படகில் இருந்த மூன்று மீனவர்களையும் மீட்டனர்.

பாலைதீவுக் கடலில் மூழ்கிய படகை மீட்டு எடுத்துவருவதற்கு மீனவர்கள் முயற்சிகளை

(22ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த இரு வருடங்களில் 4,806 பேர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், நவ. 20

நாடளாவிய ரீதியில் கடந்த இரண்டு வருடங்களில் இடம்பெற்ற விபத்துகளால் 4 ஆயிரத்து 806 பேர் உயிரிழந்துள்ளனர். பாதசாரிகளும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுமே அதிகளவில் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி விபத்துகளால் ஏற்படும் இறப்புகளையும் பாதிப்புக்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ்.மருத்துவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வூட்டும் செய்தியாளர் சந்திப்பு யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகளே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பாதசாரிகள் 2012 இல் 762 பேரும், 2013இல் 686 பேரும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் 2012 இல் 682 பேரும்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## அடகிலிருந்து மீட்ட நகைகளை நேற்றுப் பறிகொடுத்தார் பெண்

### சுதுமலையில் சம்பவம்

வலி.தென்மேற்கு, நவ.20

வங்கியில் அடகு வைத்த தங்க நகைகளை எடுத்துக் கொண்டு சைக்கிளில் வீடு நோக்கிச்சென்று கொண்டிருந்த இளம் பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் ஒருவர் மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தைப் பயன்படுத்திச் சைக்கிள் கூடையில் தங்க நகைகள் வைக்கப்பட்டிருந்த கைப்பையைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவானார்.

பெண்ணின் அவலக் குரல் கேட்டு அந்த இடத்துக்கு விரைந்து வந்த வழிப்போக்கர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு திரு

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக போலிச் சாட்சியங்கள்

### வெளிவிவகார அமைச்சு குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 20

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடரின்போது இலங்கைக் கெதிராக முன்வைப்பதற்காக போலியான சாட்சியங்கள் தயாராகின்றன என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு குற்றஞ் சுமத்தியது.

மேலும், இது விடயத்தில் தலைமைச் சபையான ஐக்கிய நாடுகள் சபை கூடப் பக்கச் சார்பாகவே செயற்படுவதாகவும் அவ்வமைச்சு சாடியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## காற்றினால் வீடு சேதம்

யாழ்ப்பாணம், நவ.20

நெடுந்தீவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வீசிய சுழிக் காற்றினால் மேற்கு முதலாம் வட்டாரத்தில் வீடு ஒன்றின் கூரை தூக்கி வீசப்பட்டது. இந்தப் பகுதியில் மரக்கிளைகள் சிலவும் முறிந்து வீழ்ந்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை மட்டுமல்லாது உலகையே ஆக்கிரமிக்கும் சீனா

### 18 கடற்படைத் தளங்கள் குறித்து நமீபிய நாளேடு தகவல்

கொழும்பு, நவ.20

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், இலங்கையில் சீனக் கடற்படையின் பிரசன்னம் அதிகரித்து வருவது குறித்த கரிசனைகள் அதிகரித்துள்ள நிலையில், சீனா உலக நாடுகள் பலவற்றில் 18 கடற்படைத் தளங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக நமீபியாவின் நாளேடு தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சீனா நமீபியாவின் வல்விஸ் வளைகுடாவில் அடுத்த 10 வருடத்திற்குள் கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து நாட்டின் உயர்மட்டத்தில் தீவிரமாக ஆராயப்படுகின்றது.

சீன ஊடகங்களின் தகவல்களின்படி நமீபியாவின் வல்விஸ் வளைகுடா உட்பட பல பிராந்தியங்களில் 18 கடற்படைத்தளங்களை அமைக்க அந்தநாட்டின் கடற்படை திட்டமிட்டுள்ளது.

இந்து சமுத்திரப் பகுதியில் இலங்கை, பாகிஸ்தான், மியன்மார் ஆகிய நாடுகள் உட்பட பல பகுதிகளை சீனா

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கெற்பேலி அ.த.க.மாணவர்கள் இருவர் சாதனை

தென்மராட்சி, நவ.20

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கெற்பேலி அ.த.க.பாடசாலையில் முதல் தடவையாக இரண்டு மாணவர்கள் கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்துள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

பாடசால்ல வரலாற்றில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஒரு மாணவன் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததாகவும், கடந்த பரீட்சையில் வெட்டுப் புள்ளியை அண்மித்த நிலையில் காணப்பட்ட ரவிச்சந்திரன் சிந்துா-157, யோகேஸ்வரன் சேந்தன்-154 ஆகியோர் புதிய வெட்டுப்புள்ளி குறைப்பு அறிவிப்பின் பிரகாரம் சித்திபெற் றுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார். (வ-9)

## சுத்திகரிக்கப்படாத நிலையில் வெள்ள நீர் கால்வாய்கள்

கொழும்புத்துறை, நவ.20

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் உள்ள குளங்களில் இருந்து கடலுக்குச் செல்லும் பிரதான வெள்ள நீர் கால்வாய்கள் நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாது காணப்படுவதாக பொதுமக்கள் விச னம் தெரிவிக்கின்றனர்.

புல்பூண்டுகள், செடிகள் முளைத்துள்ளதுடன் பல இடங்களில் குப்பைக் கழிவுகள் கொட்டப்பட்டு நீரோட்டம் தடைப்படும் ஏதுநிலை காணப்படுகிறது. அதேவேளை நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு கால் வாயை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் சுகாதார சீர்கேடுகளை சந்திப்பதாகக் கவலை தெரி விக்கின்றனர்.

தொடரும் மழை காலத்தில் குளங்களின் நீர்மட்டம் உயர்வடையும் போது மேலதிக நீர் கடலுக்கு தடை யின்றிச் செல்ல வசதியாக கால்வாய்களை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## மக்கள் வங்கியால் மாணவர் கௌரவிப்பு



வலி.வடக்கு, நவ. 20

மக்கள் வங்கி சுன்னாகம் கிளை யால் கடந்த 2013ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தி அடைந்த மாணவ, மாணவிகளைக் கௌரவிக் கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை காலை ஏழாலை சைவ சன் மார்க்க வித்தியாலய மண் டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி ப.பிருந்தா தலைமை யில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த் தீபன் கலந்து கொண்டு சித்தி அடைந்த மாணவ மாணவி களுக்கு பதக்கங்கள் அணி வித்து கௌரவித்தார்.

2013 ஆம் ஆண்டு சித்தி அடைந்த 23 மாணவர்களும் 2014 ஆம் ஆண்டு சித்தி அடைந்த 33 மாணவர்களும் பதக்கங்கள் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையால் இரு கட்டடங்கள் நிர்மாணிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

ஊர்காவற்றுறை பிரதேச சபையால் நிர்மாணிக் கப்பட்ட 2 கட்டடங்கள் வைபவ ரீதியாக திங்கட்கிழமை திறந்து வைக் கப்பட்டன.

வடக்கின் வசந்தம் விசேட நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட இரு தய ஆண்டவர் சனசமூக நிலை யம் மற்றும் குறித்தொதுக் கப்பட்ட மாகாண நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட புளியங் கூடல் நாரந்தனை பொது நூல கக் கட்டடம் என்பன நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலன்ரீனால் வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் சபையின் தவி சாளர் ம.ஜெயகாந்தன், பிர தேச செயலர், உதவி திட்ட மிடல் பணிப்பாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத் தர்கள், சபை உறுப்பினர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ)

## மரண அறிவித்தல்

### பொன்னன் பாலசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கந்தசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் பாலசிங்கம் 17.11.2014 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - தங்கம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், ரஞ்சிதாதேவியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், கெங்காதரன், சுகிர்தன் (ஈசன்), கஜீபன், றஜனி, ராதிகா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், துரைராசா, செல்வராசா (துரை) மற்றும் பாக்கியம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் கமலாதேவி, செல்வம் ஆகியோரின் மைத்துனரும், சிவநாதன், பேதிரிஸ், குணா, அனுஜா, வதனி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய், வேம்பன்மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமிகோயிலடி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (54395) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 118/4 பிறவுண் வீதிய்யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசினி அம்மா சிவபாத சுந்தரம் 16/11/2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த வீரசிங்கம் (புவனேஸ்வரி மருந்துக் கடை) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் - யாழ் மாநகரசபை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான கோணேசபிள்ளை (பிரபல வர்த்தகர் - அக்குரஸ்ஸ) - ஆச்சி முத்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும் யோகநாதன் (கனடா), காலஞ்சென்ற உலகநாதன் (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி), பரமநாதன் (கனடா), தருமநாதன் (ஜேர்மனி), கேதாரநாதன் (பிரான்ஸ்), தேவமலர் (கனடா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), பரமகுருநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சோமாவதி மற்றும் இராசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - லண்டன்), வேதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மற்றும் கமலாதேவி, விமலாதேவி, சச்சிதானந்தம், ஞானாம்பிகை, உஷாராணி, தவமலர், சிவதாஸ், இராஜேந்திரன், சகிலா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் பரமேஸ்வரி, காலஞ் சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகலியும் வைத்திய கலாநிதி அச்சுதன் ( மயக்க மருந்து நிபுணர்- ஆஸ்திரேலியா), கனகதாரணி (ஆசிரியை - நல்லாயன் கன்னியர் மடம் - கொழும்பு - 13), எந்திரி, விகிர்தன் (நீர்ப்பாசனப் பொறியியலாளர் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி சுபத்திரா (ஆஸ்திரேலியா), ஞானவேல் (விரிவுரையாளர் - தேசிய கல்வியியற் கல்லூரி - யாழ்ப்பாணம்) சைலஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தித் திணைக் களம் - கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அட்சயன், சாம்பவி, மேத்ரா, அவிக்னா, சதுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014)வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 702 247 / 077 514 2074

## ஆன்மிகச் சொற்பொழிவு

சாவக்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புறுட்டை யன் பிள்ளையார்) ஆலயத் தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதர்சன் 'இந்து வாழ்வில் அறிவியல்' என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற் பொழிவு நிகழ்த்த வுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித் துள்ளார். (வ-9)

## மாத்தளை மனித எச்சங்களை பரிசோதிக்குமாறு கோரிக்கை

மாத்தளை வைத்திய சாலை வளாகத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு மீட்கப்பட்ட மனித எச்சங்களின் கால நிர்ணயத்தை மீண்டும் கணிப்பீடு செய்யஅனுமதிகோரப் படவுள்ளது.

இது தொடர்பான வழக் கில் பாதிக்கப்பட்ட வர்கள் தொடர்பில் முன்னிலையான சட் டத்தரணி சுனில் வட் டகலை இது குறித்து நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்க விருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக இந்த மனித எச்சங்கள்அமெ ரிக்காவில் சோத னைக்கு உட்படுத்தப் பட்டிருந்தது. அதன் போது இவை 1951 ஆம் ஆண்டுக்கு முற் பட்டவைஎன்றுகணிப் பிடப்பட்டு. நீதிமன் றத்தில் அறிக்கைப் படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தக் கணிப்பீட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என் றும்- அதனை மீண் டும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும்அவர்கோரிக்கை விடுக்கவுள்ளார். (ற)

## செவிப்புலன் உபகரணத்தை இலவசமாகப் பெறலாம்

யாழ்ப்பாணம், நவ.20

போர்ப் பாதிப்பாலும் வறுமை காரணமாகவும் செவிப்புலன் இயந்திரத்தை கொள்முதல் செய்ய முடியாதுள்ள உறவுக ளுக்கு அதனை இலவசமாக வழங்க யாழ்ப்பாண றோட்ட றிக் கழகம் முன்வந்துள்ளது. குறித்த உபகரணம் தேவைப் படுவோர் உரிய மருத்துவச் சான்றிதழ்களை யாழ்ப்பாண றோட்டறிக் கழக அலுவலகம், இல.359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவ ரியில் பதிவு செய்து கொள்ளு மாறு யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினர் கேட்டுக் கொண் டுள்ளனர். (வ)

## கண்ணீர்க் காணிக்கை



எமது **கல்வியியற் கல்லூரியின்** விரிவுரையாளர் **ந.ஞானவேல்** அவர்களின் அருமை மாமி

ஸ்ரீமதி
**பத்மாசினி சிவபாதசுந்தரம்**
**(118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)**

அவர்கள் 16.11.2014 அன்று சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன், அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்ினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் வித்தக விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

கல்வியியற் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய். (54400)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணரட்ணம் தேவதாசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



உடுவில் லவ்லேனைப் பிறப்பிடமாகவும், ''கானான்'' நெளுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ண ரட்ணம் தேவதாசன் 27.10.2014 லண்டனில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் உடுவிலைச்சேர்ந்த காலஞ்சென்ற வர்களான சபாரட்ணம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மகளும், நெளுக்குளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க் கண்டு (கோபு) மற்றும் திரேசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அருட்திரு மார்க்கண்டு தேவதாசன் (போதகர்) அவர்களின் மனைவியும் லோறல் ஆதவன், சாமுவேல் மதிருபன் ஆகியோரின் தாயும், றொசானியின் மாமியும், ஆரணன், ஆதித்தன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.


அன்னாரது அஞ்சலி நிகழ்வு நாளை (21.11.2014) வெள்ளிக்கிழமை அவரின் நெளுக்குளம் இல்லத்தில் பிற்பகல் ஒருமணிக்கு இடம்பெற்று பூதவுடல் வவுனியா குடியிருப்பு அமெரிக்க இலங்கை மிஷன் புனித பேதுரு ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இறுதி ஆராதனையைத் தொடர்ந்து நெளுக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''கானான்''
நேரியகுளம் வீதி,
நெளுக்குளம், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.
077 154 6868
(52197) (45.6.3)

# 3 மாதங்களில் 533 பேர் காயங்களுக்குச் சிகிச்சை

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்



தென்மராட்சி, நவ.20
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களில் வீதி விபத்துக்கள், உயரத்திலிருந்து வீழ்ந்து பாதிப்பு, தாக்குதல்கள், விலங்குகளால் கடிப்பட்டமை, நஞ்சுத் திரவகம் அருந்தியமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 267 பெண்கள் உட்பட 533 பேர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றதாக மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் வீதி விபத்துக்களில் 43 பெண்கள் உட்பட 124 பேரும், உயரத்திலிருந்து வீழ்ந்து 86 பெண்கள் உட்பட 165 பேரும், தாக்குதல் சம்பவங்களில் 39 பெண்கள் உட்பட 98 பேரும், விலங்குகளால் கடியுண்ட 64 பெண்கள் உட்பட 115 பேரும், நஞ்சுத் திராவகம் அருந்திய 15 பெண்கள் உட்பட 31 பேரும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் மாத ரீதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள், தாக்குதல் சம்பவங்கள், ம்ரத்திலிருந்து வீழ்ந்தமை என்பவற்றால் பாதிக்கப்பட்ட ஆண்களில் பெரும்பாலானோர் மது அருந்திய நிலையில் அத்தகைய பாதிப்புக்களுக்கு ஆளானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்துக்கள், தாக்குதல் போன்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மதுபோதையில் இருந்தமை மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பலர் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை என்று செய்திக் குறிப்பை பார்வையிட்டோர் தெரிவித்தனர். (வ-9)

# புலமைச் சித்திபெற்ற மாணவருக்கு கௌரவம்



வவுனியா, நவ.20
வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்தில் இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 8 பேர் சித்தி பெற்றிருந்தனர். அவர்களுக்கான பாராட்டு விழா நேற்று முன்தினம் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா கோவில்குளம் இளைஞர் கழகத்தின் கிராம பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுடன், பரீட்சையில் தோற்றிய மாணவர்களும் - கோவில்குளம் இளைஞர் கழகத்தின் அமெரிக்க கிளையின் அனுசரணையில் கௌரவிக்கப்பட்டனர். கோவில்குளம் இளைஞர் கழகத்தின் தாபகரின் மகளான செல்வி சுவர்ணா சந்திரகுலசிங்கத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வுகள் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டன.

வித்தியாலய சமூகத்தின் ஒன்றிணைவில் வித்தியாலய அதிபர் சி.வரதராஜா தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவின் பிரதம அதிதியாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், நிகழ்வின் சிறப்பு அதிதியாக வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகரபிதாவும், கோவில்குளம் இளைஞர் கழகத்தின் தாபகருமான க.சந்திரகுலசிங்கம், சிதம்பரபுர பிரதேச மருத்துவமனையின் வைத்திய கலாநிதி எஸ். சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் செல்வி யோ.கோகிலா (180), செல்வன் அ.கோவாஸ் (180), செல்வி அ.யதுசா (174), செல்வி அ.தர்சிகா (173), செல்வி சி.டென்சிகா (172), செல்வன் உ.நிவேதன் (167), செல்வி யோ.நிரோசா (161), செல்வி சி.டிலுசிகா (151) ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கோவில்குளம் இளைஞர் கழக நிர்வாகிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-402)

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விற்பனை வாகனத்தில் வேலை செய்வதற்கு திறமையும், நேர்மையும் உள்ள காசாளர், பொருள்கள் வழங்குபவர் தேவை.
* தங்குமிடவசதி இலவசம்
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

விளம்பர இல-5030
மே/பா உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(54383) (4.6.3)

## இடமாற்றம்

டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்
(C/17542) (7.6.3)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

## கந்தபுராணம் படித்து பொருள் கூறல்

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் இந்த மாதம் தொடக்கம் கந்தபுராணச் செய்யுள் முழுவதும் படித்து பொருள் கூறும் புராண படனம் ஆரம்பமாகி தினமும் பிற்பகல் இரண்டு மணிமுதல் ஐந்துமணி வரை நடைபெற்று வருகின்றது. இப்படிப்பு மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும். உரையாசிரியர்களாக சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் உரை கூறி வருகின்றனர். எதிர்வரும் ஜனவரி மாதம் படிப்பு முடிவின் போது கந்தபுராண ஏடுகளைத் தேரில் வைத்து வீதியுலா வருதல் இடம் பெறும். (வ-28)

## படுக்கையில் தீண்டியது பாம்பு

படுக்கையில் வைத்து நபரொருவரைத் தீண்டிய பாம்பு அவரது காலைச் சுற்றியபடி இருந்தது. இந்தச் சம்பவம் திங்கட்கிழமை அதிகாலை மட்டுவில் சிவன் கோவிலடியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கதிர்காமச் சந்திரன் வினோத் (வயது- 22) என்பவரது காலைச் சுற்றிய பாம்பைப் பிடித்து போத்தலில் அடைத்துக் கொண்டு பாம்பினால் கடியுண்டவரை சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு வந்த போது ஆரம்பச் சிகிச்சைக்குப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை
### வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2015

சபையானது 2015ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

I பொருள்கள்
01. காகிதாதிகள் எழுது பொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. துணி வகைகள்
05. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள், கம்பி வகைகள், கொங்கிறிட் தூண்கள், சிமெந்து கற்கள்)
06. கற்கள், மணல், கிரவல்
07. தீந்தைகள் வகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைப்புக்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
10. மின் வழங்கும் பொருள்கள், மின் பாவனைப் பொருள்கள்
11. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்புப் பொருள்கள்
13. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
14. பனை மரங்கள், சலாகைகள்
15. வாகனங்களுக்கான ரயர், ரியூப், மற்றும் மின் கலங்கள்
16. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
18. பாதணிகள், தோற்பொருள்கள்
19. அலங்காரப் பொருள்கள்
20. இலத்திரனியல் பொருள்கள்

II சேவைகள்
01. அச்சிடுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. மின் சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
06. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கோலவுடை தைத்தல்
09. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்

III ஒப்பந்த வேலைகள் (ICT AD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)
01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண / திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களைச் சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1140.00 (வரிகள் உட்பட) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2015 எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் தலைவர், தலைமை அலுவலகம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 20.12.2015ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
024 222 5737 அல்லது 024 205 0067
எனும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வவுனியா தெற்கு
தமிழ் பிரதேச சபை.
(சி17764)(12.3.6)

## HNB அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

### ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி, வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா, நானாட்டான்

ஆகிய கிளைகளில் 28.10.2013இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 24.11.2014 தொடக்கம் 28.11.2014 (திங்கள் - வெள்ளி) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 06.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி17760) (12.3)
- ஹற்றன் நஷனல் வங்கி -

## வேலை வாய்ப்புக்கள்

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் அதியுயர் சம்பளத்துடன் கீழ் காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Work | Qty | Salary (QR) |
|---|---|---|
| Senior Technical Officer (Civil) | 03 | 5000+OT |
| Senior Technical Officer (Mechanic) | 03 | 5000+OT |
| Senior Technical (Electrical) | 10 | 5000+OT |
| Store Keeper | 05 | 3600+OT |
| Land Survivor | 05 | 3500+OT |
| Civil Forman | 03 | 3000+OT |
| Cleaning Supervisor | 05 | 2600+OT |
| Heavy Vehicle Driver (GCC Valid License) | 10 | 2407+OT |
| HV AC Mechanic | 10 | 1750+OT |
| Mechanical (Pump & Motor) | 10 | 1700+OT |
| Technichian | 10 | 1600+OT |
| Plumber (ITI Maintenance) | 10 | 1500+OT |
| Light Vehicle Drivers (GCC Valid License) | 05 | 1500+OT |
| Light Vehicle Drivers (First Time) | 05 | 1200+OT |
| Carpenter | 05 | 1500+OT |
| Meson | 10 | 1400+OT |
| Cleaning | 20 | 900+OT |

* உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
* கைவசம் வீசா உள்ளதால் 2 வாரத்தில் பயணம்.
* உங்கள் விண்ணப்பங்களை E-mail மூலமாக அனுப்பி வையுங்கள்.

E-mail Add: lankavoicenafees@gmail.com

எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நேர்முகப் பரீட்சை இடம்பெறும். நேரடியாகவும், உங்கள் விண்ணப்பங்களை கையளிக்க Lankavoice, இல.26/2, Station Road, Vavuniya.

Capital Recruitment International (Pvt) Ltd.
No.130 3/1, Grandpass, Colombo 14. LL No: 2248
Tel No: 077 792 9475
(சி17762) (12.3.6)

# அரச பணியிலிருந்து ஓய்வான 600 முதியவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20
அரச சேவையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களை ஒன்றிணைத்து ஒரு அமைப்பாகச் செயற்பட்டுவரும் மூத்த பிரஜைகள் அமைப்பானது 600 மூத்தோருக்கான கௌரவிப்பு நிகழ்வொன்றை நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியது.




இங்கு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், இந்த அமைப்புக்காக ஏராளமான நிதியைச் செலவிடத் திட்டமிட்டுள்ளேன். தேவை ஏற்பட்டால் ஜனாதிபதியிடம் விண்ணப்பித்து மேலதிக நிதியும் பெற ஏற்பாடு செய்யப்படும். மூத்த பிரஜைகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல அவர்களினது வாழ்க்கைத் துணைகளுக்கும் எதிர்வரும் காலங்களில் மருத்துவ நலன்சார் நடவடிக்கைகள் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும். மூக்குகண்ணாடி, சக்கர நாற்காலி போன்ற உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும். இம் மூத்த பிரஜைகள் அமைப்பின் உறுப்பினர்களுக்காக ஓர் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அந்த அடையாள அட்டையுடன் எந்த அரசதிணைக்களத்துக்கு சென்றாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் இருந்து 300 பேரும், தெல்லிப்பளை மூத்த பிரஜைகள் அமைப்பிலிருந்து 300 பேருமாக மொத்தம் 600 பேர் குறித்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன் தற்கால சமுதாயத்துக்கு மூத்தோர் எவ்வகையில் முன்மாதிரிகையாக இருக்கலாம் போன்ற விழிப்புணர்வு நாடகங்களும், கலாசாரம் சார்ந்த நாடகங்களும், ஆன்மீகச் சொற்பொழிவுகளும், அனைத்து மதம் சார்ந்த ஆசியுரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் குறித்த 600 மூத்தோருக்குமான இலவச தொற்றா நோய்த் தடுப்பு வைத்திய முகாம்கள் இடம்பெற்றதுடன் அவர்களுக்கான தீர்வுகளும் இலவசமாக வழங்கப்பட்டதுடன் அனைவருக்கும் நினைவுப்பரிசாக மரக்கன்றுகளும் பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன. (த-ரி)

# சமளங்குளம் பாலத்தை புனரமைக்க கோரிக்கை

வவுனியா, நவ.20
வவுனியா சமளங்குளம் பாலத்தைப் புனரமைக்குமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வவுனியா நகரிருந்து 5 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள சமளங்குளம் பாலத்தின் ஊடாகச் சிதம்பரம், கோமராசங்குளம், முருகனூர், சமளங்குளம் மக்கள் மற்றும் முருகனூர் பாடசாலை, கோமராசங்களம் பாடசாலை, சமளங்குளம் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பாதையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மழை காலத்தில் வெள்ளநீர் இந்தப் பாலத்தை மேவிப் பாய்வதால் மாணவர்கள், வயோதிபர்கள் உட்படப் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் விரைவில் இந்தப் பாலத்தைப் புனரமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப் பகுதி மக்களும், இந்த வீதியை பயன்படுத்துவோரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# மலையக மக்கள் மத்தியிலும் திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு

## சபையில் சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.20
வடக்கில் இடம்பெயர்ந்து செட்டிகுளம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களைப் போன்று மீரியபெத்த மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் கஷ்டப்படுகின்றனர் என நேற்றுச் சபையில் கவலை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற' உறுப்பினர் எஸ்.சிறிதரன், மலையக மக்கள் மத்தியிலும் திட்டமிடப்பட்ட இனச் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஓரங்கட்டப்பட்ட வறுமைப்பட்ட மக்களே இடரால் பாதிக்கப்படுவது பொதுவாகக் காணப்படுகின்றது. இடதுசாரி சங்கங்களை ஆதரிப்போர், தமிழ் மக்கள், இந்திய வம்சாவளியினர் என்ற 3 வழிகளில் மலையகத் தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். இப்படியானதொரு நிலைமை மலையக மக்களைத் தவிர உலகில் வேறு எங்கும் கிடையா.

அதுமட்டுமல்லாது, இந்த மண் சரிவு இடரில் எத்தனை பேர் உயிரிழந்தனர், எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை என எந்த விடயம் பற்றியும் இதுவரை சரியான விவரங்கள் கண்டறியப்படவில்லை. மீரியபெத்த மண்சரிவில் 200இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் அகதி வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மக்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவந்த பிரித்தானிய அரசும் அவர்களை அனுப்ப அனுமதித்த இந்திய அரசும் அதே போல் இந்த மக்களை இன்னும் கூலிகளாக வைத்திருக்கும் இலங்கை அரசும் தான் மலையக மக்களின் இன்றைய இந்த நிலைமைக்குக் காரணமாகும்.

உண்மையில் மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் இனச் சுத்திகரிப்புப் போன்று நடக்கின்றது. அண்மையில் ஏற்பட்டது இயற்கை இடர் என்பதை விடவும், மலையக மக்களின் அவல வாழ்க்கையையும் அவர்கள் படும் கஷ்டத்தையும் வெளி உலகுக்கு எடுத்துக்காட்ட இறைவனால் வழங்கப்பட்ட சிறந்ததொரு வாய்ப்பாகக் குறிப்பிடவேண்டும்.

நாம் நேரில் சென்று பார்வையிட்டோம். மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் 3 தினங்களாகக் குளிக்காமல் வெளியே சென்றால் அவர்கள் தங்கியிருக்கும் முகாமுக்குள் திரும்பி வர முடியாத நிலையில் இருக்கின்றனர். வடக்கில் இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்களும் இவ்வாறுதான் செட்டிக்குளம் முகாமில் வெளியில் சென்றால் திரும்பிவர முடியாத நிலையில் இருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட அந்த மக்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

தமிழ் மக்கள் என்ற வகையில் இவர்களுக்கு கௌரவமான பாதுகாப்பு அவசியம். அந்த மக்களுக்கு கௌரவமான வாழ்க்கைச் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். இதில் நான் மலையகத் தலைமைகளைக் குறை கூறவில்லை. அவர்கள் தம்மால் முடிந்த முயற்சிகளைச் செய்கின்றனர் - என்றார். (த-சி)

# மல்லாவி மருத்துவமனையில் நடமாடும் மருத்துவ முகாம்

முல்லைதீவு, நவ.20
வைத்திய நிபுணத்துவ சேவைகளுடன் கூடிய நட மாடும் மருத்துவமுகாம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையால் நடத்தப்படும் நடமாடும் மருத்துவ முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மல்லாவி ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

நடமாடும் மருத்துவ முகாமில் மகப்பேற்று மருத்துவம், பொது மருத்துவம், குழந்தை நல மருத்துவம், என்பு முறிவு சிகிச்சை, கண்சிகிச்சை, பல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மற்றும் ஆய்வுகூடச் சோதனைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

பொதுமக்களின் நலன்கருதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் இலவச போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தலைக் கவசம் திருட முயன்றவர் சிக்கினார்

தென்மராட்சி பிரதேச நிலைய உத்தியோகத்தர் வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த தலைக்கவசத்தை திருடிச்செல்ல முயன்ற ஒருவர் வசமாக மாட்டிக் கொண்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த பாதுகாப்பு நிலையத்தில் விடப்படும் மோட்டார் சைக்கிளில் வைக்கப்படும் தலைக் கவசங்கள் அடிக்கடி இனந் தெரியாதோரால் திருடப்பட்டு வந்துள்ளன. நேற்று முன்தினம் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் நடமாடியதைக் கண்ட உத்தியோகத்தர் அங்குள்ள கழிப்பறைக் கட்டடத்தினுள் மறைந்திருந்து பார்த்தபோது ஒருவர் அங்கிருந்த தலைக் கவசம் ஒன்றை எடுத்துச் செல்வதைக் கண்டு அவரைக் கையும்மெய்யுமாகப் பிடித்துள்ளார்.

இந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




உடுவில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
பேனாட் ஜெதா தம்பதிகளின்
செல்வப்புதல்வன் செமிலோன்
அவர்களைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல சித்திகளைப் பெற்று கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:
குணம் பெரியப்பா குடும்பத்தினர்
மல்வம் உடுவில், சுன்னாகம்.

## 10 ஆவது பிறந்தநாள் நல்வாழ்த்தும் புலமைப் பரீட்சை பாராட்டும்




இன்றைய தினம் (20.11.2014) பிறந்தநாளைக் கொண்டாடும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த
பற்பநாதன் சாரதாதேவி
அவர்களின் அன்புப் பேர்த்தி
ஜெயசீலன் ஜெளசி
தம்பதியினரின்
செல்வப்புதல்வி
ஜெயசீலன் சானுஜா
2014 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்ற அவர்களைப் பாராட்டி பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மம்மா, மாமா, மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சகோதரங்கள், மச்சான், மச்சாள்.
ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு.

## நாஹா மருத்துவ நிலையம்

அறிவு செயலிழந்த பாரிச வாதம், ஆஸ்மா, தீராத புண்கள், மூட்டு வாதம், இருதய நோய், குழந்தையின்மைக்கான அற்புத சிகிச்சை முறை.
தொடர்பு: 077 321 2740
வங்கி முன்லேன், சத்தாவத்தை வைரவர் கோயிலடி, மானிப்பாய். (ஜெகபதி வீடு)

## தவறிவிட்டது

விஜயகுமார் திவ்யா ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம் வவுனியா, கல்வியியற் கல்லூரி அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம், என்பவை கைதடி- மானிப்பாய் வீதியில், உரும்பிராய்ச் சந்திக்கும் கைதடிச் சந்திக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளன. கண்டெடுத்தோர் உரும்பிராய் வடக்கு சந்திரன் கடை அல்லது 077 353 8828 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவவும்.

## மணமகன் தேவை

1981, சுவாதி 3ஆம் பாதம், 67 பாவம், 7 இல் செவ்வாய், உள்ள யாழ்.இந்து கௌரவ MBBS டாக்டர் மகளுக்கு சாதக பொருத்தமுள்ள டாக்டர் மற்றும் தகுதி வாய்ந்த மணமகன் தேவை.
தொடர்பு: 021 222 4696




வவுனியா மகிழன்குளம் பிரதான பாதையில் அமைந்துள்ள பலம் சேதம் அடைந்து விபத் துக் களை ஏற்படுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்றது. இந்த இடத்தை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் த.ன் சூரியராஜர் பார்வையிட்டார். (த-421)

# சமூகச் சுகாதாரப் பணியாளர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

## தமது நிரந்தர நியமனம் குறித்து அதிகாரிகள் அக்கறையற்று உள்ளதாகக் குற்றஞ்சாட்டி

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்ட சமூக சுகாதாரப் பணியாளர்கள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நிரந்தர நியமனத்துக்கான சுற்றறிக்கை வெளிவந்த போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், இது தொடர்பாக யாரும் தங்களைக்கண்டு கொள்ளவில்லை என்றும் தெரிவித்தே, குறித்த பணியாளர்கள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.



தமது போராட்டம் குறித்து அவர்கள் தெரிவிக்கையில்,

15 வருடமாகச் சுகாதாரத் தொண்டர்களாக எங்களை அர்ப்பணித்து எந்த ஒரு கொடுப்பனவும் இல்லாமல், லீவும் எடுக்காமல் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குக் கீழ் வேலை செய்து வருகிறோம். எங்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கும். இதற்கு பிறகு நாங்கள் சந்தோஷமாக வாழ்வோம் என்ற நம்பிக்கையில் தான் இருந்தோம். ஆனால் அது இன்றைக்கு நிராசைகளாகப் போய்விட்டது. இப்போது நாங்கள் ஒரு புறஜெக்ருக்கு கீழே தான் வேலை செய்கின்றோமாம். அரசின் ஒப்பந்தத்துக்கு கீழே இல்லையாம். சுகாதார வைத்திய அதிகாரி சொன்ன வேலை அனைத்தையும் நாங்கள் செய்துள்ளோம். அப்படியானால் சுகாதார வைத்திய அதிகாரி ஒரு அரச அதிகாரி இல்லையா?

நாங்கள் உண்மையிலேயே வறுமைபட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு 5,6 வயதுகளில் பிள்ளைகளும் உள்ளனர். எங்கள் குடும்ப நிலையைக் கருத்தில் கொள்ளாமல் கஷ்டத்தை நினைத்துத்தான் இந்த வேலைக்கு வந்தோம். எங்களுக்கு 6 ஆயிரம் ரூபா சம்பளம் 2012 ஆம் ஆண்டில் இருந்து தருகிறார்கள். இது எப்படிப் போதும்? -என்றனர். சமூக சுகாதாரப் பணியாளர்களில் நிரந்தர நியமனம் இல்லாமல் 250 ஊழியர்கள் இன்னும் இருப்பதாக அவர்கள் கூறினர். (த-21)

# மழை வேண்டி அம்பாள் உலா

சாவகச்சேரி, நவ.20

தச்சன்தோப்பு வேலம்பிராய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சியின் தெற்குப் பகுதியில் மழை வேண்டி அம்பாள் வீதி உலா கும்பவடிவில் கிராம தரிசனம் இடம்பெற்றது.

இந்தகும்பவிழாவைத்தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை அந்தப் பகுதியில் பெரு மழை பெய்தது.

தென்மராட்சியின் தெற்குப் பகுதியான தனங்களப்பு, மறவன்புலவு, தச்சன்தோப்பு, நாவற்குழி, வேலம்பிராய் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விளை நிலங்களில் பயிரிட்ட நெற்பயிர்கள் கடந்த நாள்களில் எரிந்து கருகும் நிலையில் காணப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒன்று சேர்ந்து மழை பெய்ய வேண்டுமென வேண்டி வேலம்பிராய் அம்மன் ஆலயத்தில் ஆலய குரு கணேசக் குருக்கள் தலைமையில் அம்பாளை கும்பத்தில் ஏற்றி கிராமங்கள் தோறும் மங்கள வாத்தியம், தோவாரப் பாடல்களுடன் வீதி உலாவாகக் கொண்டு வந்தனர். வீதிகளில் பொது மக்கள் பூரண கும்பம் வைத்து அர்ச்சனை செய்து வழிபாடு செய்தனர். பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்ட வீதி உலா அடுத்த நாள் அதிகாலை 3.30 மணி வரை நீண்ட தூரம் இடம்பெற்று ஆலயத்தை அடைந்தது. அம்பாள் வீதி உலா வரும் வேளையிலேயே மழை பெய்யத் தொடங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை பெரு மழை பெய்தது. மக்கள் சந்தோஷமடைந்த நிலையில் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்த வீதி உலாவில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை பெய்த மழையைத் தொடர்ந்து வயல்களில் நீர் தேங்கியுள்ளது.

விவசாயிகள் உரம் இடல், களை பிடுங்குதலில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. இந்தக் கிராம வீதி உலா சுமார் 40 வருடங்களின் பின்னர் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-131)

# விதை உருளைக்கிழங்கில் 50 வீதமானவை விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்குச் செய்கையாளர் மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் தருவிக்கப்பட்ட விதை கிழங்கில் 50 வீதமானவை உரிய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

விதை கிழக்குக்காகச் சமாசத்துக்கு விண்ணப்பித்த விவசாயிகள் இந்த விதை கிழங்கை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளுமாறு சமாசத் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விதை கிழங்கைப் பெற்ற விவசாயிகள் செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக தமது விவசாய நிலங்களைச் சீர் செய்து வருகின்றனர். தற்போது மழையின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் செய்கையை உடன் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தச் செய்கையை இந்த மாத இறுதியில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (த-17)



*இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் கெய்ன்ஸ் வோல்கர் நெடர்கோர்ன் நேற்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் வடக்கு மாகாண சபை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டது.* (த-106)

# முற்றவெளியில் குற்றங்களை தடுப்பதற்கு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்.முற்றவெளி பிரதேசத்தில் குற்றச் செயல்கள் எதுவும் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணித்துக் கண்டு அறிவதில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கோட்டை முனீஸ்வரர் கோயிலடி, தனியார் பஸ் தரிப்பு நிலையம், பண்ணை சுற்றுவட்டம் போன்ற பகுதிகளில் குற்றச் செயல்கள் எதுவும் நடக்கின்றனவா? என்பதை கண்காணித்துக் கண்டறிந்து இதில் ஈடுபடுவோரைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதில் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் இளைஞர்கள் மது அருந்துவது மற்றும் போதைப் பொருளை மறைமுகமாக விற்பனை செய்யப்படுவது போன்ற குற்றச் செயல்களை முறியடிக்கும் வகையில் பொலிஸாரின் கண்காணிப்புப் பணிகள் கடந்த இரண்டு நாள்களாக தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (த-17)

# புதிய பஸ் சேவை ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ. 20

காரைநகர் பகுதியில் இருந்து ஆரம்பித்து மூளாய் டச்சு வீதி ஊடாகச் செல்வா வாசிக சாலைப் பகுதி - தொல்புரம் பத்தானைக் கேணியடிப் பகுதி - இலுப்பையடிச் சந்தி - வட்டு இந்துக் கல்லூரி - மாவடிச் சந்தி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சந்தி - செட்டியர்மடம் ஊடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் பஸ் சேவை கடந்த 15ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் இதனை ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பகுதியில் உள்ள பல சமூக அமைப்புக்கள் இந்த வீதி ஊடாகப் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இந்நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஊடாக 2012 ஆம் ஆண்டு வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் கோரிக்கை முன் வைத்திருந்தார். இதன் பின்னர் தற்போது வட்டு வடக்கு கற்பகச் சோலை நன்மை விருத்திச் சங்கம், கற்பகச்சோலை சனசமூக நிலையம் மற்றும் செல்வா வாசிகசாலை என்பனவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போக்குவரத்துச் சேவை மீண்டும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தினமும் இந்தப் பகுதியூடாக 6 சேவைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

# மோ.சைக்கிள் விபத்துக்களே குடாநாட்டில் அதிகம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் விபத்துக்களில் 80 முதல் 90 வீதமானவை மோட்டார் சைக்கிள்கள் மூலமாகவே இடம்பெறுகின்றன. விபத்தினால் காயப்படுபவர்களில் சுமார் 60 வீதமானவர்கள் 30 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களே. போதனா வைத்தியசாலையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு எந்நாளும் நிரம்பிய நிலையிலேயே உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

வீதி விபத்துக்களால் ஏற்படும் இறப்புகளையும்பாதிப்புக்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ்.மருத்துவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வூட்டும் செய்தியாளர் சந்திப்பு, யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட மருத்துவர்களே இவ்வாறு தெரிவித்தனர்.

அதில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வீதிகளில் தாம் ஏனையவர்களை முந்திச் செல்லவேண்டும் என்று சிறு பிள்ளைத்தனமாகச் சிந்தித்து ஓடுகின்றனர். அவ்வாறான சிறு பிள்ளைத் தனமான செயற்பாட்டினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் வைத்தியசாலைகளில் விபத்து நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.

தலைக் கவசம் அணியாது வீட்டிலிருந்து புறப்படவேண்டாம். பாடசாலைகளுக்குப் பிள்ளையை ஏற்றிச் செல்ல முற்படும் தந்தை தலைக்கவசம் அணியாது உங்களை ஏற்றிச் செல்ல முற்பட்டால் பயமாக இருக்கிறது, வரமாட்டேன் என்று பிள்ளைகள் மறுத்து தலைக்கவசம் அணிந்து செல்லத் தூண்டவேண்டும். குடும்பப் பெண்களும் அதனைக் கட்டாயம் வலியுறுத்த வேண்டும். ஆடைகள் விடயத்தில் கவனம் தேவை. பெண்கள் உரிய ஆடைகளை அணிந்து செல்லவேண்டும்.

விபத்துக்களால் முள்ளந்தண்டு நிரந்தரப் பாதிப்பு ஏற்பட்டவர்களைக் காண முடிகிறது. அது ஈடு செய்ய முடியாத இழப்பாக உள்ளது. பாதசாரிக் கடவைகளை அண்மித்து வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட வேண்டும். யாழ். போதனா வைத்தியசாலை பழைய வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக உள்ள மஞ்சள் கடவையை அண்மித்து தினமும் ஓட்டோக்கள் நிறுத்தப்படுகின்றன. அவற்றால் மஞ்சள் கடவையால் கடப்பவர்களை, வாகனத்தில் செல்பவர்களால் அவதானிக்க முடியவில்லை. அந்த இடம் உட்பட பல இடங்களிலும் அவ்வாறு உள்ளதை மாற்றியமைக்க வேண்டும்.

விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அனைவரும் இணைந்து செய்யக் கூடியதான பொறிமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

விபத்துக்களில் அகப்படுவோரில் சுமார் 60 வீதமானவர்கள் 30 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். விபத்துக்களில் காயப்படுவோர் அறிவில்லாது - கோமா நிலையில் 3 தொடக்கம் 6 மாதங்கள் வரையில் வைத்தியசாலைகளில் கிடக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. விபத்துக்களால் முள்ளந்தண்டு பாதிப்பு ஏற்படல், தலை, முகம் பாதிக்கப்படல், எலும்புகள் முறிவடைதல், நரம்புகள் பாதிக்கப்படல் ஏற்படுகின்றன. விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து காயப்பட்டவர்களை உரிய முறைப்படி வைத்திய சாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அது பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் -என்று தெரிவித்தனர்.

யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மருத்துவர்களான கோபிசங்கர், ரவிராஜ், தயாளன் அம்பலவாணர், சுரேந்திரகுமாரன், மயூரதன் மற்றும் யாழ். போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-4)

## வவுனியா மாணவருக்கு காலணிகள்

வவுனியா, நவ. 20
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய சப்பாத்துக்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் நேற்று முன்தினம் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட 40க்கு மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 2,000க்கும் மேற்பட்ட சப்பாத்துக்கள் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.
ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஏற்கனவே அரசினால் வழங்கப்படும் நிலையில் வவுனியா மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் சப்பாத்துக்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதிபர்களினால் சப்பாத்துக்கள் இந்த வாரம் மாணவர்களிடம் வழங்கப்படவுள்ளன. (த-402)



வீதிகளில் இப்போது மோட்டார் சைக்கிள் ஓட்டும் யாரும் தலைக்கவசம் இன்றிப் பயணிக்க முடியாது. அவ்வாறு பயணிக்கும் ஒரு சிலரையும் ஒரு நொடிக்குள் கலைத்துப் பிடித்துவிடுவர் போக்குவரத்துப் பொலிஸார். ஆயினும் இந்தப் படத்தில் நீங்கள் பார்ப்பதோ மேற் சொன்ன விடயத்துக்கு முற்றிலும் மாறானது. பொலிஸார் ஒருவரே தனது மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணியாத ஒருவரை ஏற்றிச் செல்கிறார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி நீதிமன்றுக்கு முன்பாக இடம்பெற்றது. சாதாரண மக்கள் செய்தால் குற்றம். சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் செய்தால் அது குற்றமில்லையா? என்று முணுமுணுத்தனர் அங்கிருந்த மக்கள். (த)

## சாதனை படைத்த மாணவருக்கு மன்னாரில் கௌரவிப்பு நிகழ்வு



மன்னார், நவ. 20
மன்னார் மாவட்டத்தில் கல்வியில் சாதனை படைத்து மன்னார் மாவட்டத்துக்கு அகில இலங்கை ரீதியில் புகழ் ஈட்டித்தந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி மன்னார் சித்திவிநாயகர் பாடசாலையில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சியான் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். (த-18)

# அடிப்படை வசதிகள் கோரி மன்னாரில் நேற்றுப் பேரணி

### மக்கள் பிரதிநிதிகளை நேரில் சந்திக்க மறுத்தார் அரச அதிபர்



மன்னார், நவ. 20
மன்னார் நகரசபைக்குட்பட்ட பல கிராமங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் உட்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனக் குறித்த கிராம மக்கள் பலமுறை மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தபோதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு எதுவும் இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து நேற்றுப் புதன்கிழமை எதிர்ப்புப் பேரணி ஒன்று நடைபெற்றது.
குறிப்பாக சாந்திபுரம், ஜிம்றோன் நகர், ஜீவபுரம், உப்புக்குளம், எமில் நகர், பள்ளிமுனை ஆகிய கிராமங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் மற்றும் அடிப்படை வழங்கப்படாமையைக் கண்டித்தே இந்தப் பேரணி இடம்பெற்றது.
இந்தப் பேரணியை வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர் ஒத்துழைப்புப் பேரவை, நேசக்கரம் பிரசைகள் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.
இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மன்னார் பொது விளையாட்டு மைதானத்துக்கு முன்னாக ஆரம்பமாகி புனித செபஸ்ரியார் வீதி வழியாக மன்னார் பிரதான நகரத்தை அடைந்து- மன்னார் மாவட்ட செயலகத்துக்குச் சென்றது. இதன்போது மக்கள் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.
அரச அதிபரிடம் மனு ஒன்று கையளிக்கவுள்ளதாக நேற்று முன்தினம் கண்டனப் பேரணி ஏற்பாட்டுக் குழு அனுமதியைப் பெற்றிருந்தது. அதன்படி ஒவ்வொரு கிராமங்களில் இருந்தும் ஒரு பிரதிநிதி அரச அதிபரைச் சந்தித்துப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி ஆறு பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் நேற்று மன்னார் அரச அதிபர் அந்தப் பிரதிநிதிகளில் இருவரை மட்டுமே சந்திக்க அனுமதி வழங்கினார். இதன்படி இரண்டு பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கான மனுவை அரச அதிபரிடம் வழங்கினர். அதனைப் பெற்று கொண்ட அரச அதிபர் குறித்த இரு பிரதிநிதிகளுடனும் கலந்துரையாட மறுத்ததுடன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்ளவும் முயற்சிக்கவில்லை. இதனால் சற்று நேரம் அந்தப் பகுதியில் சலசலப்பு ஏற்பட்டது.
எனினும் அரச அதிபரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து மக்கள் அனைவரும் மாவட்ட செயலாளருடைய அலுவலகத்தின் முன் அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன். மாவட்ட செயலாளர் வெளியில் வந்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.
எனினும் சுமார் ஒரு மணித்தியாலம் ஆகியும் அவர் வெளியில் வரவில்லை. இதனை அடுத்து மக்கள் மனவருத்தத்துடன் மன்னார் நகரசபைக்கு ஊர்வலமாக சென்று- அங்கு நகரசபையின் தலைவர் எஸ்.ஞானபிரகாசத்திடம் பிறிதொரு மனுவைக் கையளித்தனர். (த)

## வவுனியாவில் வீடு தீக்கிரை



வவுனியா, நவ. ,20
வவுனியாவில் பொன்னாவரசங் குளம் பகுதியில் வீடு ஒன்று கடந்த 17ஆம் திகதி தீக்கிரையாகியுள்ளது என வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
கடந்த 17ஆம் திகதி இரவு வவுனியா பொன்னாவரசங்குளம் பகுதியில் வீடு ஒன்று தீக்கிரையாகியுள்ளது எனக் கிடைத்த தகவலை அடுத்து அந்த இடத்துக்குச் சென்றபோது வீடு முற்றாகத் தீக்கிரையாகியுள்ளதுடன் அங்கிருந்த முக்கிய ஆவணங்களும் தீயில் சாம்பலாகின. இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சூரியராஜா தெரிவித்தார். (த-421)

## வவுனியாவில் மின்னல் தாக்கிப் பெண் படுகாயம்

வவுனியா, நவ. 20
வவுனியா பொன்னாவரசங்குளப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை மின்னல் தாக்கியதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்
வவுனியாவில் இடியுடன் கூடிய மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் வவுனியா பொன்னாவரசங்குளப் பகுதியில் மினனல் தாக்கியது. இதனால் எஸ். பாக்கியம் (வயது-50) என்பவர் படுகாயமடைந்தார். உடனே இவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இவரது குடும்பத்தில் உள்ள ஏனையோர் மன்னாருக்குச் சென்றமையால் மின்னல் பாதிப்பிலிருந்து தப்பினர்.
இந்தச் சம்பவத்தையடுத்து மின்னல் தாக்கிய இடத்தை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் பார்வையிட்டனர். (த-402)

# வவுனியா மாவட்டத்தில் சர்வதேச மாணவர் தினம்

சர்வதேச மாணவர் தினம் கடந்த 17 ஆம் திகதி தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தில் அதிபர் சி.வரதராஜா தலைமையில் இடம் பெற்றது .
இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் இமயவன், சர்மிலன் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள் வே.தயானந்தன், க.மதியழகன் ஆகியோருடன் மாணவர்களும் கலந்து கொண்டனர்.
ஆண்டுஒன்றுதொடக்கம்ஆண்டு 11 வரையான தந்தை, தாய் மற்றும் இருவரையும் இழந்த 28 பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்கள் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.
கற்றல்உபகரணங்களைவழங்கிய தமிழ் விருட்சம், சமூக ஆர்வலர்கள் அமைப்புக்கு நன்றியைத்தெரிவித்துக் கொண்ட அதிபர், எமது பாட சாலையில் அதிகளவான மாணவர்கள் கஷ்டப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளாக இருப்பதால் அவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், பாதணிகள் என்பவற்றை முடிந்தவரைபெற்றுக் கொடுப்பதாகவும், அவர்களுக்கு குறைந்தபட்சம் செருப்புகளைப்பெற்றுக் கொடுக்கத்தான் முயற்சிசெய்து வருவதாகவும், அந்த வறிய பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவக் கூடியவர்கள் உதவ வேண்டும் என்றும்- கேட்டுக்கொண்டார். (த-421)

20 NOV 2014






சர்வாதிகார ஆணவம் வேண்டாம் என்ற கோஷத்துடன், ஜே.வி.பியினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் பிரமாண்டமான பேரணி ஒன்றை நடத்தினர். ஜனநாயகத்துக்கான மக்கள் அமைப்புடன் இணைந்து ஜே.வி.பியினர் மேற்கொண்ட இந்தப் பேரணி மருதானை ஆனந்தாக் கல்லூரி அருகில் ஆரம்பித்து புறக்கோட்டை பரடைஸ் மைதானத்தில் முடிவடைந்தது. அதில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். இதன் காரணமாக மருதானை முதல் புறக்கோட்டை வரையான பாதைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. (ற)

# பூனைக்கு மணி கட்டி விட்டோம்

## எலிகளே விழிப்பாக இருங்கள் என்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, நவ.20

"பூனையிடம் இருந்து தப்பிப்பதற்கு அதன் கழுத்தில் மணி கட்டுவதே சிறந்த வழியென எலிகள் முடிவெடுத்தன. அதன்படி, மணியைக் கட்டுவதற்கு அவை தயாராகின். இந்த திட்டத்துக்கு அமைய ஓர் எலி பூனையின் கழுத்தில் மணி கட்டியது. ஆனால், பூனை 'மீயா' என்றதும் ஏனைய எலிகள் ஓடிவிட்டன.

இந்நிலைமையே இன்று ஹெல உறுமயவுக்கு ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு தெரிவித்தார் ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிப் பொதுச் செயலாளரான உதய கம்மன்பில.

ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைத் திட்டத்துக்கு அரசு பச்சைக்கொடி காட்டாததால், அரச கூட்டுக்குள் இருந்த அந்தக் கட்சி வெளியேறும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அது தொடர்பில் அந்தக் கட்சி இன்னமும் உறுதியான - இறுதியான முடிவை எடுக்கவில்லை. எனினும், தமது கொள்கைத் திட்டம் தொடர்பில் அரசு வழங்கிய பதில் திருப்தியாக இல்லாததால், அதற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அரசில் தாம் வகித்த பதவிகளை ஹெல உறுமய முழுமையாகத் துறந்துள்ளது. அந்தவகையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த உதயகம்மன்பில மேல் மாகாண சபையில் வகித்த அமைச்சுப் பதவியைத் துறந்திருந்தார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ஏனைய எலிகள் ஓடிவிட்டாலும், நாம் பின்வாங்கமாட்டோம். கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக போராடுவோம். வெளியே இருந்தாவது நிச்சயம் நடவடிக்கை எடுப்போம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## அமைச்சர்கள் ஊதாசீனம்; ஹந்துநெத்தி ஆதங்கம்

கொழும்பு, நவ.20

சிரேஷ்ட அமைச்சர்கள் உதாசீனம் செய்யப்படுகின்றனர் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான நாடாளுமன்ற குழு நிலை விவாதத்தில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதியின் பயணச் செலவுகளுக்காக 2 ஆயிரத்து500 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு 500 மில்லியன் ரூபா நிதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# சதி வலைக்குள் ஹெல உறுமய

## கவலைப்படுகிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு, நவ.20

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவைப் போன்று ஜாதிக ஹெல உறுமயக் கட்சியும் சதி வலையில் சிக்கியுள்ளது என்று கவலை வெளியிட்டுள்ளது தேசிய சுதந்திர முன்னணி.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"சரத் பொன்சேகாவின் கீர்த்தி நாமத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். அதன்பின்னர் அவர் தூக்கி எறியப்பட்டார். அதேபோன்றதொரு சதி வலையில் ஜாதிக ஹெல உறுமயவும் சிக்கியுள்ளது.

2005ஆம், 2010ஆம் ஆண்டை விடவும் பலமான ஆவேசம் கொண்ட எதிரிகளே இந்தச் சதி வலைகளை பின்னுகின்றனர். தேசிய அமைப்புக்களைத் தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சதியில் தேசியவாத சக்திகள் சிக்கிவிடக் கூடாது.

ஜாதிக ஹெல உறுமய எடுத்த தீர்மானத்தை மீளப் பெற்றுக் கொள்ள இன்னமும் காலம் இருக்கின்றது."- என்று தெரிவித்துள்ளார். (ற)



ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசில் தாம் வகித்த பதவிகளில் இருந்து நேற்றுமுன்தினம் வெளியேறியது. அதன் பின்னர் அந்தக் கட்சி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர்.


## ஆளும்கட்சியின் எம்.பி. தாவுகிறார் ஐ.தே.கவுக்கு

கொழும்பு, நவ.20

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க தாம் அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் இணைய உள்ளார் என்று தெரிவித்துள்ளார். இவர் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் பேரனாவார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட அவர், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தநிலையிலேயே அவர் சுதந்திர முன்னணியில் இருந்து விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

3ஆவது வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தாம் அரசுக்கு எதிராக வாக்களிக்கவும், அரசுக்கு எதிரான உரையொன்றை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)




நன்றி: டெய்லிமிரர்

## மூளை இருந்தால் முதுகெலும்பில்லை!

கொழும்பு, நவ.20

இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியுள்ளவர்கள் இருவரே உள்ளனர். அந்த இருவரும் எம்முடனே உள்ளனர் என்று கூறியுள்ளார் பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இன்றுள்ள வேட்பாளர்களுக்கு, தலையிருந்தால், முதுகெலும்பில்லை. முதுகெலும்புள்ளவர்களுக்கு தலையில்லை. எம்மிடமுள்ள இருவருக்கு மட்டுமே இந்த இரண்டும் உள்ளன"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பொது வேட்பாளராகக் களமிறங்குவதற்கு ரணிலே பொருத்தமானவர்

## ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா கருத்து



கொழும்பு, நவ.20

பொது வேட்பாளராகப் போட்டியிட மிகவும் தகுதியானவர் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என்று கூறியுள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.

தற்போதுள்ள அரசியல் தலைவர்களில் ரணில் விக்கிரமசிங்கவே அனுபவ முதிர்ச்சியும், திறமையும் கொண்டவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடக்கப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்;

"ரணில் பொருத்தமற்றவர் எனச் சிலர் குறிப்பிடுகின்ற போதிலும், என்னைப் பொறுத்தவரையில் ரணில் போட்டியிடுவதில் பிரச்சினையில்லை. பொது வேட்பாளர் அரசியல் அனுபவம் கொண்டவராகவும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நபராகவும் இருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து நாம் இதுவரையில் தீர்மானிக்கவில்லை.

வலுவான ஓர் வேட்பாளரை பெயரிட வேண்டியது மிகவும் அவசியமானது. அரசியல் ரீதியான ஒரு தலைவரையே நியமிக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது

# பெண்களே



காதலில் தோல்வியை அதிகம் எதிர் கொள்பவர்கள் ஆண்கள்தான். பெண்களைக் கேட்டால் தாம் என்று தான் சொல்வார்கள். காதல் ஒரு போதும் தோற்பதில்லை. காதலர்கள் தான் தோற்றுப் போகின்றனர். எந்த வொரு பெண்ணும் நிச்சயமாக ஆணின் கிறெடிற் அட்டை, விசா அட்டை, மாஸ்டர் அட்டை என்பவற்றை பார்த்து காதலிப்பதில்லை. அவர்கள் மனத்தையும் குணத்தையும் மட்டும்தான் பார்த்து காதலிக்கின்றனர். எல்லாப் பெண்களுக்கும் தெரியும், ஆண்களிடம் அத்தகைய அட்டைகள் இருந்தாலும் அதில் பணம் இருக்காது என்று. காதலிக்கும் ஆண்களுக்கு எல்லாம் பெண்கள் ஒரு பாம்புச் செட்டை. அன்பு பாசத்துக்குக் காதலிக்கும் ஆண்கள் குறைவு. தமது தேவையைப் பூர்த்தி செய்யும் ஆண்களே அதிகம். பெண்கள் அதில் ஓர் ஏமாளிகளாகவே மாறுகின்றனர். ஏமாற்றும் ஆண்கள் இருக்கும் வரை ஏமாறும் பெண்கள் இருப்பார்கள். வசதிப்பைக் கண்டவுடன் காதலை மறந்து போவதில்லை. காதலுக்காக உயிரைக் கொடுக்கும் பெண்களும் இருக்கின்றனர்தான். நேசித்த காதலனைவிட இதயத்தில் யாருக்கும் இடம் கிடையாது என்று திருமணம் செய்து கொள்ளாமலும் இருக்கின்றனர். எந்த ஓர் ஆண் தன் காதலுக்காகத் திருமணம் செய்யாது இருக்கின்றான்? எல்லாப் பெண்களும் தமது கணவன்மார் இறந்ததும் விதவையாக வாழ்கின்றனர். எந்த ஆண் மனைவி இறந்ததும் மற்றைய கல்யாணம் செய்யாது இருக்கின்றான்? காதலில் ஏமாறுவது பெண்களே. தற்பொழுது பெண்களிடம் இருந்துதான் எல்லாவற்றையும் வாங்கி விட்டு ஆண் விட்டு விட்டுச் செல்வான். காதலில் அதிகம் பாதிப்பும் ஏமாற்றமும் பெண்களுக்கே.

*எஸ். ஜே. சுயா நிறைஞ்சி.*

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

உங்கள் கார்ரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது**

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :-..........................................

........................ திகதி


........................ கையொப்பம்

**இளவல்கள் வட்டம்**
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலயத்தில்
அப்பாவை
வெளியேற்றினார்கள்
திருமண வீட்டில்
அம்மாவை
வெளியேற்றினார்கள்
மங்கள நீராட்டு
விழாவில்
என்னை
வெளியேற்றினார்கள்
சில பிறந்த நாள்
வைபவத்தில் – என்
மகனை
வெளியேற்றினார்கள்
இவையெல்லாம்
அழைப்பின் பேரில்
தான் போனோம்
ஆலயத்தைத் தவிர
இருந்தும்
மரண வீடுகளில்
மட்டும்
சொல்லாமல்
போனோம்
எம்மை ஒருவரும்
வெளியேற்றவே
இல்லை
அப்போதெல்லாம்
அவர்களுக்கு –
எம்
உதவி
தேவைப்பட்டது
தோரணம்
கட்டவும்
பந்தல் போடவும்
ஒப்பாரி
வைக்கவும்
மயானம் வரை
ஊர்வலம்
போகவும்

*ஆர். ரிஷி, நயினை.*



# முத்தம் வேண்டாம்

உதட்டில் தொடர்ந்து 10 விநாடிகள் முத்தமிடும் தம்பதியருக்கு இடையே 8 கோடி பக்றீரியாக்கள் பரிமாறப்படுவதாக 'மைக்ரோபயாம்' அறிவியல் இதழ் ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதனின் வாயிலும், உமிழ் நீரிலும் 700 வகையான பக்றீரியாக்கள் இருக்கின்றன. இந்த நிலையில், உதட்டில் முத்தமிடும் போது, இந்த பக்றீரியாக்கள் பிறருக்கு பரவ வாய்ப்புகள் மிகவும் அதிகம். எந்த அளவுக்கு இந்த பக்றீரியாக்கள் முத்தத்தின் மூலம் பரவுகின்றன என்பதை அறிய நெதர்லாந்தின் டிஎன்ஓ அறிவியல் ஆய்வு மையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆராய்ச்சிக்கென்று 21 தம்பதிகளை தேர்ந்தெடுத்து, நாளொன்றுக்கு அவர்கள் எத்தனை முறை முத்தத்தை பரிமாறிக் கொள்கின்றனர், எவ்வளவு நேரம் முத்தமிடுகின்றனர் போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன. பின்னர், அவர்கள் முத்தமிடுவதற்கு முன்பும், 10 நொடிகள் முத்தமிட்ட பின்பும் நாக்கிலும், உமிழ்நீரிலும் இருக்கும் பக்றீரியாக்களின் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தனர்.

இதில், ஒருவரின் வாயிலிருந்து மற்றவர்களுக்கு 8 கோடி பக்றீரியாக்கள் செல்வதாக தெரியவந்துள்ளது. எனவே முத்தமிடும் போது கொஞ்சம் கவனமாயிருங்கள்.

அதிகமான அன்பு
இருக்கும் இடத்தில் மட்டும்தான்,
ஆயிரம் கேள்விகள் கேட்க
முடியும்.
மற்றவர்களிடத்தில் ஒரு
மழுப்பல் பதிலும்,
சிரிப்பும் போதுமே....





# ஐஸ்வர்யாவுக்குத் திருமணம்

தலைப்பை பார்த்தவுடன், அபிஷேக்பச்சனுடன் எப்போது விவாகரத்து நடந்தது என்று யோசிக்க ஆரம்பித்துவிடாதீர்கள். இது அபிஷேக்பச்சன் - ஐஸ்வர்யா அல்ல. சின்னத்திரையில் தொகுப்பாளினியாக, நடிகை யாக எல்லோர் மனதிலும் இடம்பிடித்த ஐஸ்வர்யாவுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் திருமணம் நடக்கவுள்ளது.

ஜோடி நம்பர் - 1, சூப்பர் குடும்பம் ஆகிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவர் ஐஸ்வர்யா. அத்துடன் இலக்கணம் மாறுதோ, பைரவி ஆகிய சின்னத்திரை தொடர்களிலும் நடித்து வருகின்றார். அமெரிக்காவில் வசிக்கும் இந்தியரான பிரனேஷ் கண்ணப்பனையே திருமணம் செய்து கொள்ளவுள்ளார். இது தொடர்பில் ஐஸ்வர்யா தெரிவிக்கையில், பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். திருமணத்தின் பின்னர் அமெரிக்காவில் வசிக்கவுள்ளேன். அதற்கு முன்னராகவே பைரவி தொடரை நடித்து முடித்துக் கொடுப்பேன் என்றார்.

## உண்மையான அறிவு என்றது எதனை?

உண்மையான அறிவு தன்னைப்பற்றிய அறிவு, அல்லது ஆத்ம ஞானம் ஆகும். உண்மையான உணர்வும் ஆத்ம ஞானமாகும்.




# காமெடி கலந்த வில்லன்

நான் கடவுள் படத்தில் வில்லனாக அறிமுகப்படுத்தப்பட்டவர் ராஜேந்திரன். அதுவரையில் அவர் சண்டைப் பயிற்றுவிப்பாளராக இருந்து வந்தவர். அறிமுகமான சில காலங்களிலேயே ரசிகர்கள் மனதில் நீங்காத இடம்பெற்றார். அவரது மொட்டந் தலையும் வித்தியாசமான பேச்சு நடையும் ரசிகர்களை வெகுவாக ஈர்த்தது. அண்மையில் விலாசம் என்ற திரைப்படத்தில் அவர் நகைச்சுவை கலந்த வில்லனாக நடித்துள்ளார். இது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இது தொடர்பில் ராஜேந்திரன் தெரிவிக்கையில், விலாசம், திருடன்- பொலிஸ் உள்ளிட்ட திரைப்படங்கள் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளன. வில்லன், நகைச்சுவை என்று இரண்டுமே எனக்கு சிறப்பாக அமைகின்றது. இரண்டும் கலந்து நடிப்பதையே ரசிகர்கள் அதிகம் விரும்புகின்றார்கள். ரசிகர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் எனது நடிப்பு அமையும் என்றார்.

# தாய் மகள் பிரசவம் ஒரே நாளில்



தாயும் மகளும் ஒரே மருத்துவமனையில் ஒரே நாளில் சில மணித்தியால இடைவெளியில் குழந்தைகளை பிரசவித்த சம்பவம் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது. ஹீதர் பென்ரிகோப் (வயது - 40) என்ற தாயும் டெஸ்ரினி மார்ட்டின் (வயது - 20) என்ற மகளும் இந்த வருட ஆரம்பத்தில் ஒரே தினத்தில் மாலை வேளையில் தாம் கர்ப்பமாகியுள்ளதை அறிந்து கொண்டனர். இந்த நிலையில் வெவ்வேறு மருத்துவ காரணங்களுக்காக இருவரும் ஒரே தினத்தில் தமது குழந்தைகளை பிரசவிக்க நேர்ந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை போர்ட் மையர்ஸ் நகரிலுள்ள லீ ஞாபகார்த்த மருத்துவமனையில் பென்ரிகோப் பெண் குழந்தையொன்றையும் அவரது பிரசவத்துக்கு சில மணி நேரம் கழித்து டெஸ்ரினி ஆண் குழந்தையொன்றையும் பிரசவித்துள்ளனர். பென்ரிகோவின் குழந்தைக்கு மெடலின் எனவும் டெஸ்ரினியின் குழந்தைக்கு டாமியன் எனவும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.



# ரிலாக்ஸா வாசியுங்க......

பேஸ்புக்கில் வந்துள்ள கருத்து இது.

இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டிலும் முத்தப் போராட்டம், கட்டிப்பிடி போராட்டம் என்பன வலுப்பெற்று வருகின்றன. எந்தளவுக்கு அவை வலுப்பெற்று வருகின்றதோ அந்தளவுக்கு அதற்கு எதிர்ப்பும் வலுக்கின்றது. பாராசக்தி படத்தில் சிவாஜி பேசிய வசனங்களை ஒரு தரம் நினைவுபடுத்திக் கொண்டு கீழுள்ளதைப் படியுங்கள்.

இந்த பேஸ்புக் பல விசித்திரமான விடயங்களை துவைத்துக் காயப் போட்டுள்ளது. அந்த வகையில் தற்போது முத்தப் போராட்டம்.

இது பேஸ்புக்கிற்கு புதியதும் இல்லை, நாங்கள் புதியவர்களும் அல்லர்...

பொது இடங்களில் முத்தம் குடுக்கக் கூடாது என்றோம்... கலாசாரம் சீர் கெட்டு விடும் என்பதற்காக அல்ல...

எங்களை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்காக...

முத்தப் போராட்டத்தை எதிர்த்தோம்...

முத்தம் குடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல... முத்தப் போராட்டம் என்ற பெயரில் கட்டிப்பிடி வைத்தியம் மட்டும் செய்ததற்காக...

முத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களைக் கைது செய்யக் கோரினோம்...

அவர்கள் மேல் உள்ள கோபத்தில் அல்ல... நாங்கள் அங்கே இல்லை என்ற தைரியத்தில்...

உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்று நீங்கள் கேட்கலாம்...

நாங்களே பாதிக்கப்பட்டோம் நேரடியாகப் பாதிக்கப்பட்டோம்...

கடந்த வாரம் கொச்சியில் நடந்த முத்தத் திருவிழாவில் கலந்து கொள்ள முடியாமல் துடியாய் துடித்தோம்... ஏக்கத்தால் தவித்தோம்... எங்கள் துடிப்பை போக்கியிருக்க வேண்டும், எங்கள் ஏக்கத்தை தீர்த்திருக்க வேண்டும்...

செய்ததா இந்த சமூகம்...

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சுன்னாகம் நீர் பேரிடருக்கு பொறுப்புக்கூறுவது அவசியம்

சுன்னாகத்தில் நிலத்தடி நீர் கழிவு எண்ணெயினால் மாசடைந்திருக்கும் விவகாரம் நீதிமன்றம் வரைக்கும் வந்துள்ளது. பாதிக்கப்பட்ட 7 பேர் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றனர். அதனடிப்படையில் சுன்னாகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தை ஏன் மூடக்கூடாது என்று நீதிமன்றம் அந்த வழக்கில் கேள்வி எழுப்பியுள்ளது. அதுபோக அந்தப் பகுதியைக் கண்காணிக்கும் பொதுச் சுகாதார அதிகாரியும் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

சுன்னாகம் பகுதிக் கிணறுகளில் காணப்படும் தண்ணீரில் கழிவு எண்ணெய்க் கசிவைத் தவிர்ப்பதற்கு எடுக்கக்கூடிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து சில ஆலோசனைகளை நீதிமன்றம் முன்வைத்திருக்கிறது. மக்கள் நலன் கருதி அதனைச் செயற்படுத்துவதற்குத் தாம் தயாராக இருக்கிறார்கள் என்று அந்த நிறுவனத்தினரும் தெரிவித்திருக்கின்றனர்.

ஏற்பட்டுள்ள பாதிப்பு இன்னும் அதிகமாகாமல் தடுப்பது மிக மிக அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதேபோன்று, ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்வதும்கூட அதேயளவுக்கு முக்கியமானவைதான். அதற்கான முதற்படிதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆரவாரங்களுக்கு இடையில் - அதாவது எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற போக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் இந்தச் சமயத்தில் - இந்த இயற்கைப் பேரிடர் இடம்பெறக் காரணமாக இருந்தவர்கள் அதற்கு எப்படிப் பொறுப்புக் கூறப் போகிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இந்தச் சம்பவத்தை விசாரணை செய்ய கொழும்பிலிருந்து வந்த குழுவே, நடந்தது ஓர் இயற்கைப் பேரிடர் என்று அறிவித்திருக்கிறது. அத்தகைய இயற்கைப் பேரிடர் குறித்து கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகில் இருக்கும் தோட்டக் கிணற்றில் எண்ணெய்க் கசிவு காணப்பட்ட போதிருந்து இந்தப் பிரச்சினை சுட்டிக்காட்டப் பட்டு வந்துள்ளது. ஆனால் எவரும் கவனம் எடுக்கவில்லை.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினரும் ஏனைய அதிகாரிகளும் கடந்த மூன்று வருடங்களாக இந்த மின் உற்பத்தி நிலையம், அதன் தற்போதைய கட்டுமானங்களுக்குக் கீழேயே அங்கு இயங்க முடியும் என்று உறுதிப்படுத்தி உரிய சான்றிதழ்களையும் வழங்கியிருக்கின்றனர். பொதுச் சுகாதார அதிகாரிகளும்கூட இது தொடர்பில் அக்கறைப்படாமலேயே இருந்திருக்கின்றனர். இப்போது பொதுச் சுகாதார அதிகாரியால் வழக்கைத் தாக்கல் செய்ய முடிகிறது என்றால் இந்தப் பிரச்சினை எழுந்த உடனேயே அவ்வாறான ஒரு வழக்கை அவர் தாக்கல் செய்திருக்க முடியும் என்றுதானே அர்த்தம்? ஆனால் அப்படி நடக்கவில்லை.

அப்படியென்றால் இவர்கள் அனைவருமே இந்தப் பேரிடர் ஏற்படக் காரணமானவர்கள் அல்லது ஒத்துழைத்தவர்கள் என்றுதானே அர்த்தம்? தமது கடமையைச் செய்யாது புறக்கணித்தார்கள் என்றுதானே அர்த்தமெனின், தமது தவறுகளுக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டாமா?

இலங்கையில் தலை முதல் கால் வரையில் பொறுப்புக்கூறாமல் விடுவதுதானே பிரச்சினை. இந்த விடயத்திலும் தற்போது வரைக்கும் அதுதான் நடைபெற்றுள்ளது. எதிர்காலப் பாதிப்பைத் தடுக்கும் அதேநேரத்தில், ஏற்பட்ட பாதிப்புகளுக்குக் காரணமான உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களைப் பொறுப்புக்குள்ளாக்குவதும் கட்டாயம்.

# அரசின் பக்கம் சமரவீரவை இழுக்க மஹிந்த எடுத்த முயற்சி தோல்வி

## மௌனமானார் சோபிததேரர்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து கோகுலன்

மொறட்டுவையிலுள்ள மங்கள சமரவீரவின் வீட்டில் நவம்பர் 3ஆம் திகதி ஓர் இரவு விருந்து இடம்பெற்றது. அது முக்கியமானதாகவும் சிறப்புக்குரியதாகவும் இருந்தமைக்குக் காரணம், அங்கு விருந்தினர்களாக வந்திருந்தவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷவும் ஆவார்கள்.

நாமல் ஏற்கனவே சமரவீரவை சந்தித்துப் பேசியிருந்தார். சமரவீர தமது தந்தையின் அரசில் இருந்த சமயம் நடந்தவற்றுக்காக அவர் இப்போது கழிவிரக்கம் கொண்டிருப்பதாகவும், இப்போது ஐ.தே.கட்சியில் அவருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கவலைப்படுவதாகவும் தெரிவித்திருந்த நாமல், அவரை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் வந்து இணைந்து கொள்ளும்படியும் அழைப்பு விடுத்திருந்தார். இதையடுத்து இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான ராஜபக்ஷவின் பரப்புரை இயக்க முகாமையாளராக இருப்பவரும், அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுடனான சந்திப்பும் இடம்பெற்றது. அதன்போது சமரவீரவுக்கு வெளியுறவு அமைச்சர் பதவி, கட்சியில் மீண்டும் அதே முதுநிலை மற்றும் மீண்டும் உதவித் தலைவர்களில் ஒருவராக நியமிப்பது போன்ற விடயங்களில் இணக்கம் ஏற்பட்டபோதிலும், அரசமைப்பு திருத்தங்கள், பல்வேறு சுயாதீன ஆணைக் குழுக்களை மீளவும் நிலைநிறுத்துவது போன்றவற்றுடன் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை செயற்படுத்த வேண்டும் என்றும் சமரவீர முன்வைத்த கோரிக்கைகளில் இணக்கம் காணப்படவில்லை. பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு அவர் சிங்கப்பூர் சென்றமையால் திரும்பி வந்ததும் அரச தரப்பில் அமைச்சர் பதவியொன்றை வழங்கவும், ஜி.எல்.பீரிஸை வேறு ஒரு பதவியில் அமர்த்தவும் ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. சமரவீர நாடு திரும்பியதும் வரவு - செலவுத் திட்டத்தின் வெளியுறவு அமைச்சுக்கான செலவினங்கள் மீது வாக்கெடுப்பு நடைபெற்றதன் பின்னர் சமரவீர அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்ததாக அரச தரப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. அதேசமயம் ஐ.தே.கவினரும் சமரவீரவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஐ.தே.க. முக்கியஸ்தர்களிடம் கட்சியில் தமக்கு ஏற்பட்டிருந்த இக்கட்டுகள் பற்றி அவர் ஏற்கனவே விவாதித்திருந்தார். ஒக்ரோபர் 28 ஆம் திகதி ஹைட்பார்க்கில் நடந்த தேர்தல் முகவர்கள் மாநாட்டில் தாம் ஓரங்கட்டப்பட்டிருந்தமை பற்றி சமரவீர கவலை கொண்டிருப்பதைக் கண்ட ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சிங்கப்பூருக்கு நேரில் சென்று சமரவீரவுக்கு விளக்கமளிக்கவும் முன்வந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் சமரவீர அதனை விரும்பவில்லை. பொது முன்னணி ஒன்று அமைப்பது குறித்து அக்கறை காட்டியிருந்த சமரவீர பொது நிகழ்ச்சிநிரல் ஒன்று பற்றிய தமது திட்டத்துக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறியிருந்தார். முன்னதாக ஐ.தே.கவின் பொதுமுன்னணி ஒன்றை நிறுவுவதற் கான தமது முயற்சியை அவர் தீவிரப்படுத்தியிருந்தார். அதன் பேரில் பொது நிகழ்ச்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டது. அதன் இறுதி நோக்கம் பொது வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதாகும். எதிர்பார்க்கப்பட்டதற்கு சில நாள் கழித்தே செவ்வாய்க்கிழமை சமரவீர நாடு திரும்பினார். புதன்கிழமை முத்தையா பூங்காவில் ஜே.எச்.யுவின் அத்துரலிய ரத்ன தேரர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சமரவீர முன்வரிசையில் அமர்ந்திருந்தார். அந்தக் கூட்டத்தின் கருப்பொருள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஒழித்து ஊழல்களைத் தடுப்பதுமாகும். சமரவீர அங்கு அமர்ந்திருந்ததன் மூலம் அரச தரப்பினரின் அழைப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே காட்டிக் கொண்டார் என்பதை பலர் அறிந்திருக்கவில்லை. கூட்டத்திலிருந்தபோது அவரது கைபேசிக்குக் குறைந்தது 11 அழைப்புக்களாவது வந்திருக்கும். அனைத்தும் அலரி மாளிகையிலிருந்தே வந்திருந்தன. கடைசி அழைப்புக்கு விடையளித்தபோது தாம் முத்தையா பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் இருப்பதாகவும், பின்னர் ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் அழைப்பாளருக்குத் தெரிவித்தார். அன்றிரவு வீட்டுக்கு வந்தபோதும் ஜனாதிபதி தம்மோடு பேச விரும்புகிறார் என்பதாக பல அழைப்புக்கள் வந்திருப்பதைக் கண்டார். வியாழக்கிழமை பஸில் ராஜபக்ஷவிடமிருந்து வந்த அழைப்புக்கு அவர் பதில் அளித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள சில சக்திகள் சீர்திருத்தங்களைக் கண்டு அஞ்சுகிறார்கள் போல்தோன்றுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தாம் வருவதை அமைச்சர் டலஸ் அழகப்பெரும விரும்பவில்லை. பெரும் வதந்திகளைப் பரப்புகிறார் என்று குற்றஞ்சாட்டினார் சமரவீர. ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் அலஸ் மூலம் தன்னைப்பற்றி வதந்தி பரப்புவதில் அமைச்சர்களில் ஒருவராவது பின்னணியில் இருந்துள்ளார் என்றும் அவர் கூறினார். எமக்குள் ஏற்பட்ட புரிந்துணர்வை வைத்துக் கொண்டு அமைதியான தேர்தலை நடத்துவோம் என்று கூறினார். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும்கூட நாம் பேசலாம் என்று பஸில் கூறியதாகத் தெரிகிறது.

மங்கள சமரவீர பத்திரிகைகளிடம் கூறிய விடயம்;

26 ஆவ்து வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில், தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வலுவுள்ள ஆயுதம் ஓர் அரசியல் தீர்வு காண்பதுதான் என்று நான் கூறினேன். அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் தோல்வியடைந்தமைக்குக் காரணம் அவைகளுக்கு வலுவான அடித்தளம் இருக்கவில்லை. ஜனநாயக சீர்திருத்தங்களில் அர்ப்பணிப்பு தேவை என்பது என் கருத்து. இந்த அடிப்படையில் அப்படியான சீர்திருத்தங்களை நோக்கி அரசு நகர்வதற்கான அடையாளம் எதனையும் என்னால் காணமுடியவில்லை. அதனால் எனது அரசியல் கொள்கைகளை தியாகம் செய்ய என்னால் முடியாது. அதே சமயம் எனது தலைவரான ரணில் விக்கிரமசிங்கவையும் கைவிட நான் விரும்பவில்லை. நான் துரத்தியடிக்கப்பட்டபோது அவர் என்னை ஏற்றுக் கொண்டார். அப்படிச் செய்வது துரோகம் இழைப்பதாகும். எனது விடயத்தில் ராஜபக்ஷ குழுவினர் நேர்முகமாகவே செயற்பட்டுள்ளார்கள். இருந்தபோதும் ஊடகத்துறையின் ஒரு பகுதியில் அச்சம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் ஒரு நபர் மேற்கொண்ட தவறான தகவல் பரிமாற்றமாகும் என்று கூறினார்.

இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள பொதுவேலைத் திட்டம் மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும். சகல சுதந்திர ஆணைக்குழுக்களும் மீண்டும் நிலை நிறுத்தப்பட வேண்டும். தேர்தல் முறையானது முன்னர் இருந்தது போன்று பிரிட்டிஷ் முறையில் அமையவேண்டும்.

பொது முன்னணியின் ஆரம்பக் கூட்டமொன்று கோட்டை வரவேற்பு மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றபோது முதன்மை முன்னெடுப்பாளரான மாதுளுவாவே சோபித தேரர் பேசியபோது;

இப்போதைய அரசமைப்பை முழுநாடுமே நிராகரித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும்கூட முன்னர் அதனை கடுமையாக ஆட்சேபித்திருந்தார். அரசமைப்பை மாற்றுவதற்குத் தெய்வங்களின் ஆசிவேண்டி கதிர்காமத்துக்கும்கூட அவர் கால்நடைப் பயணம் மேற்கொண்டிருந்தார். 2005 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக்கூறி ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார். இடதுசாரித் தலைவர்கள், ஐ.தே.கட்சி, மகாநாயக்க தேரர்கள் என்று இந்த அரசமைப்பை ஆதரிக்கும் எவரையும் எம்மால் காணமுடியாமல் இருக்கிறது. முழுநாட்டினாலும் ஏற்றுக் கொள்ளப்படாத அரசமைப்பைக் கொண்டிருக்கும் நாடு ஒன்று எங்குமே கிடையாது. எனவேதான் நிறைவேற்று அதிகாரமுறையைக் கொண்ட இந்த அரசமைப்பை ஒழிக்கும்படி ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று கூறியிருந்தார். ஆனால் 48 மணித்தியாலங்களுக்குள் வண. மாதுளுவாவே சோபித தேரரின் நிலைப்பாட்டில் மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

முத்தையா பூங்காவில் இடம்பெற்ற கூட்டத்தில் ஐ.தே.க. தலைவர் நிகழ்த்திய பேச்சு அந்தக் கட்சியின் இன்றைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதாய் இருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை நாட்டின் வேகமான அபிவிருத்தியை உத்தேசித்தே. அதில் குறைபாடுகள் இருந்தமையால் 17 ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் போர் முடிந்தவுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் பதவியில் அமர்வதற்கான 18 ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தினார். நாட்டின் அபிவிருத்திக்காக கொண்டு வரப்பட்ட அரசமைப்பு, 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு தனிப்பட்டவர் அபிவிருத் திக்காகப் பயன்படுத்தப்படலாயிற்று. இன்று ஒரு குடும்ப ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வீதமானவர்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறார்கள். 99 வீதமானவர்களுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. நாம் வாக்குறுதியளித்ததை நிறைவேற்ற இங்கு கூடியிருக்கிறோம். நிறைவேற்று அதிகார முறையை ஒழித்து, 17 ஆவது திருத்தத்தை நிலைநாட்டி, விருப்பு வாக்களிப்பை இல்லாமல் செய்து தேர்தல் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்கு நாம் இணங்கியுள்ளோம் என்று கூறினார் ரணில்.

வியாழக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விவரம் பகிரங்கமாகிவிடும். இப்போதைய ஜனாதிபதி பதவிக்காலம் முடிய இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கும் நிலையில் இப்போது முன்கூட்டியே தேர்தல் நடைபெறவிருக்கிறது. பெரும்பாலும் இந்த முடிவு சோதிடத்தை அனுசரித்தே எடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே கிரகங்கள் என்ன சொல்கின்றன என்பதை அறிய நாடு இன்று பெரும் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கிறது.

20 NOV 2014

ந. சிவகரன்,

# சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் அறிவியல் சார்ந்த உரையாடல்கள்

**உலக மெய்யியல் தினம் இன்று**

இன்று உலக மெய்யியல் தினமாகும். உலகெங்கிலும் பரந்து வாழும் மெய்யியற் சிந்தனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாகவும், சாதாரண மனித வாழ்வியல் நடைமுறைகளில் மெய்யியற் சிந்தனைகளின் அவசியத்தை வலியுறுத்தும் நோக்குடனும் வருடந்தோறும் இந்த, உலக மெய்யியல் தினம் யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த வருட உலக மெய்யியல் தினத்தின் கருப்பொருளானது 'சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் அறிவியல் உரையாடல்களின் முக்கியத்துவம்' எனும் தலைப்பில் அமைந்துள்ளது.

சமூகத்தில் இழையோடிக் காணப்படுகின்ற பிரச்சினைகள், முரண்பாடுகள், நாட்டின் அரசியல் பொருளாதாரப் போக்குகளில் ஒரு நேர்க்கணிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் அது அறிவியல் சார்ந்த உரையாடல்களின் ஊடாகவே சாத்தியமாகும் என்பதனை இந்தத் தலைப்பு வலியுறுத்தி நிற்கின்றது. இங்கு அறிவியல் சார்ந்த உரையாடல்கள் என்பது சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், சான்றோர்கள், பொதுநலன் விரும்பிகள் ஆகியோர் பொதுக்களத்திலே ஒன்றுகூடி எடுக்கப்படுகின்ற முடிவுகளைப் பிரதிபலிக்கின்றன.

இந்தப் பொதுக்களமானது, மக்களுடைய சமூக வாழ்க்கையில் ஓர் இடப்பரப்பையும் குறிக்கின்றது. இந்த இடப்பரப்பு மக்கள் ஒன்றுகூடி சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதை நோக்கியதாகவும் அமைந்து காணப்படும். சமூகத்தில் தோன்றியிருக்கும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளையோ அல்லது நாட்டின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த பிரச்சினைகளையோ கலந்தாலோசித்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் பொழுது அங்கு ஒரு தர்க்கரீதியான, பகுத்தறிவு ரீதியான முடிவுகளை எடுக்க முடியும். இந்தக் கலந்துரையாடல்கள், ஆலோசனைகள் பிரச்சினைக்குரிய தீர்வை வழங்கக்கூடியதாக இருக்கும். அதேவேளை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான உடன்படிக்கையை எட்டக் கூடியதாகவும் காணப்படும். அவ்வாறு எடுக்கப்படுகின்ற முடிவுகளானவை சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் காத்திரமான பங்கை வகிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

ஏனெனில் மனிதன் பகுத்தறிவு வழியில் சிந்திக்கும் திறன் கொண்டவன். அவனால் மனிதப்பண்புமிக்க நீதியான, சமத்துவமான, சமூகத்தை உருவாக்க முடியும். இதற்கு அடிப்படையான களமாக இந்தக் களமே அமைகின்றது. இந்தக் களத்தில் ஆண்களும், பெண்களும் தங்களுடைய தன்னாட்சி, பொறுப்பு என்பனவற்றின் மீதான ஆர்வம், விழிப்புணர்வு கொண்டவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்ட நிலையில் நன்கு தர்க்கிக்கப்பட்ட நிலையில் உள்ள கருத்துக்களுக்கு அவர்கள் உடன்படுவார்கள். இந்தப் பொதுக்களத்தில் எடுக்கப்படும் முடிவுகளானவை பொதுமக்களினுடைய அபிப்பிராயம் என்ற மார்க்கத்தினூடாக சமூகத்தினுடைய தேவையை அரசு பூர்த்திசெய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்குவதுடன் ஒரு சிறந்த அரசானது தனது சட்டமாக இயற்றவும் முனையும், அப்பொழுதுதான் சமூக மாற்றத்துக்கான அடித்தளத்தை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இன்றைய சமகால அரசியல், சமூக பொருளாதார விடயங்களில் பொதுக்களத்தின் தேவை மிகவும் அவசியமானதொன்றாக உணரப்படுவதுடன் நடைமுறையில் குடிசார் சமூகங்கள், புத்திஜீவிகள் சமூகம் எனும் பெயரில் இயங்கும் அமைப்புக்கள் மேற்படி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றமையைக் காணக்கூடியதாகவும் உள்ளது. உண்மையான ஜனநாயக அரசின் செயற்பாடானது பொதுக் களத்தினாலே இயக்கப்படவேண்டும் அத்துடன் சட்டபூர்வமாக அரசு என்றால் அது, பொதுக்களத்தின் கருத்துக்களைக் கேட்டறியும் அரசாகக் காணப்படல்வேண்டும். அதே வேளை ஓர் அறிவு பூர்வமான விவாதத்தில் தனது பிரஜைகள் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாகவும் காணப்படல் வேண்டும். அப்போது தான் அங்கு சட்ட ஆட்சியும் நல்லாட்சியும் செழிப்புற்று வளரும்.

இன்றைய நவீன அரசியல் சமூகத்தில் அரச நிறுவனங்கள் தனிமனிதனைத் தங்களுக்கு ஏற்றவகையில் இயக்கிக் கொண்டு இருக்கின்றன. மாறாகத் தனிமனிதனுடைய தனிப்பட்ட நலன்சார் தேவைகளைப் பூர்த்திசெய்ய விடுவதில்லை. இந்த நிலையில் இங்கு ஒரு நெருக்கடி நிலைமை தோன்றுகின்றது. இந்த நெருக் கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவேண்டியதேவை ஏற்படுகின்றது. இவ்வாறான ஒரு செயற்பாடு தான் பொதுக் களத்துக்கான வெளியை உருவாக்கம் செய்கின்றது. இங்கு அர்த்தமுள்ள மொழியும், பகுத்தறிவுச் சிந்தனையும் மனிதனை எல்லாவகையான செயற்பாட்டுடன் இணைக்கின் றது. இந்த செயற்பாடானது மனி தன் ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளவும், ஒருவரோடு ஒரு வர் உடன்பட்டு ஒரு பொதுவான செயற்றிட்டத்தைத் தீட்டுவதற்கும் உதவுகின்றது. இவ்வாறான ஒரு நிலையில் சர்வாதிகாரம், முதலாளித்துவம் அதன் நிலையில் இருந்து விலகி சமத்துவம் மிக்கதொரு ஜனநாயகத்துக்கு மாறும் நிலை உருவாகும். இது பொதுக் களத்திலே மேற்கொள்ளப்படும் அறிவார்ந்த தொடர்பாடல் செற்பாட்டால் மட்டுமே நடக்கும். மாறாகப் புரட்சியினாலேயோ. அல்லது போராட்டத்தினாலேயோ நடைபெறுவது சாத்தியமற்றது. புரட்சி, போராட்டம் போன்றவற்றை நீக்குவதற்கு அறிவியல் சார்ந்த உரையாடல்களின் அவசியத்தை இன்றைய மெய்யியல் தினம் அறிமுகம் செய்து வைக்கின்றது. மேற்படி கருத்துக்கள் சமூகத்தில் மனித விடுதலையின் குறிக்கோள் களை முன்னெடுக்கும் அதேவேளை, அனைவருக்கும் பொதுவான அற விழுமிய அறிவின் அவசியத்தை வழங்குவதாகவும் அமையுமென நம்பப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் எப்பொழுது சாத்தியப்படுமெனில், சுதந்திரமான, சமத்துவமான. மனிதர்களுக்கு இடையில் எந்த விதமான கட்டுப்பாடுகளும், நெருக்கடிகளும் இல்லாதநிலையில் திறந்த, சுயாதீன, பகுத்தறிவுடன் கூடிய கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்பட்டால் மாத்திரமே சாத்தியப்படும். அதேவேளை சமூகங்களில் ஒழுக்க விழுமியக் கருத்துக்களைப் பரப்புவதன் மூலமும் சமூக மாற்றத்தை ஏற் படுத்தலாம். மனிதன் பகுத்தறிவு வழியில் சிந்திக்கும் திறன் கொண் டவன். அவனால் மனிதப்பண்புமிக்க நீதியான, சமத்துவமான, சமூகத்தை உருவாக்க முடியும். இதற்கு அடிப்படையானது ஒழுக்கவியல் சிந்தனைகளே. எனவே ஒழுக்க ரீதியான கருத்துக்களைப் பரப்புவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம் என நம்புவோம்.

◆ கட்டுரையாளர் யாழ்.பல்கலைக் கழகத்தின் மெய்யியல்துறையின் விரிவுரையாளராவார்.

**இது மரநடுகை மாதம்**

# வெற்றித் தீர்வு



செ.செல்வராஜா

காடழித்தலைக் குறைத்து, மரங்கள் நடுதலை அதிகரித்து, தமது வருங்கால சந்ததிக்கு ஒரு வளமான புவியைக் கையளிக்கலாம் என்பதனைத் தமது 'சமுதாயக் காடுகள்' மூலம் நேபாளம் முன்வைத்தது. இந்த நுட்பம் உலகெலாம் பர்வ 1978 ஆம் ஆண்டின் ஜகார்த்தா நாட்டில் இடம்பெற்ற உலக காடுகள் மாநாடு உதவி புரிந்தது எனலாம்.

பர்மாவில், மரப் பலகைகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் உள்ளூர் கிராம மக்களுடன் இணைந்து, பரஸ்பர இலாபம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. தேக்க மரக்கன்றுகள் நிறுவனங்களால் நடப்பட்டன. அவை வளர்வதற்கான நிழலை மக்கள் வழங்கிப் பராமரித்தனர். இதனால் தேக்க மரங்கள் செழித்து முதிர்பருவம் அடைந்தன. இதனால் அந்த நிறுவனங்களும், பொது மக்களும் வெற்றித் தீர்வை அடைய முடிந்தது.

நடப்பட்ட தேக்கங்கன்றுகள் மண்ணை உறுதியாக்கி மண்ணரிப்பைத் தடுக்கவும் உதவின. ஜாவாவிலும் யுனெஸ்கோ ஆதரவுடன், மரபுரிமைச் சின்னங்கள் நிறைந்த பொறோடர் என்கின்ற மலைச் சாரல் பிரதேசத்தில் மண்ணரிப்பைத் தடுக்க மக்கள் ஒத்துழைப்புடன் மரங்கள் நடப்பட்டன. இவை மக்கள் காடுகள் என அழைக்கப்பட்டன. மரங்கள் வளர்ந்து முதிர்ச்சியடையும்போதுதான், தாம் ஒரு தங்கச் சுரங்கத்தைக் கொண்டுள்ளதாக மக்கள் உணரத் தலைப்பட்டனர். ஆம்! அவர்களால் வளர்க்கப்பட்ட மரங்களின் சந்தைப் பெறுமதி அவர்களுக்கு பணத்தை வாரி இறைப்பனவாக, ஓர் ஒழுங்கான வருமானத்தைத் தருவனவாக அமைந்தன. அதனால் புதிது புதிதாக மரங்களை நடுவதில் அவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர்.

நாமும் நமது வளவுகளில் கிடைக்கும் இடங்களில், தேக்குப் போன்ற மரங்களை நடுவோம். அவ்வாறு பல தனி மரங்கள் அடுத்தடுத்த வளவுகளில் வளரும்போது அது காடாகக் காட்சி தரும். சூழலைப் பாதுகாப்பதுடன் எமது எதிர்காலச் சந்ததியையும் காக்கும் கவசம் அவையாகும்.



# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



நள்ளிரவில் மும்பையின் நெடுஞ்சாலையில் நண்பருடன் சேர்ந்து சாப்பிட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டு. சச்சின் சதமடித்தும் அணி தோற்றது. நான்கு நாடு கள் பங்கு கொண்ட போட்டித் தொடரில் சகல போட்டிகளிலும் அணி தோற்றது. அடுத்துப் பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் சச்சினை நான்காவது வீரராகத் தேர்வுக்குழு களமிறங்கச் சொல்லியிருந்தது. ராபின் சிங்கை முன்னதாகச் சச்சின் அனுப்பி வைத்தார். அவர் ஓட்டம் எதுவும் பெறாமல் வந்தது சச்சின் மீது விமர்சனத்தைக் கிளப்பியது. அதே ராபின், பாகிஸ்தான் அணியுடன் அதே வருடம் நடந்த போட்டியில் அஸாருதினால் இதே மாதிரி களமிறக்கப்பட்ட போது அடித்துத் தூள் கிளப்பினார்.

**சொல்லாமல் பறிக்கப்பட்ட தலைமைப் பதவி**

மீண்டும் இலங்கையுடன் நடந்த தொடரில் ஒரு டெஸ்டில் வென்று, இறுதி டெஸ்டில் தோற்றதும் சச்சினிடம் எந்த முன்னறிவிப்பும் விடுக்காமல் அவரைத் தலைவர் பதவியை விட்டுத் தூக்கினார்கள். செய்திகளின் மூலமே அந்த விடயத்தைச் சச்சின் தெரிந்து கொண்டார். என்னுடைய தலைவர் பதவியைத் தான் நீங்கள் பறிக்க முடியும். எனக்குள் இருக்கும் கிரிக்கெட்டை அல்ல என்று சச்சின் தனக்குள் கூறிக் கொண்டார்.

**வோர்னுக்கு பதிலடி**

1998இல் ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்தது. சேன் வோர்ன் சிறப்பான ஆயுதங்களோடு வருவார் என்று சச்சினுக்குத் தெரியும். அவர் பந்தைக் கூடுதலாகச் சுழற்றுவதால் அது மிதந்து சென்று துடுப்பாட்ட வீரர் தொடமுடியாத அளவுக்கு விலகிச்செல்கிறது என்பதைச் சச்சின் உணர்ந்தார். ஆகவே, லெக் ஸ்டம்ப்புக்கு சற்று வெளியே நின்று கொண்டு பந்துகளை எதிர்கொள்வது என்று முடிவு செய்தார். ஆடுகளத்தை விட்டுப் பெரும்பாலும் வெளியேறாமல் ஆடுவது. லெக் ஸ்டம்ப் அல்லது அதற்கு வெளியே பந்து வீச முயன்றால், மிட்விக்கெட் நோக்கி நேராக மட்டையைப் பயன்படுத்தி அடிப்பதென சச்சின் முடிவு செய்தார்.

இதனால் பந்து மட்டையின் விளிம்பில் படுவதற்கு வாய்ப்பு இருந்தாலும் அடித்து ஆடுவது என்று களம் புகுந்தார். பயிற்சிப் போட்டியில் லெக் ஸ்டம் பகுதிக்கு வெளியே பந்து வீசாததைக் கவனித்துக்கொண்டார். சென்னை டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் வோர்னின் பந்து வீச்சில் நான்கு ரன்னில் சச்சின் அவுட் ஆனார். எதிரணி 71 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. வெங்கட்ராகவன் இந்தியாவுக்குத் தோல்வி என்று கணித்து வீரர்களிடம் சொன்னார். ஒவ்வொரு வீரரும் 75 ஓட்டங்கள் அடிக்க வேண்டும் என்று சச்சின் இலக்கைச் சொன்னார். ஆனால், அவர் வரும்போது முன்னிலை 44 ஓட்டங்கள் மட்டுமே. சச்சின் 155 ஓட்டங்கள் அடித்து அணியை வெற்றி பெறவைத்தார். அடுத்த டெஸ்டில் வோர்னை விக்கெட்டே எடுக்காமல் 147 ரன்கள் விட்டுக்கொடுக்க வைத்தார்கள். எந்த அளவுக்கு வெறி கொண்டு சச்சின் அடித்தார் என்றால் தேநீர் இடைவேளைக்கு முந்தைய ஓவரில் தடுப்பாட்டம் ஆடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவர், வோர்னை ஆதிக்கம் செலுத்த விடக்கூடாது என்கிற எண்ணத்தில் அந்த ஓவரில் நினைவேயில்லாமல் சிக்சர் அடித்தார். அடுத்த டெஸ்டில் அணி தோற்றாலும் தொடர் இந்தியா வசம் வந்தது. அப்போது சச்சினின் சராசரி 111 ஆக இருந்தது.

*(தொடரும்)*

# இந்தியாவில் நவீன அடிமைகள்

நவீன அடிமைகள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது என்ற தகவல் குளோபல் ஸ்லேவரி இண்டெக்ஸ் 2014 அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. உலகில் உள்ள நவீன அடிமைகளில் 61 சதவிகிதம் பேர் உள்ள 5 நாடுகளில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும், வாக்ஸ்ப்ரீ பவுண்டேசன் அமைப்பும் இணைந்து 167 நாடுகளில் நடத்திய குளோபல் ஸ்லேவரி இண்டெக்ஸ் 2014 கணிப்பீட்டின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அடிமைத்தளையை ஒழிக்கும் நோக்கத்தில் ஆண்டு தோறும் இந்த அறிக்கை தயாரிக்கப்படுகிறது. உலகில் உள்ள நவீன அடிமைகளில் 61 சதவிகிதம் பேர் இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, உஸ்பெகிஸ்தான் ஆகிய 5 நாடுகளில் உள்ளனர் என்றும், அந்த 5 நாடுகளில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



125 கோடியே 21 லட்சத்து 39 ஆயிரத்து 596 மக்கள் தொகை கொண்ட இந்தியாவில், 1 கோடியே 42 லட்சத்து 85 ஆயிரத்து 700 மக்கள் அடிமைகளாக வாழ்கிறார்கள். இந்தியாவில் கட்டுமானம், விவசாயம், வீட்டு வேலை, ஆடை உற்பத்தி உள்ளிட்ட தொழில்களில் மக்கள் நவீன அடிமைகளாக நடத்தப்படுவது ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதுமட்டுமின்றி, கட்டாய பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல், கட்டாயத் திருமணம்செய்துவைத்தல்போன்ற காரணங்களால் இந்தியாவில் பெண்கள் நவீன அடிமைகளாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நவீன அடிமைகள் கலாச்சாரம் பரவி வருவதால், உலகம் முழுவதும் அடிமை வாழ்க்கையை வாழ்பவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 23 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அடிமைத்தனத்தை ஒழிக்க சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்றும், மக்களை வலுகட்டாயமாக வேலைவாங்குபவர்களுக்கான தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ரி)



குழந்தைகள் தினவிழா மற்றும் டாக்டர் எஸ்ஆர்.அரங்கநாதன் விருது வழங்கும் விழா சாந்தோம் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கலை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள். (ரி)


## இந்திரா காந்தி தேசிய சேவை திட்டத்தின் விருது வழங்கல்



டில்லி,நவ.20

குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று இந்திரா காந்தி தேசிய சேவை திட்டத்தின் கீழ் குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி விருதுகள் வழங்கினார். 1992-1993. ஆண்டுகளில் இருந்து இந்திரா காந்தி தேசிய சேவை திட்டத்தின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது. 2 லட்சம் ரூபாய் ரொக்கப் பணமும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. இந்தத் தேசிய சேவைத் திட்டம் இந்திய அரசின் முதன்மைத் திட்டங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டம் மூலம் ஆளுமை வளர்ச்சி மாணவர்கள் இடையே சமூக சேவைக்கான தன்னார்வத்தை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்கள் செயற்படுத்தப்படுகின்றன. (ரி)

## சர்வதேச அமைதி விருது இந்தியரான மாணவிக்கு



சென்னை,நவ.20

ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தொடர்ந்து உதவி செய்து வருவதற்காக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க மாணவி நேகா குப்தாவுக்கு, குழந்தைகளுக்கான சர்வதேசஅமைதி விருது வழங்கப்பட்டது. இதற்கு முன்பு, கடந்த ஆண்டு இந்த விருதை பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூசுப்சாய் பெற்றிருந்தார். இவருக்கு நெதர்லாந்தில் உள்ள ஹேக் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது இந்த விருதை அமைதிக்கான நோபல் விருது பெற்ற டெய்மாண்டு டூட்டு வழங்கினார். இந்த விருது, குழந்தைகளின் உரிமைக்காக பாடுபடும் சிறுவர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. நேகா தனது 9 ஆவது வயதில் இந்தியாவுக்கு தனது பெற்றோருடன் சென்றிருந்தார். அங்கு ஆதரவற்ற குழந்தைகளின் நிலையை கண்டு அதிர்ச்சியடைந்த அவர், அப்போதே குழந்தைகளுக்கான தனது சேவையை தொடங்கினார். பின்னர் அமெரிக்கா திரும்பிய அவர், அங்கிருந்த தனது பொம்மைகளை விற்று பணம் திரட்ட முடிவெடுத்தார். அதன்படி அவர் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து அதன்மூலம் 700 அமெரிக்க டொலர் பணம் திரட்டினார். அதைத்தொடர்ந்து அவர் கைவினைப் பொருள்களை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்து பணத்தை திரட்டினார். 9 வருடங்களுக்குப் பிறகு தற்போது கல்லூரி மாணவியாக திகழும் நேகா, ஆதரவற்றோர்களுக்கென 'எம்பவர் ஆர்ஃபன்ஸ்' என்ற பெயரிலான அறக்கட்டளையை நடத்தி வருகிறார். இதன் மூலம் இதுவரை 8 கோடி இந்திய ரூபா திரட்டி உதவி புரிந்துள்ளார்.


# தண்ணீர் பிரச்சினை தீர்க்க ஆலோசனை

### ஒவ்வொரு சொட்டு மழைநீரும் பூமிக்குள் போகவேண்டும்; மழை மைய இயக்குநர் சேகர் ராகவன் தெரிவிப்பு

சென்னை,நவ.20

சென்னையில் ஆறு, குளம், ஏரி என அனைத்து வகையான நீர் ஆதாரங்களும் சிறிது சிறிதாக ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடங்களாக மாறிவருகின்றன. தண்ணீர்ப் பற்றாக்குறையை ஈடுசெய்ய எம்முன் இருக்கும் ஒரே தீர்வு மழைநீர் சேகரிப்பு மட்டுமே. 2002இல் மழைநீர் சேகரிப்பு முன்னோடித் திட்டத்தைத் தமிழக அரசு கட்டாயமாக்கி, சிறப்பாக நடைமுறைப்படுத்தியது. ஆயிரக்கணக்கான அரசு அலுவலகங்கள், வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி தனது முதல் உரையின்போது, மழைநீர் சேகரிப்பில் தமிழகத்தை நாடு பின்பற்றவேண்டும் என்றார். வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்ட அந்த திட்டம் நடுவில் தாமதித்ததால், தமிழகத்தில் தற்போது ஒரு லட்சம் அரசுக் கட்டடங்களில் மழைநீர் சேமிப்பு வசதி இல்லை. புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களிலும் அதற்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இதனால், சென்னையின் ஓராண்டு தேவைக்கு உதவும் நீர், வீணாகக் கடலில் கலக்கிறது. மழைக்காலத்தில் சந்து, பொந்துகள், தெருக்கள், வீதிகள், சுரங்கப் பாதைகள் அனைத்தும் குளம்போல மாறுவது சென்னையில் வழமை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து இடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை அமைக்கவேண்டும் என்கிறார் சென்னை சாந்தோமில் உள்ள மழை மையம் இயக்குநர் சேகர் ராகவன். தமிழக அரசின் மழைநீர் சேகரிப்புத் திட்டத் துக்கு முன்னோடியாக இவரைக் குறிப்பிடலாம். மழைநீர் சேமிப்பு குறித்து இந்த மையம் மூலம் அவர் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். (ரி)



## கர்நாடகத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் மனு


காவிரியின் குறுக்கே தடுப்பணை கட்டும் கர்நாடக அரசின் செயற்பாட்டுக்குத் தடை விதிக்க உத்தரவிடக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றம் உடனடியாகத் தலையிட்டு உரிய உத்தரவுகளை கர்நாடக அரசுக்குப் பிறப்பிக்க வேண்டும்' என்று மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# ஆகாஷ் ஏவுகணை வெற்றி

சென்னை நவ 20

நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் வகையில் வடிமைக்கப்பட்டுள்ள ஆகாஷ் ஏவுகணையின் சோதனை முயற்சி இரண்டாவது வெற்றியை அடைந்துள்ளது.


பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பின் சார்பில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணையின் மூலம் ஜெட் விமானங்கள், போர்க் கப்பல் ஏவுகணைகள், போர் விமானங்கள் ஆகியவற்றைத் தாக்க முடியும். ஆகாஷ் ஏவுகணை, தரையிலிருந்து சுமார் 60 கிலோ வெடி பொருள்களுடன் சென்று, 30 கிலோ மீற்றர் தூரம் வரை உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன்கொண்டது. இதன்முதல்நாள் சோதனை ஒடிசா மாநிலம், பாலாசூர் மாவட்டத்திலுள்ள சாந்திப்பூர் ஏவுகணைச் சோதனை தளத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அது, வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது தடவையிலும் ஆகாஷ் ஏவுகணை, நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் துல்லியமாகத் தாக்கியது. இதையடுத்து, இரண்டு சோதனை முயற்சிகளிலும் இந்திய ஏவுகணை வெற்றிகரமாக செயற்பட்டுள்ளதாக சோதனைத் தளத்தின் இயக்குநர் எம்.வி.கே.வி.பிரசாத் தெரிவித்தார். (ரி)




# போர்க்கப்பல் ஒப்பந்தம் ரத்து

சென்னை நவ 20

முறைகேடு முறையீட்டின் எதிரொலியாக தென்கொரியாவிடம் இருந்து சிறிய ரக போர்க் கப்பல் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ய மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. கடல் எல்லை பாதுகாப்பு பணிகளுக்காக தென்கொரியாவிடம் இருந்து 2,700 கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு சிறிய போர்க்கப்பல்களை வாங்க கடந்த 2011ஆம் ஆண்டு அப்போதைய மன்மோகன் சிங் அரசு ஒப்பந்தம் செய்துகொண்டது. 6,000 கோடி ரூபாய் செலவில் கொரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 6 போர்க்கப்பல்களை இந்தியாவில் தயாரிக்கவும் அந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. கொரியா உடனான ஒப்பந்தத்தை ரத்து செய்ய மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் படி இந்தியாவிலேயே 7 போர்க்கப்பல்களை தயாரிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் 2019ஆம் ஆண்டுக்குள் முதல் கப்பல் தயாராகும் என்றும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரி)



## ஜப்பான் நாடாளுமன்றம் நாளை கலைக்கப்படும்



டோக்கியோ, நவ.20
ஜப்பான் நாடாளுமன்றம் நாளை வெள்ளிக்கிழமை கலைக்கப்படும் என்று அந்த நாட்டுப் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.
ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. இதற்குப் பொறுப்பேற்று நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் நடத்த ஆளும் முற்போக்கு ஜனநாயகக் கட்சி முடிவு செய்துள்ளது.
இதுகுறித்து பிரதமர் ஷின்சோ அபே தலைநகர் டோக்கியோவில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் தெரிவித்ததாவது:
எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும். விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.
அரசின் பதவிக்காலம் முடிவடைய இன்னமும் 2 ஆண்டுகள் இருக்கும் நிலையில் பொருளாதார தேக்கநிலை காரணமாக முன்கூட்டியே நாடாளுமன்றத்தை கலைக்க ஷின்சோ அபே முடிவு செய் துள்ளார்.
எதிர்வரும் டிசெம்பரில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## தெருவில் அந்தரிக்கும் அமெரிக்க குழந்தைகள்



வொஷிங்டன், நவ.20
அமெரிக்காவில் வறுமையின் காரணமாக வீடில்லாமல் தெருவில் அனாதையாகத் திரியும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
உலக நாடுகளில் மிகவும் வல்லரசு நாடு என்று மார்தட்டிக்கொள்ளும் அமெரிக்காவில் தற்போது வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடி வருகிறது.
வறுமை அந்த நாட்டை வாட்டி எடுப்பதால், குடும்பத்தில் தனி நபர் வருமானம் போதுமானதாக இல்லை என்பதால் கணவன், மனைவி இருவரும் தொழில் செய்து வருவாய் ஈட்டும் கட்டாயத்தில் உள்ளனர்.
இந்தநிலையில் வீடிழந்த குடும்பத்தினருக்கான தேசிய மையம் என்ற அமைப்பு நாடு முழுவதும் உள்ள மாகாணங்கள், நகரங்கள், கிராமங்கள் ரீதியாகக் கணக்கெடுப்பு நடத்தி கடந்த 2012-2013 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது.
அதில் கடந்தாண்டு 2.5 மில்லியன் குழந்தைகள், குடும்ப வன்முறை உள்ளிட்ட காரணங்களால் அனாதைகளாக விடப்பட்டுள்ளனர் என்றும், இதன்மூலம் நாட்டில் வறுமை 8 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், 30 குழந்தைகளுக்கு ஒருகுழந்தை வீடின்றி தவித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் சிலர் இளைஞர்கள் பாடசாலை சென்று கல்வி கற்க பெரும் போராட்டம் நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.
இதுகுறித்து அந்த அமைப்பின் இயக்குனர் கர்மீலா டிகேன்டியா கூறுகையில், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இதற்கு ஒரு முடிவு கட்டப்படும் என்று ஒபாமா அரசு உறுதியளித்துள்ளதாக கூறியுள்ளார். (வ)



## மேலும் ஒரு அமெ.மருத்துவர் எபோலாவால் உயிரிழப்பு

ஒமகா, நவ.20
அமெரிக்காவில் மேலும் ஒரு மருத்துவர் எபோலா நோயால் உயிரிழந்தார். இந்தநோயால் அமெரிக்காவில் இதுவரை 2 பேர் உயிரிழந்துள்ளனர். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா நோயால் 5000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. நோய் பரவாமல் தடுக்கும் வகையில் அந்தந்த நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.
இந்தநிலையில், அமெரிக்காவில் உள்ள ஒம்கா நகரை சேர்ந்த மருத்துவர் மார்ட்டின் (வயது-44) என்பவர் எபோலா நோயால் உயிரிழந்துள்ளார். ஒமகாவில் வசிக்கும் அவர், மேற்கு ஆபிரிக்காவில் இருக்கும் தனது சொந்த நாடான சியரா லியோனுக்குச் சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். அங்கிருந்து சமீபத்தில் அமெரிக்கா திரும்பிய மார்ட்டினுக்கு எபோலாவின் பாதிப்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.
ஒமகாவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் எபோலா பாதிப்பு அவருக்கு தீவிரமாக இருந்ததால், சிறுநீரகங்கள் செயலிழந்து விட்டன. அவருக்கு மூச்சுத் திணறலும் ஏற்பட்டது.
மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்துவந்த நிலையில், மார்டினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அதையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் அவர் உயிரிழந்தார். (வ)

## கனடாவில் தரையிறங்கிய மிகப்பெரிய விமானம்



உலகின் மிகப்பெரிய விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் கனடாவில் தரையிறங்கியுள்ளது.
அதிக அளவானோரையும் பொருள்களையும் ஒரே நேரத் தில் எடுத்துச் செல்லும் அன்ரனோவ் 225 வகையைச் சேர்ந்த இந்த விமானம் ரஷ்ய விண்வெளி ஆய்வகத்தால் வடிவமைக்கப்பட்டிருந்தது.
275 அடி நீளமான இந்த விமானம் 640 மெற்றிக் தொன் எடையைக் காவியவாறு மேலெழும் வல்லமை உள்ளது. அதன் வால்ப் பகுதி வரையிலான நீளத்தை ஒப்பிடும் போது ஏறக்குறைய ஒரு காற்பந்து திடலின் நீளத்தை ஒத்திருக்கும் என்று கூறப்படுகிறது. (வ)



ஹங்கேரி பிரதமர் விக்டர் ஆர்பனைப் பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் நாடாளுமன்றம் நோக்கி நேற்று பேரணியாகச் சென்றனர். ஹங்கேரியில் ஊழல் அதிகரித்துவிட்டதாக குற்றம்சாட்டிய மக்கள், விக்டரின் மோசமான ஆட்சியே இதற்குக் காரணம் என்று தெரிவித்தனர். பின்னர் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முயன்ற அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. (வ)

## அமெரிக்க வெளியுறவுத்துறை கணினிகளில் தகவல் திருட்டு

வொஷிங்டன், நவ.20
அமெரிக்க வெளியுறவுத்துறை கணினி வலையமைவுகளில், வகைப்படுத்தப்படாத மின்னஞ்சல்கள் அந்நியர்களால் சட்டவிரோதமாக ஊடுருவப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.
அதைத்தொடர்ந்து குறிப்பிட்ட வலையமைவுகளை வெளியுறவுத்துறை நிறுத்தி வைத்துள்ளது. வெள்ளை மாளிகை, அமெரிக்க தபால் சேவைகள். தேசிய பருவநிலை சேவைகள் ஆகிய துறைகளின் கணினி வலையமைவுகளும் சட்ட விரோதமாக ஊடுருவப்பட்டுள்ளன. (வ)

## ஐ.எஸ்.ஐ.எஸ். பிடியில் பரிதவிக்கும் இளம்பெண்

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளிடம் பணையக் கைதியாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ், தங்களுக்கு எதிராக வான் வழிதாக்குதலில் ஈடுபட்டுவரும் அமெரிக்கா, பிரிட்டன், உள்ளிட்ட நாடுகளை அச்சுறுத்தும் விதமாக தொடர்ந்து தலைத் துண்டிப்பை அரங்கேற்றி வருகின்றது.
இந்தநிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த 26 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தீவிரவாதிகளின் பிடியில் பணயக் கைதியாக உள்ளார். ஆனால் அவரது பெயரைத் தீவிரவாதிகள் வெளியிடவில்லை. சிரியாவில் உள்நாட்டுப் போரில் இடம்பெயர்ந்த



குழந்தைகளுக்கு உதவிசெய்து வந்த அவர், கடந்தாண்டு தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பணையக் கைதியாக வைக்கப்பட்டுள்ளார்.
மேலும் அவரை விடுவிக்க வேண்டும் என்றால் 6 மில்லியுன் டொலர்களை தங்களுக்கு தரவேண்டும் என்றும் இல்லையேல் அவரது தலையைக் கொய்து படுகொலை செய்வோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## யூத வழிபாட்டிடம் மீது தாக்குதல்:4 பேர் சாவு



ஜெருசலேம், நவ.20
ஜெருசலேமில் உள்ள யூத வழிபாட்டுத்தலத்தில் இரு பலஸ்தீனயர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். இரு பொலிஸார் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.
கொல்லப்பட்டவர்களில் மூவர் இஸ்ரேலிய அமெரிக்க இரட்டைக் குடியுரிமைகளை கொண்டவர்களாவர். மற்றொருவர் பிரிட்டன் குடியுரிமை பெற்ற இஸ்ரேலியராவார்.
இந்த வன்செயலைத் தூண்டியதாக பலஸ்தீனத் தலைவர்கள் மீது குற்றஞ்சாட்டிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இதற்கு கடுமையான பதிலடி தரப்படும் என்று கூறியுள்ளார்.
சுயபாதுகாப்புக்காக அனுமதிப் பத்திரத்துடன் துப்பாக்கிகளை வைத்திருக்கும் இஸ்ரேலியர்கள் மீதான துப்பாக்கி கட்டுப்பாடுகளைத் தளர்த்தப் போவதாக அவரது அரசு கூறியுள்ளது.
ஆனால், இஸ்ரேலியப் பிரதமர் தான் பலஸ்தீனர்களும் இஸ்ரேலியர்களும் உயிரி ழக்க காரணமான இந்த வன்செயலைத் தூண்டினார் என்று மூத்த பலஸ்தீனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

# அதிக வினைத்திறன் கொண்ட வயர்லெஸ் சாதனம் உருவாக்கம்

இணைய வலையமைப்பில் தற்போது வயர்லெஸ் தொழில் நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு Whisker எனும் வயர்லெஸ் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனமானது 4 மைல்கள் தொலைவுக்கு சமிக்ஞையை வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 5 வருடங்களுக்கு செயற்படக்கூடிய இரண்டு AAA மின் கலங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்தச் சாதனத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து வீடுகள், ரோபோக்கள், கார்கள், செல்லப் பிராணிகள் என்பவற்றைக் கண்காணிக்க முடியும்.

தற்போது நிதி திரட்டலை எதிர்பார்த்து Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள இந்தச்சாதனம் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.



## அகத்தூய்மையையும் புறத்தூய்மையையும் பேணுவோம்

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



தூய்மை என்பது அகத் தூய்மை, புறத் தூய்மை என இருவகைப்படுவதாக மகான்கள் கூறுகின்றனர். உடலை நீராலோ, மண்ணாலோ, வேறு பொருள்களாலோ தூய்மை செய்வது அதாவது குளித்தல் போன்றவை புறத்தூய்மையாகும். வாய்மையாலும், மற்ற எல்லா நற்குணங்களாலும் மனதைத் தூய்மைப்படுத்துவது அகத்தூய்மையாகும். இரண்டுமே தேவை. அகத்தில் தூய்மை, புறத்தில் அழுக்கு என்றால் அது சரியாகாது. இருவகைத் தூய்மைகளும் இல்லாமல் ஒருவன் யோகியாக மாட்டான். தோத்திரம், சிந்தனை, பக்தி– இவை மூலம் இறைவனை வழிபட வேண்டும். யமம், நியமம். ஆசனம் என்பது பற்றி தெரிந்திருக்க வேண்டும். இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் மார்பும் தோள்களும் தலையும் நேராக இருக்க வேண்டும். உடம்பு இறுக்கமின்றித் தளர்வாக இருக்க வேண்டும் என்பது தான். அடுத்தது பிராணாயாமம், பிராணன் என்பது உடம்பில் உள்ள உயிர்ச் சக்திகள், ஆயாமம் என்றால் அடக்குதல், இதில் மூவகை உண்டு. சாதாரணமானது, நடுத்தரமானது, உயர்ந்தது, பிராணாயாமத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை உள்ளிழுத்தல், அடக்கல், வெளிவிடல் என்பனவாகும். சாதாரண பிராணா யாமத்தில் உடல் வியர்க்கும். நடுத்தர மானதில் உடல் நடுங்கும். உயர்ந்த பிராணாயாமத்தில் உடல் அந்தரத்தில் மிதக்கும், பேரானந்தம் பிறக்கும். வேதங்களில் காயத்ரி என்ற மந்திரம் உள்ளது. அது மிகப் புனிதமான மந்திரம். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருளின் மகி மையை நாம் தியானிப்போம். அவர் நமது மனங்களை ஒளி பெறச் செய்யட்டும்.

ஓங்காரத்தை இந்த மந்திரத்தின் முதலிலும் முடிவிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு பிராணாயாமத்தில் மூன்று முறை காயத்ரி மந்திரத்தை உச்சரியுங்கள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 4 | | 5 | | 1 |
| 5 | | 7 | | | | | 9 | |
| 1 | | | | 6 | | 3 | 4 | |
| 8 | | 6 | 5 | 7 | | | | 9 |
| 4 | | | 3 | | 2 | | | 7 |
| 7 | | | | 8 | 4 | 1 | | 3 |
| | 2 | 1 | | 5 | | | | 4 |
| | 5 | | | | | 9 | | 8 |
| 3 | | | | 1 | | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 2 | 1 | 4 | 3 | 9 | 5 | 6 |
| 3 | 1 | 4 | 5 | 6 | 9 | 8 | 7 | 2 |
| 5 | 6 | 9 | 7 | 2 | 8 | 4 | 1 | 3 |
| 8 | 3 | 1 | 6 | 9 | 5 | 7 | 2 | 4 |
| 4 | 5 | 6 | 2 | 7 | 1 | 3 | 8 | 9 |
| 2 | 9 | 7 | 8 | 3 | 4 | 1 | 6 | 5 |
| 9 | 7 | 5 | 3 | 1 | 2 | 6 | 4 | 8 |
| 1 | 2 | 3 | 4 | 8 | 6 | 5 | 9 | 7 |
| 6 | 4 | 8 | 9 | 5 | 7 | 2 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையைத் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர்.

**இடபம்**: புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின்போது கவனம் தேவை. பேச்சுத் திறமையை அதிகரிக்கச் செய்யும். எதிர்பாலினத்தவரிடம் பழகும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும்.

**மிதுனம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்காளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும்.

**கடகம்**: உறவினர்கள் வருகை இருக்கும். பேச்சுத் திறமையால் காரியங்களைச் சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். தேவையற்ற எண்ணங்களை விட்டு மனதை ஒருமுகப் படுத்துவது வெற்றிக்கு உதவும்.

**சிங்கம்**: காரிய அனுகூலம் உண்டாகும். எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும். அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசிப் பொழுதைக் கழிப்பீர்கள்.

**கன்னி**: தொழில் வியாபாரம் சிறப்பான முன்னேற்றம் பெறும். வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவார்கள்.

**துலாம்**: நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கிட்டும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

**தனுசு**: தொழில், வியாபாரம் சுமாராக நடக்கும் பழைய மிகுதிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்து முடித்து நன்மை பெறுவீர்கள்.

**மகரம்**: உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை காதில் வாங்காதவர்கள் போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும்.

**கும்பம்**: நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். அறிவுதிறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவது போல் இருக்கும்,

**மீனம்**:தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணும். தொழில் வளர்ச்சிக்காக சில திட்டங்களைச் செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம்.

### நாளை

**கார்த்திகை-05 வெள்ளிக்கிழமை | 21.11.2014**

திதி: சதுர்த்தசி மு.இ.06.41வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.ப.01.33 வரை

சுபநேரம்:06.10-07.40 வரை
இராகுகாலம்: 10.40-12.10 வரை

# கடுமையாகப் போராடி வென்றது கலைமதி

## சக்கோட்டை சென்.சேவியருடனான ஆட்டத்தில்

கரணவாய், நவ.20

பலத்த போராட்டத்தின் மத்தியில் எதிரணியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிகளுக்குமுன்னேறியதுநவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம்.

மைலோ வெற்றிக்கிண்ணத்துக்காக வடமராட்சி அணிகளுக்கும் இடையில் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று மாலை இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின.

முதல் சுற்று ஆட்டங்களில் மிகவும் பலம் பொருந்திய அணிகளை வீழ்த்தி இரு அணியினரும் கால் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியிருந்தன.

இந்தப் போட்டி ஆரம்பமாகி 4அவது, 5ஆவது நிமிடங்களில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்துக்கு கோல் அடிப்பதற்கான அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனை அந்த அணியின் முன்னணி வீரர்கள் தவறவிட்டனர். அதுபோலவே 8ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரரும் தவற விட ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில் சென். சேவியர் அணி வீரர் இருதயராசா தனக்குக் கிடைத்த பந்தொன்றை இலகுவாக கோல் காப்பாளரை ஏமாற்றி அருமையான கோல் ஒன்றைப் போட்டார்.

இதனை அடுத்து கலைமதி அணியினர் பதில் கோல் போடுவதற்குப் பகிரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனாலும் அவர்களால் இலகுவாகக் கோல் போட முடியவில்லை. இதனால் பந்து அங்கம் இங்கும் அலைந்து கொண்டுதிரிந்தது. இவ்வேளையில் மத்திய பகுதியில் இருந்து கடத்தப்பட்ட பந்தை தனது கால்களுக்குள் வாங்கிய கலைமதி அணி வீரர் பானுப்பிரியன் பலம் கொண்டு உதைக்க அது கோல் கம்பத்துக்குள் சென்று சரணடைய ஆட்டம் 1:1 என்ற சமநிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம்ஆரம்பமாகியதும்இருஅணியினரும் சில மாற்றங்களுடன் களமிறங்கி முட்டி மோதினர். ஆனால் பந்து அலைக்கழிந்ததே தவிர, கோல் போடமுடியாது இரு அணியினரும் திண்டாடியதுடன் கோல் போடும் சந்தர்ப்பங்களையும் கோட்டை விட் டனர். இதனால் ஆட்டம் 1:1 என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் கலைமதி விளையாட்டுக்கழகம் அசத்தல் வெற்றிபெற்றது.

அதற்கு முன் இடம்பெற்ற மற்றொரு விறுவிறுப்பான ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக பரபரப்பாகவும் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபிக்கும் வகையில் சமபலத்துடன் மோதிக் கொண்டதால் மைதானத்தினுள்ளும் வெளியிலும் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் ஆரம்பமாகி 12 நிமிடத்தில் வதிரி டயமன்ஸ் அணி வீரர் து தமது அணிக்கு எதிரான முதலாவது கோலைப் போட்டார். இதனை அடுத்து ஆட்டம் மேலும் சூடு பிடிக்க இரு அணியினரும் மேலதிக கோல்களைப் போடாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

> இடைவேளையின் பின் ஆட் டம் ஆரம்பமாகியதும் இரு அணி யினரும் சில மாற்றங்களுடன் களமிறங்கி முட்டி மோதினர். ஆனால் பந்து அலைக்கழிந்ததே தவிர, கோல் போடமுடியாது இரு அணியினரும் திண் டாடியதுடன் கோல் போடும் சந்தர்ப்பங்களையும் கோட்டை விட் டனர். இதனால் ஆட்டம் 1:1 என்ற நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம்மேலும்சூடுபிடிக்க இரு அணியினரும் கோல் போடுவதற்கு படாதபாடு பட்டனர். இந்தப் பாதியில் இமையாணன் மத்திய அணிக்கு இலகுவாக கோல் போடுதவற்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களையும் தவறவிட டயமன்ஸ் அணியின் வெற்றி உறுதியாகியது. இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும்போது டயமன்ஸ் அணியின் முன்னணி வீரர் அரவிந்தன் கோல் போட 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

வெற்றிபெற்ற ஏனைய அணிகள் விவரம் வருமாறு:

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தையும், உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை சமநிலை தவிர்ப்பு உதை மூலமும், சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றன.

(த-108)

## இன்றைய மோதல்கள்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களின் ஏ பிரிவு அணிகளுக்கான ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத் தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

✦ ✦ ✦

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்காகவடமராட்சிஉதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியின் லீக் முறையிலான ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை முதல் வதிரி டயமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள் ளன.

விலகல் முறையில் நடத்தப்பட்டப் போட்டிகளில் இருந்து நவிண்டில் கலைமதி ஐக்கிய விளையாட்டுக் கழகம், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம், கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம், கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட் டுக்கழகம், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் ஆகிய 8 எட்டு அணிகள் லீக் ஆட்டத் துக்குத் தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

அதில்இன்றுபிற்பகல்3மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகமும்மோதவுள்ளன. த-108)

## பிறைற் ஸ்ரார், யூனியன்ஸ் அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், நவ 20

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளை யாட்டுக் கழகங்களின் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று புதன்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் குறிஞ்சிக்குமாரன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

## மைலோ வெற்றிக் கிண்ண அரையிறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம் நவ. 20

மைலோ வெற்றிக் கிண்ணத்துகாக வடமராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றவுள்ளன. முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(த-23)



## எறிபந்து பயிற்சி முகாம்

வடமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான எறிபந்து தொடர்பான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி முகாம் இன்று வியாழக்கிழமை முதல் மூன்று நாள்கள் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த வதிவிட முகாமில் வடமகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த தலா 10 ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளதாகவும்இவர்களுக்கானசெய்முறைப் பயிற்சிகள் விரிவுரைகளை நடத்துவதற்குஅகிலஇலங்கைஎறிபந்துச்சங்கத்தில் இருந்து 5 வளவாளர்கள் வருகை தரவுள்ளார்கள்என்றும்- வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

(த-108)

## இலகு வெற்றியை பதிவு செய்தது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்றைய தினம் ஆஸ்திரேலியாவின் கன்பரா மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய பின்ச் மற்றும் வோர்ணர் அதிரடியான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்த அந்த அணி 20 ஓவர்களில் 118 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே முதல் விக்கெட்டாக வோர்ணர் 53 (50) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்ட பின்ச் சதமடித்து அசத்த ஆஸ்திரேலிய அணி வலுவான நிலைக்குச் சென்றது. 31.5 ஓவர்களில் அணியின் ஓட்டம் 189 ஆக இருந்த வேளையில் இரண்டாவது விக்கெட்டாக வட்சன் 40 (44) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து பின்ச் 109 (127), மார்ஷ் 22(13), பெய்லி 12(15) ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டை இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. சிமித் 73(55) வேட் 8 (6) ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் பிலன்டர், பெகர்டீன், வில்லியர்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

330 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான அம்லா, டி கொக் தமக்குள் இணைப்பாட்டமாக 108 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தாலும் தொடர்ந்து வந்த முன்னிலை வீரர்கள்ான பிளாசிஸ் 17(21), றொஸ்சொவ் 2(5), பெக்கார்டின் 12(12), மில்லர் 3(6) என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்கா அணி 44.3 ஓவரில் 256 ஓட்டங்களை மட்டுமே பெற்று 73 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக அம்லா 102(115), வில்லியர்ஸ் 52(34), கொக் 47(53) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 4 விக்கெட்டுக்களையும் கசீல்வூட் 3 விக்கெட்டையும் றிச்காட்சன், மார்ஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

5 போட்டிகளை கொண்ட தொடரில் ஆஸ்திரேலிய அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. ஆட்ட நாயகனாக சிமித் தெரிவானார்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நாளையதினம் மெல்போர்ணில் இடம்பெறவுள்ளது.

(த-ரி)

# புதிய துடுப்புகளை வாங்கும் டோனி




ஆஸ்திரேலிய தொடருக்காகப் புதிய துடுப் பாட்ட மட்டைகளை வாங்கும் வேட்டையில் களமிறங்கியுள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.

டோனி, வலது கை பெருவிரல் காயத்தால், இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இடம் பெறவில்லை.

அடிலெய்டில் நடக்க உள்ள 2ஆவது டெஸ்டில் இவர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இங்குள்ள மைதானங்களில் எகிறும் பந்து வீச்சைச் சமாளிக்கத் தயாராகி வரும் டோனி, புதிய துடுப்பாட்ட மட்டைகள் வாங்கும் வேலையில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

உத்தர பிரதேசத்தின் மீரட் சென்ற இவர், இங்குள்ள கிரிக்கெட் பொருள்கள் தயாரிக்கும் கம்பனிக்கு சென்று, 5 மணி நேரம் செலவிட்டுத், துடுப்பாட்ட மட்டைகளைத் தேடினார்.

புதிய வடிவம், அவருக்கு பிடித்த மரத்தால் செய்யப்பட்ட மட்டைகள் என 6 மட்டைகளை டோனி வாங்கியதாக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (கு)




# கோஹ்லி கருணையற்றவர்

இலங்கைத் தொடரில் இந்திய அணியின் அணித் தலைவராக இருந்த கோஹ்லி கருணையற்ற தன்மையை கொண்டுள்ளார் என்று ரவி சாஸ்திரி பாராட்டியுள்ளார்.

5 போட்டிகள் ,கொண்ட இலங்கைத் தொடரில் இந்தியா 5-0 என்ற கணக்கில் மிகப் பெரிய் வெற்றியை பெற்றது. இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி கூட கிடைக்கவில்லை.

இந்த வெற்றி பற்றி இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குனர் ரவி சாஸ்திரி நிருபர்களிடம் கூறுகையில், 'விராட் கோஹ்லி ஆவேசமாக விளையாடுகிறார். இளைஞராகவும் உள்ளார். இதன் மூலம் கிரிக்கெட்டில் ஆர்வம் மிக்கவராக அவர் உள்ளார் என்பது தெரிகிறது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணியில் கருணையற்ற தன்மையை கோஹ்லி உருவாக்கி உள்ளார் என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

இது அணிக்கு மிகவும் நல்லது. அவரிடம் என்னைக் காண்கிறேன். எனக்கு 20-22 வயது இருக்கும்போது ஆர்வம் மிக்க இளைஞரக் குழுவுடன் சிறப்பாக விளையாடினேன் என்று கூறியுள்ளார். (கு)

# ஆஸி.யிடம் தோல்வியை நிச்சயம் தழுவும் இந்தியா

இலங்கையை ஒருநாள் தொடரில் வீழ்த்திய இந்திய அணி, ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் தோல்வியைத் தழுவும் என்று முன்னாள் வீரர் கிளென் மக்ராத் கூறியுள்ளார்.

இந்திய அணி அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவுடன் டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி தொடங்கவுள்ளது.




இந்தத் தொடர் பற்றி ஆஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்து வீச் சாளர் கிளென் மக்ராத் கூறு கையில்,

ஒருநாள் கிரிக்கெட் மற்றும் 20/20 போட்டிகளில் இந்தியா ஒரு தரமான அணி தான். ஆனால் டெஸ்ட் போட்டிகளில் அந்த அணி கடுமையாக மேம்பாடு பெறுவது அவசியம்.

குறிப்பாக இங்கு பவுன்ஸ் பிட்ச்களில் அவர்கள் ஆட்டம் முன்னேற்றம் கண்டால் தான் உண்டு. கடந்த சீசனில் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா அணி விளையாடிய விதம் அபாரம். அது போன்ற ஆட்டத்தை வெளிப்படுத் தினால் நிச்சயம் இந்தியாவை வெள்ளையடிப்புச் செய்ய முடியும். இங்கிலாந்து தொடரில் இந்தியா விளையாடிய கடைசி 3 டெஸ்ட் போட்டிகளைப் பார்த்தேன். முடிவில் சின்னாபின்னமாகிவிட்டனர்.

பவுன்ஸ் பிட்ச்களில் இந்தியா சரியாக விளையாடாததற்கு வரலாற்றுச் சாட்சியங்கள் உள்ளன. ஆகவே இங்கிலாந்தில் ஆடியதை விட அவர்கள் தங்கள் ஆட்டத்தை மேலும் தரநிலையில் உயர்த்துவது அவசியம்.

இல்லையெனில் இங்கு கடுமையான தோல்விகளைச் சந்திக்க வேண்டியதுதான் என்று கூறியுள்ளார். (கு)



# தோல்விக்கு பொறுப்பேற்றார் சனத்


இந்தியாவுக்கு எதிரான தொடரில் இலங்கை படு தோல்வி அடைந்ததற்குத் தான் பொறுப்பேற்பதாக இலங்கை அணித் தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைத் திருப்தி செய்வதற்காகத் திடீரென இந்தத் தொடரை ஏற்பாடு செய்த இல்ங்கைக் கிரிக்கெட் சபை, விளையாட் டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆகி யோரை முன்னாள் அணித் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க கடுமையாகச் சாடியிருந்தார்.

மேலும், இந்தத் தோல்விகள் உலகக்கிண்ணத் தயாரிப்பில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனையடுத்து இலங்கை நாடாளுமன்றத்தில் விளையாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவாத அமர்வில் விளையாட்டுத்துறை துணை அமைச்சராகவும் உள்ள சனத் ஜெயசூரியா தோல்வி களுக்குத் தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக கூறியுள்ளார்.

மேலும், விளையாட்டுத் துறை அமைச்சர் மீது குற் றம் சுமத்த வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (கு)



# ஆர்ஜென்ரீனாவை வீழ்த்திய போர்த்துக்கல்

ஆர்ஜென்ரீனா அணிக்கு எதிரான நட்பு உதைபந்துப் போட்டியில் போர்த்துக்கல் அணி 1-0 என வெற்றி பெற்றது. இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டரில் ஆர்ஜென்ரீனா, போர்த்துக்கல் அணிகள் மோதிய சர்வதேச நட்பு உதைபந்து போட்டி நடந்தது. முதல் பாதியில் இரு அணி வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சி பயன் தரவில்லை. இரண்டாவது பாதியிலும் நட்சத்திர வீரர்களான மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), ரொனால்டோ (போர்த்துக்கல்)' கைகொடுக்கத் தவறினர். போர்த்துக்கல் அணியின் ரேபில் குயேரோ மேலதிக நேரத்தில் (90+1) ஒரு கோல் அடித்து அசத்தினார். முடிவில், போர்த்துக்கல் அணி 1-0 என வெற்றி பெற்றது. (கு)

# தொடர்ச்சிகள்

## இந்திய

2011ஆம் ஆண்டு இலங்கைக்குப் போதைப் பொருள்களைக் கடல்வழியாகக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 3 பேரும், இந்திய மீனவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். அது குறித்த வழக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வந்த நிலையில், அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தில் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன. இந்திய அரசும் மீனவர் தூக்குத் தொடர்பில் கரிசனை எடுத்து நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது.

அதையடுத்து ஜனாதிபதி சட்டத்தரணி ஊடாக இந்திய மீனவர்கள் சார்பாக மேன்முறையீடு செய்வதற்கு இலங்கைக்கான இந்தியத் தூதரகம் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், மேன்முறையீடும் செய்யப்பட்டது. எனினும் பின்னர் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சை அடுத்து மேன்முறையீட்டு மனுவை மீளப் பெற்றுக்கொள்வதாக கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய மீனவர்கள் 5 பேருக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே நிலவும் உறுதியான மற்றும் பன்முகத் தன்மையுடைய உறவுகளைப் பலப்படுத்தும் வகையிலேயே மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆயினும் அவர்களுடன் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவரைப் பற்றியும் எந்தவித அறிவிப்புக்களும் வெளியாகவில்லை.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கே.சின்ஹா தூதரகத்தில் சந்தித்தார். இதுகுறித்து இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மீனவர்களை விடுதலை செய்தமைக்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளோம். விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பில் உள்ளனர். அவர்களுக்கு தேவையான விடயங்களை இந்தியத் தூதரகம் கவனித்துக் கொள்கின்றது. அவர்கள் விரைவில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் இன்று வியாழக்கிழமை தமது சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களின் குடும்பத்தினர், தமது குடும்பத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி போராட்டங்கள் நடத்தியிருந்தனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை அனுப்பியிருந்தனர். எனினும் அவை எவற்றுக்கும் இதுவரை பதில் கிடைக்காத நிலையில் இந்திய மீனவர்களின் விடுவிப்பு நடந்துள்ள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## வடக்குடனா

அரச அதிபரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை அவைத் தலைவர் வாசித்தார். வடக்கு மாகாண சபையின் அமர்வில், தான் தெரிவித்ததாக தவறான தகவல் சொல்லப்பட்டுள்ளது என்று தெரிவித்து அரச அதிபரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதமே வாசித்துக் காட்டப்பட்டது.

அத்துடன் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டமைக்கான, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது கடிதம் மற்றும் வர்த்தமானி பிரசுரம் என்பவற்றை இணைத்து அரச அதிபர் அனுப்பி வைத்திருந்தார்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், அன்ரனி ஜெயநாதன், சி.சிவமோகன் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 5 பாடசாலைகளை வடமத்திய மாகாணத்துக்கு விடுவிக்குமாறு கல்வி அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது. ஆனால் அரச அதிபர் வெலிஓயா முல்லைத்தீவுடன் இணைக்கப்பட்டது என்று சொல்கின்றார். அதில் குழப்பம் இருக்கின்றது - என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டால் அது தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட வேண்டும். ஆனால் அவை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனையடுத்து, வெலிஓயா பிரதேச செயலகம் தொடர்பில் தனி சிறப்பு விவாதம் நடத்தி அது தொடர்பில் முடிவு காண்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## 'உதயன்'

ருக்கு இந்த உதவி தொடர்பில் தெளிவாக கடிதம் அனுப்பியிருந்தேன். எனது மகன் இதற்கு 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

நானும் 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளேன் என்று குறிப்பிட்டிருந்தேன். அவைத் தலைவருக்கு அனுப்பிய கடிதம் எப்படி அவர்களுக்குச் சென்றது என்று எனக்குத் தெரியவில்லை.

-இவ்வாறு எங்களைக் கொச்சைப்படுத்துவதற்கு அவர்கள் யார்?, நாங்கள் பணம் கொடுத்தால் என்ன விட்டால் என்ன?, அதைப் பற்றி இவர்களுக்கு என்ன அக்கறை.

அதை விட 'உதயன்' பத்திரிகை கடந்த மாதம் எங்களுக்குப் புள்ளி போட்டிருந்தார்கள். எங்களது மாகாண சபைக்கான வரவுப் பதிவேட்டை வைத்து அவ்வாறு போட்டிருந்தார்கள். எங்களுக்கு புள்ளி போடுவதற்கு இவர்கள் யார்? எங்களுக்கும் 'உதயனுக்கு' புள்ளி போடத் தெரியும்."- என்று கூறியதுடன், ஆளுங்கட்சியின் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களைப் பார்த்து, "நான் உங்களுக்காகத்தான் கேட்கின்றேன். நீங் களும் இதைப்பற்றிப் பேச வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இறுதியில் எதிர்க்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் தவநாதன் எழுந்து, "குறித்த பத்திரிகை, அந்த வரவுப் பதிவேடு தொடர்பான விடயத்தில் எனது பெயரைப் போட்டு, அடைப்புக் குறிக்குள் எதிர்க்கட்சி ஆள் என்று எழுதியிருந்தது" - என்று குறிப்பிட்டார்.

அத்துடன் ஆளுங்கட்சியின் உறுப்பினர் வைத்தியர் சிவமோகன், நிதி உதவி வழங்காதவர்களின் விவரங்களை ஊடகங்களுக்கு கொடுத்தமை தொடர்பில் அவைத் தலைவரிடம் காரசாரமான கருத்துக்களை முன்வைத்திருந்தார். (ற-5)

## தமிழ்

பலர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டும், பல ஆண்டுகளாக விசாரணைகள் நடைபெறாத நிலையிலும் சிறையில் வாடுகின்றனர். போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்களுக்கு மேலான நிலையில் நீண்ட காலமாக இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கைதிகளையும் மனிதாபிமான அடிப்படையிலாவது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியையும், நீதி அமைச்சரையும், சட்டமா அதிபரையும் இந்தச் சபை கோருகின்றது"- என்ற அந்தத் தீர்மானத்தை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் முன்மொழிந்தார்.

அதனை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனே வழிமொழிந்து உரையாற்றினார். "கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போதும் இந்த விடயத்தை வலி யுறுத்தியிருந்தேன். அதன் பின்னர் தைப்பொங்கலை முன்னிட்டு வெலிக்கடைச் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்திருந்தேன்.

இதன் பின்னர் சட்டமா அதிபருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். அவர் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் அவர் யாழ்ப்பாணம் வந்த போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அரசியல் கலந்திருக்கின்றது என்று வேதனையுடன் தெரிவித்தார்"- என்று முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். (ற-5)


## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 21.10.2014
செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த
எமது குலவிளக்கு

### அமரர் தவராசா கண்ணதாசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் தெணி அம்மன் ஆலய மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பாலையடி, புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.

இசைமேதை
### அமரர் சிவஸ்ரீ A.M. வர்ணகுலசிங்கம் அவர்களின் 31ஆம் நினைவு நாள்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் வாழ்நாள் அனுபவ நூல் வெளியீடும்

23.10.2014 அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத்
தலைவர்
அமரர் வர்ணகுலசிங்கம்
அவர்களின்
பிரார்த்தனை நிகழ்விலும்,
மதிபோசன விருந்திலும்
கலந்து சிறப்பிக்குமாறு
உற்றார், உறவினர்,
நண்பர்கள், அவர்தம்
மாணவர்கள்
அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.



இடம் : வறுத்தலை பிள்ளையார் ஆலய மண்டபம்
அளவெட்டி வடக்கு. (கூத்தஞ்சிமா சந்தை அருகில்)
காலம் : 22.11.2014 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி

திருமதி வர்ணகுலசிங்கம்
மற்றும் குடும்பத்தினர்.
வர்ணராமேஸ்வரன் (மகன்) 075 4626315
கைலாயநாதன் (மருமகன்) 077 172 3613

## காணவில்லை



மவுண்கார்மேல் வீதி, குருநகரைச் சேர்ந்த

### அந்தோனிமுத்து அன்ரன் ஜெரோம்

என்பவரை கடந்து 17.11.2014 காலையிலிருந்து காணவில்லை, கறுப்பு நீளக்காற்சட்டையும், நீல நிறத்தில் சிவப்பு கோடு போட்ட ரீசேட்டும் அணிந்திருந்தார்.

இவரைக் கண்டவர்கள் தகவல் தரவும்.

தொடர்பு:
077 8914 399, 077 5413 139

(54418)(10.6)

## சபரிமலை புனித யாத்திரை



CHENNAI - TIRUCHIRAPALLI
O/W
LKR 3700.00
Mobile :0773083820

NATION POPULAR TRAVELS & TOURS

| JAFFNA | VAVUNIYA | COLOMBO |
|---|---|---|
| 0214920920 | 0244930830 | 0114378117 |

## மரண அறிவித்தல்

### கணபதி வைரமுத்து

(மின்மானி வாசிப்பாளர்-கிராம சபை கொக்குவில்)



கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கணபதி வைரமுத்து நேற்று (19.11.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(C/17778)(10.6)

தகவல்:
மகன்-வ.சந்திரசேகரம்
ஓய்வுபெற்ற நிர்வாக
கிராம அலுவலர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் செல்லையா



அம்மன் வீதி, நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் செல்லையா நேற்று (19.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்திரன், கணேசு மற்றும் கணேஸ்வரி, இராஜேந்திரம் (Peoples Bank), இந்திரன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற அன்னலீலா மற்றும் சத்தியவடிவேல், ஜெக தாம்பிகை, லிங்கேஸ்வரி, ஈஸ்வரி அருட்செல்வம் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், கந்தசாமி, முருகேசு மற்றும் முத்துமணி, இலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(54420)(10.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 411 5605
077 627 5185

## திண்மக்கழிவு முகாமைத்துவத்தை இலகுபடுத்துவதற்காக வாகனங்கள்



காத்தான்குடி, நவ. 20

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் காத்தான்குடி பிரதேசத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை இலகுபடுத்துவதற்காக வழங்கபட்ட 40 லட்சம் ரூபா பெறுமதியான கனரக வாகனத்தை கையளிக்கும் நிகழ்வும், யூனொப்ஸ் நிறுவனத்தினால் வழங்கபட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஒட்டோக்களை காத்தான்குடி நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவுக்கு கையளிக்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காத்தான்குடிநகரசபையின் முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின்போது 50 லட்சம் ரூபா பெறுமதியான திண்மக் கழிவு முகாமைத்துவத்தை - இலகுபடுத்துவதற்காக வழங்கபட்ட கனரக வாகனத்தையும், இரண்டு ஒட்டோக்களையும் காத்தான்குடி தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் காத்தான்குடி நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கு பொறுப்பான எம்.ஐ.எம்.றபீக்கிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இதன்போது காத்தான்குடி நகர சபையின் செயலாளர் ஜெ.சர்வேஸ்வரன் காத்தான்குடி நகர சபையின் பிரதித் தவிசாளர் எம்.ஐ.எம். ஜெஸீம், நகர சபை உறுப்பினர்களான பாக்கீர், சியாட், அலிசப்ரி ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-10)

# காத்தான்குடி பள்ளிவாசலுக்கு அமெரிக்க அதிகாரி பயணம்

காத்தான்குடி, நவ. 20

1990 ஆம் ஆண்டில் இஷாத் தொழுகை நிறைவேற்றிக் கொண்டிருந்த 103 முஸ்லிம்கள் மீது தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசலுக்கு இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் பொது மக்கள் தொடர்பாடல் அதிகாரி திருமதி. நிகோலி சுலிக்ஸ் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை பயணம் செய்தனர்.



இந்தக் குழுவினரை மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசலின் தலைவரும், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவருமான எம்.ஐ.எம். சுபைர் தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

இதன் போது தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருந்த 103 முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய இடத்தையும், மரணித்தவர்களின் பெயர் பட்டியலையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் இணைப்பாளர் நௌஷாட் ஜப்பார், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் இணைப்பாளர் எம்.ஐ.நாஸர், தேசிய சுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனத்தின் தலைவர் ஏ.ஜி.எம்.றிஸ்வி, மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல் மற்றும் ஹுஸைனியா பள்ளிவாசல்களில் கடந்த 03-08-1990 அன்று வெள்ளிக்கிழமை இரவு இஷாத் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது 103 முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (த-10)

## ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி கிழக்கில் பிரார்த்தனைகள்

காத்தான்குடி, நவ. 20

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசலின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 69ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் விஷேட துஆப் பிரார்த்தனை ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது விஷேட துஆப் பிரார்த்தனையை காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அறபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி ஏ.ஜி.எம்.அமீன் (பலாஹி) நடத்தினார். இந்தப் பிரார்த்தனையில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி.வெதகெதர, மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம்.சுபைர் அதன் செயலாளர் ஏ.எல்.எம்.அனீஸ் அஹமட், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் இணைப்பாளர் எம்.ஐ.நாஸர், காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.சியாட், தேசிய சுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனத்தின் தலைவர் ஏ.ஜி.எம்.றிஸ்வி, மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-10)

## கிழக்கு பாடசாலைகளுக்கு காவலாளிகள் நியமிப்பு

மட்டக்களப்பு, நவ. 20

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் மற்றும் ஒட்டமாவடி பிரதேசங்களைச் சேர்ந்த 10 பேருக்கு பாடசாலை காவலாளி நியமனங்கள் கடந்த செவ்வாக்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணசபையின் ஆளுகைக்குட்பட்ட பாடசாலைகளிலுள்ள காவலாளிகள் வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைரின் சிபார்சின் கீழ் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைரின் காரியாலயத்தில் வைத்து இந்த நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனக் கடிதங்களை தேசிய காங்கிரஸின் மாவட்ட செயலாளரும் ஏறாவூர் பிரதேச இறப்பு விசாரணை அதிகாரியுமான எம்.எஸ்.எழ்.நஸீர் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை அதிபரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏறாவூர் கிளை மசூறா குழுத்தலைவருமான ஏ.எம்.தௌபீக் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இவ்வாறு நியமனம் பெற்றுள்ள பாடசாலை காவலாளிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் காவலாளிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (த-10)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி (கிச்சியக்கா) பாலசிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் நேற்று (19.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர்-தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிரி, முரளி, பாபு ஆகியோரின் அன்புத் தாயும், சுப்பிரமணியம் (மட்டக்களப்பு), அன்னபூரணம் (கனடா), மகேஸ்வரி (கனடா), செல்வராஜா, சிந்தாமணி, தவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆசைப்பிள்ளை, காந்திமதி, பவளராணி மற்றும் காலஞ்சென்ற நடராசா, கோபாலசாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**
தொ.இ: 077 862 3268, 021 491 6848.

தகவல்: **குடும்பத்தினர்.** (54402)(10.6)

## மின்னல் தாக்கி ஒருவர் காயம்

ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை கிராம அலுவலர் பிரிவில் கொண்டயன்கேணி மர்ஹூம் அஷ்ரப் நகரில் மின்னல் தாக்கியதால் தென்னந்தோப்புக் காவலாளி ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் கொண்டயன்கேணியைச் சேர்ந்த மூத்த தம்பி தம்பிராசா (வயது 72) என இனங்காணப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது தென்னந்தோப்பிலுள்ள வீட்டுக்கூரையும் சேதமடைந்துள்ளது. (த-10)


**கணினிகள் விற்பனைக்கு**

P4 - 6,000/=
Dual Core - 10,000/=
LCD Monitor - 4,500/= (17")

தொடர்பு: 075 529 7751/075 529 7752
கிளிநொச்சி (47935) (12.3.6)

**விநியோகஸ்தர்கள் தேவை**

விரைவாக விற்பனையாகும் LED மின் குமிழ்கள் மற்றும் மின் விசிறிகள் என்பவற்றை விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

(சி17833) (12.3.6) தொடர்பு: 077 109 2664

**விநியோகஸ்தர்கள் தேவை**

நவீன ரக அலுவலக மற்றும் வீட்டுப்பாவனைப் பொருள்கள் என்பனவற்றை யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா பிரதேசங்களில் விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை.

(சி17832) (12.3.6) தொடர்பு: 077 109 2664


## மரண அறிவித்தல்

### தம்பு குலநாயகம்



வேலணை சுருவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, முரசுமோட்டை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், தற்போது நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குலநாயகம் 17.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானை தம்பதியரின் மகனும், புங்குடுதீவு, பெருங்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரவேல்பிள்ளை - பராசக்தி தம்பதியரின் மருமகனும், இராசலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசலக்சுமி (கொழும்பு), சிவபாக்கியம் (அமெரிக்கா), சிவலிங்கம் (ஜேர்மனி), சந்தானலக்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தயாளன் (லண்டன்) மற்றும் அகிலன் (கனடா), சாந்தினி (கல்வி அமைச்சு-வடமாகாணம்), சசிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வக்சலா (லண்டன்), சசிகலா (கனடா), கே.ரீ.கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), சுபாந்தினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், மெலனி, அபிலாஷ், ஷரோன், ஷாரங்கி, அஸ்வினா, அஹானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் மதியாபரணம் (அமெரிக்கா), திலகவதி (ஜேர்மனி), விஜயரட்னம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, நடராசா, சிங்கராசா, தியாகராசா, சேனாதிராசா மற்றும் பத்மாவதி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை இல.42, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று, தகனக்கிரியை முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54413) (10.6.3)

தகவல்: **கே. ரீ. கணேசலிங்கம்**
(+94)0775048894, (+94) 0212224073.


**யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்புச் சேவையை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலை கோரல்**

- இந்த ஒப்பந்தமானது 01.01.2015-31.12.2015 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
- இதற்குரிய கேள்வி விண்ணப்பப் படிவத்தினையும், நிபந்தனையையும் அலுவலக நேரத்தில் யாழ்.வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00மணி-பி.ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளமுடியும். (04.12.2014) நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
- விண்ணப்பப் படிவங்கள் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 500/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கப்படக்கூடிய தொகையான ரூபா 10,000/= ஐ செலுத்திய பற்றுச் சீட்டினையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப படிவங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடப்பட வேண்டும். கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 05.12.2014 நண்பகல் 12 மணிக்கு முன்னர் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் 05.12.2014 அன்று நண்பகல் 12 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விதாரர் பிரசன்னமாக இருக்கலாம்.

யாழ். கூட்டுறவு நலவிருத்திச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (54415)(5.6.3)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி பத்மாவதி குழந்தைவேலு அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குழந்தைவேலு ஜெயலக்சுமி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி.**

(C/17771) (10.6)

## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் விகிர்தன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பத்மாசினிஅம்மா சிவபாதசுந்தரம்**

அவர்கள் 16.11.2014 இல் இறைபதமடைந்தார். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**கமக்கார அமைப்புக்களும், விவசாயிகளும், அக்கராயன்குளம், கிளிநொச்சி.**

(42936) (10.6)

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி விமலதாசன் புஸ்பலிலா அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி நாகலிங்கம் பொன்னம்மா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி.**

(C/17771) (10.6)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெயலட்சுமி குழந்தைவேலு

உசனைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி குழந்தைவேலு நேற்று (19.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசித்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, மகேஸ்வரி, நவரட்ணம், அழகரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், விஜயலட்சுமி (இளைப்பாறிய காணி உத்தியோகத்தர்), கமலாம்பிகை (இளைப்பாறிய விவசாய போதனா ஆசிரியர்), பத்மநாதன் (இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்), பத்மாவதி (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), கமலநாதன் (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் தாயாரும், சந்திரதேவா (பொறிவலர்), குமாரிபாக்கியவல்லி, மாலினி (மருத்துவ ஆவண உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியாரும், ரவீந்திரகுமார், கஜனி, பத்மகுமார், சாகித்யன், குருசோத்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக மட்டுவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(54117) (10.6)

தகவல்: வி. சந்திரதேவா

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

**விற்பனைக்கு**
சண்டிலிப்பாய், பளை ஆகிய பிரதேசங்களில் புறொயிலர் இறைச்சிக்கோழி சகல பருவத்திலும் ஊர்ப் பேட்டுக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. Kay Farm (pvt) Ltd
தொ.பே: 078 880 3483, 021 492 4233
(53272) (10.1)

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி சின்னப்பு

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கெருடாவில் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சின்னப்பு நேற்று (19.11.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி-செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், சின்னப்புவின் மனைவியும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சின்னமணி, தம்பு, குலராசசிங்கம் நவமணி மற்றும் இராசசேஸ்வரி, தனபாலசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அருள்நேசன் (ஜேர்மனி), சிவநேசன், அனுரா, றெஜினி ஆகியோரின் அன்புத் தாயும், அம்பிகா (ஜேர்மனி), நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் சுதந்திரபாலன் (கிளி) ஆகியோரின் பாசமிகு மாமியும், அனுந், அனுஜன், அனுஷாந், கோகிலன், கம்சவதனா, அனோஜா, சுலக்ஷன், ஐஸ்வர்யா, சுவேதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று. (20.11.2014) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன் - சின்னப்பு சிவநேசன்**

(C/17775) (10.6)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**20.11.2014**



அமரர்
**இராசையா பாஸ்கரன்**
(யாழ். பல்கலைக்கழக ஊழியர், முன்னாள் செயலாளர் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்)

அன்பு தந்து அரவணைத்து
ஆளாக்கிய தெய்வமே!
ஆண்டவன் அடி அழைத்து
ஆண்டு ஒன்று ஆனதுவே!
இம்மையில் உமை - இழந்தோம்
மறுமையில் உமைக்
காண்போம் எனக் காத்திருக்கிறோம்.

மண் மகிழ்வு 16.09.1959
கண் நெகிழ்வு 30.11.2013

மனைவி
குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் -2014

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01) கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 20.11.2014 தொடக்கம் 03.12.2014 பி.ப 3.00 மணிவரை
02) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 04.12.2014 மு.ப. 10.00 மணிவரை
03) கேள்வி திறக்கப்படும் திகதி : 04.12.2014 பி.ப.2.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04) கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05) இக்ராட்(ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06) கேள்வி ஆவணங்கள் வழங்குதவற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07) கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக. அனுப்பப்படல் வேண்டும்.
08) மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|
| நட் செட் வீதி- அம்மன் வீதி தறுக்கு வாய்க்கால் புனரமைப்பு | 10,000.00 | 1000.00 | M 09 /C 10 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

ப.வசந்தகுமார்,
தவிசாளர்.

(R/17770)(5.0)

# தொடர்ச்சிகள்

## காற்றினால்

துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடும் காற்றுக் காரணமாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை படகுச் சேவைகளும் இடம்பெற வில்லை. காற்று, கடல் கொந்த ளிப்பினால் பயணிகளை ஏற் றிச் செல்ல முடியாதென மறுத்த படகோட்டிகள் சிலர் பின்னர் வாடகைக்கு ஒரு குழுவினரைக் குறிகாட்டுவானுக்கு ஏற்றிச் சென்றதாகவும் பயணத்துக் கென வந்த மக்கள் அதிருப்தி தெரிவித்தனர். (த-7)

## பாலைதீவில்

மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, நேற்றும் கரை யோரப் பகுதிகளை சேர்ந்த அநேகமான மீனவர்கள் ஆழ் கடல் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லவில்லை.

கடல் கொந்தழிப்பு மற்றும் சீரற்ற காலநிலையினால் மீன வர்கள் கடந்த இரு நாள்களாக ஆழ்கடல் மீன்பிடியைத் தவிர்த் துக் கொண்டனர். (த-17)

## கடந்த

2013 இல் 668 பேரும், பிரயா ணிகள் 2012 இல் 387 பேரும், 2013 இல் 404 பேரும், சைக் கிள் ஓட்டுநர்கள் 2012 இல் 242 பேரும், 2013 இல் 258 பேரும், சாரதிகள் 2012 இல் 205 பேரும், 2013 இல் 194 பேரும், பின்னிருக்கைப் பயணிகள் 2012 இல் 153 பேரும், 2013 இல் 135 பேரும், ஏனையோர் 2012 இல் 3 பேரும், 2013 இல் 17 பேரும் உயிரிழந்துள்ளனர் -என்று கூறினார். (த-4)

## அடகிலிருந்து

டணைப் பின் தொடர்ந்து துரத்திய போதும் திருடன் ஓடி மறைந்து விட்டான்.

இந்தத் துணிகரக் கொள்ளை நேற்று மாலை சுதுமலை வடக்குப் பகுதி யில் உள்ள தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:- சுதுமலை தெற்கைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் மானிப்பாயில் உள்ள வங்கி ஒன்றில் அடகு வைத்த தங்க நகைகளை 25 ஆயிரம் ரூபா செலுத்தி எடுத் துக் கைப்பையில் இட்டுச் சைக் கிள் கூடையில் வைத்துக் கொண்டு வீடு நோக்கி சென்று கொண்டிருந்தார். இவருக்குப் பின்னால் மோட்டார் சைக்கி ளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் ஒருவர் மக்கள் நட மாட்டம் இல்லாத இடத்தைப் பயன்படுத்தி சைக்கிள் கூடை யில் இருந்த கைப்பையை கொள்ளையடித்துச் சென்றுள் ளார். இந்தக் கொள்ளை பற்றி மானிப்பாயில் பொலிஸில் முறைப் பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-115)

## யாழ்.- கொழும்பு

வேண்டும். ஆனால் அது 10 மணிக்குப் பின்பே அங்கு சென்றடைகின்றது. இதனால் இதில் பயணம் செய்யும் பெண் கள் உட்பட அனைவரும் தங்கு மிட வசதியைப் பெற்றுக் கொள் வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் சென்று உயர்ந்த கட்டணம் வழங்கித் தங்கவேண்டிய சூழ் நிலை ஏற்படுகின்றது. வெள்ள வத்தையில் இயங்கும் இராம கிருஸ்ணமிசன் தங்குமிடத்தில் ஒரு நாளைக்கு 250 ரூபா ஒரு வருக்கு அறவிடப்படுகின்றது. ஆனால் அது இரவு 9 மணியு டன் மூடப்படுவதால் அதற்குப் பின்னர் வருவோர் அங்கு தங்க முடியாத நிலையில் வேறு விடு திகளில் உயர்ந்த கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (த-108)

## ஓமந்தைச்

குறிப்பாக வவுனியாவில் இருந்து வன்னிப் பகுதியின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் பயணி கள் பஸ்களை மறித்துச் சோதனை செய்யும் படையினர் ஆள் அடை யாள அட்டைகளைத் துருவித் துருவி ஆராய்ந்த பின்னரே பய ணங்களைத் தொடர அனு மதிக்கின்றனர்.

அதேபோல கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வரும் ரயில்களை ஓமந்தைப் பகுதி யில் வைத்து இடைமறிக்கும் இராணுவத்தினர் பயணம் செய் யும் பயணிகளிடம் ஆள் அடை யாள அட்டைகளைப் பார்வை யிட்ட பின்னரே பயணங்களைத் தொடர அனுமதிக்கின் றனர்.

படையினரின் இந்தச் சோதனை நடவடிக்கைகளுக் காகச் சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் ரயில் ஓமந்தையில் தங்கி நிற்க வேண் டிய நிலை காணப்படுவதால் ரயில் யாழ். ரயில் நிலையத்தை சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் அதில் பயணம் செய்யும் அரச ஊழி யர்கள் உட்பட அனைவரும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கு கின்றனர். (த-108)

## இலங்கைக்கு

மாநாட்டின்போதே வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல். பீரிஸி னால் மேற்கண்டவாறு தெரி விக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் குறிப்பிடு கையில்,

நாட்டில் போர் முடிவடைந்து விட்டாலும் பிரச்சினைகள் இன் னும் ஓய்ந்தபாடில்லை. அண் மையில் வவுனியா நகரில் வைத்து கிருஸ்ணராசா என்ப வர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து போரால் பாதிக் கப்பட்டோர் எனக் கூறப்படும் ஒரு தொகை மக்களின் கையொப் பம் அடங்கிய வெற்றுக் காகி தங்கள் கைப்பற்றப்பட்டன.

அத்தோடு, சுமார் 400 பேரின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் இவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ள னர். மேலும், இவருடைய தொலைபேசி மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கி யஸ்தர்களுடன் நெருங்கிய தொடர்பிலுள்ள சண் மாஸ்டர் என்ற நபருக்கு 67 தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க் கும்போது இலங்கைக்கு எதி ரான சதி வலையொன்று பின் னப்படுவது தெளிவாகத் தெரி கின்றது.

ஐ.நா. விசாரணையில் சாட்சிய மளிப்பதற்கான திகதி ஒக்ரோபர் 30 ஆம் திகதியுடன் முடிவடைந் துள்ள போதிலும், தேவையேற் படின் சில முக்கிய சாட்சியங் களை பெற்றுக் கொள்வோம் என ஐ.நா. அறிவித்துள்ளது.

இது மிகவும் பிழையானதொரு செயற்பாடாகும். அடுத்த வரு டம் ஜெனிவாவில் நடைபெற வுள்ள மனித உரிமைக் கூட்டத் தொடரின்போது இலங்கைக் கெதிராகச் செயற்பட வேண்டும் என ஐ.நா. இப்போதிலிருந்தே செயற்பட்டு வருகின்றது.

அதற்கான போலி ஆவணங் களை சேகரிக்கும் முயற்சியா கவே கிருஸ்ணராசாவின் செயற் பாடுகள் காணப்படுவ தாக வும் எம்மால் கருதப்படுகின்றது - என்றார். (த-சி)

## இலங்கையை

இதற்காகத் திட்டமிட்டுள்ளது. இந்தத் தந்திரோபாய நடவ டிக்கை சர்வதேச கடற்பாதைக ளின் பாதுகாப்பை சீனா உறு திப்படுத்துவதில் வலுவான பங்க ளிப்பை வழங்கும் எனவும், அதன் மூலமாக சீனா உலக மற்றும் பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மையை பாதுகாக்க முடி யும் எனவும் அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வட கொரியா, பப்புவா நியுகினி, கம்போடியா, தாய்லாந்து, மியன் மார், பங்களாதேஷ், பாகிஸ் தான், இலங்கை, நைஜீரியா, கென்யா, தன்சானியா, அங் கோலா ஆகிய நாடுகளில் இந் தத் தளங்களை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

நமீபியாவின் பாதுகாப்பு பேச் சாளர் மொனிகா செயா இந்தத் தகவலை உறுதிசெய்துள்ளார். நாங்கள் இது குறித்து அறிந்துள் ளோம். நாட்டின் உயர்மட்டத் தில் இது குறித்து ஆராயப்படு கின்றது. இது தொடர்பிலான தீர் மானம் எடுக்கப்பட்டதும் அதனை நாட்டிற்கு அறிவிப் போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா பரஸ்பரம் நன்மைய ளிக் கும் சினேகபூர்வமான பேச்சுக் கள் மூலமாக வெளிநாடுகளில் இவ்வாறான தளங்களை அமைக் கவுள்ளது.

மேலும், சீனா கடற்படை அமெ ரிக்க பாணியிலான தளங்களை அமைக் காது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், அந்நாடு சர்வதேச விதிமுறை களை பின்பற்றி வெளி நாட்டு தந்திரோபாய ஆதரவு தளங் களை அமைப்பதை நிறுத்தாது. சீனா நமீபியாவில் பல உட் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் கனியவளங்களை அகழுதல் குறித்து ஆர்வம் கொண் டுள்ளது. சீனாவின் செய்மதி கண் காணிப்பு நிலையமும் அங்குள்ளது.

சீனாவின் பாதுகாப்பு மற்றும் ஏனைய நலன்களை, அந்த நாட்டின் சர்வதேச அந்தஸ்த் திற்கு ஏற்ப பூர்த்தி செய்வதற்காக ஆயுதப்படைகளை பலப்படுத் தும் முடிவு சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் எடுக்கப் பட்டது.

உலகின் இரண்டாவது மிகப் பெரும் கடற்படை சீனாவினு டையது என்பது குறிப்பிடத் தக்கது என்று நமீபியா நாளேடு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## இளைஞர்

நிகழ்ச்சி நிரலில் 'சம்மேளன சுயாதீன வேலைத்திட்டம்' தொடர்பான உரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் அது தொடர்பாக எமக்கு வாய்ப் புத் தரவில்லை என்ற குற்றச் சாட்டை முன்வைத்தார். இது தொடர்பில் அவர் கூறுகையில்,

இந்த ஊடக மாநாட்டில் இது வரை காலமும் செய்த செயற் திட்டங்கள் எனப் பலவற்றைக் காட்டுகின்றார்கள். அவை அனைத்தும் இளைஞர்கள் இல் லாமல் சாத்தியமாகவில்லை. இந்த நிலையில் ஊடகவிய லாளர் மாநாட்டில் இளைஞர் களின் பிரச்சினை தொடர்பில் பேச இடமளிக்கவில்லை. நாங் கள் ஊடகவியாளர் மாநாடு ஒழுங்கமைக்கக் கேட்டபோது எமக்கு அனுமதி மறுக்கப் பட்டது. இது உண்மைகளை வெளியே சொல்லிவிடுவோமோ என்ற பயமாகக் கூட இருக்க லாம். இளைஞர்களின் பிரச்சி னைகளுக்குத் தீர்வு சொல்ல இவர்களால் முடியாது. கிரிக் கெட் போட்டிகளில் ஏற்பட்ட பிரச் சினைக்கு இதுவரை தீர் வில்லை. 2011ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கற்கைநெறிக்கான சான்றிதழ்கள் இன்னும் வழங் கப்படவில்லை. யாழ்ப்பாணத் தில் நடத்தப்படவிருந்த உதை பந்தாட்டப் போட்டி இடமாற்ற மடைந்தது. அதற்கான கார ணம் இல்லை. இப்படி பதிலில் லாப் பிரச்சினைகள் அதிகம். இளைஞர் கைகளில் எதுவுமே தராமல் சுயாதீனமாக இயங்க விடுவதாக கூறுவதில் எதுவித நியாமும் இல்லை'-என்றார்.

இதற்குப் பதிலளித்த ஐ.தபேந் திரன்,

நாங்கள் இளைஞர்களுக்கு எதிரானவர்கள் இல்லை. அவர் களுக்கான முன்னுரிமைகளை வழங்குகின்றோம். இளை ஞர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எல்லாவற் றுக்கும் உடனடியாக முடிவு தேவை. அது இளைஞர்களுக் குரிய பொது வான இயல்பு. மாவட்ட இளை ஞர்கள் கழக சம்மேள தலைவர் முன்வைக் கும் குற்றச்சாட்டுக் களை நான் மறுக்கின்றேன் - எனத் தெரி வித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட் டில் வடமாகாண தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற கணக் காளர் எஸ்.ரட்ணகுமார், அபிவி ருத்தி உத்தியோகத்தர் உ.யசோதா, மாவட்ட இளைஞர் சேவை உத் தியோகத்தர் ஸ்ரீ.விநோதினி, மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.சண் முகவடிவேல், நிஸ்கோ யாழ் மாவட்ட பொது முகாமையாளர் எஸ்.கோகுல்ராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.(த-(10-20)

## விபத்தின்

யம் அளிக்கையில், தான் செலுத்தி வந்த வாகனத்தின் மீது வெள்ளை நிற டிப்பர் வாக னம் ஒன்று மோதிச் சென்றது எனச் சாட்சியமளித்தார்.

இதேவேளை, பொலிசாரின் தகவலோ யானை தாக்கிய தால் உயிரிழப்பு சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தமையி னால் இதன் உண்மையைக் கண்டறிந்து அடுத்த தவணை யில் சமர்ப்பிக்குமாறு மாங் குளம் பொலிஸாருக்கு முல் லைத்தீவு மாவட்ட நீதிபதி உத் தரவிட்டார். (த-101)

## ஐஸ்கிறீமில்

ஆய்வுகூடங்களில் சோதனையி டப்பட்டன. மலத்தில் காணப் படக்கூடிய கிருமி உள்ளிட்ட கிருமித் தொற்று ஐஸ்கிறீம் உற்பத்திகளிலும் இருப்பதாக ஆய்வு அறிக்கை கூறியது.

அதேசமயத்தில் யாழ். குடா நாட்டில் நீர் மூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்படுவோ ரின் எண்ணிக்கையும் மிக மிக அதிகமாக இருந்தது. இதனை அடுத்து சுகாதாரத்துறை அதி காரிகள் தீவிர நடவடிக்கையில் இறங்கினர். ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தி நிலையங்களில் அதிரடியான தீவிர சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. உரிய விதிகளை யும் நியமங்களையும் பின்பற் றாத உற்பத்தியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டது. உற்பத்தியை நிறுத்தி குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு பல நிறு வனங்கள் கேட்கப்பட்டன. சில நிறுவனங்கள் நீதிமன்றத் தில் நிறுத்தப்பட்டன. அங்கு அவர் கள் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டு தண்டம் செலுத்தினர்.

அதிகாரிகளின் இந்த சுகாதார நடவடிக்கை மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத் திற்குத் தெரிந்திருந்தது. அதற்கு அவரது அனுமதியும் இருந்தது. ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை நேரில் சந்தித்த அவர், அதி காரிகளின் நடவடிக் கையின் நியாயத்தையும் தேவையை யும் விளக்கியிருந்தார். மக்க ளின் சுகாதார நலன்களைக் கருத்தில்கொண்டு, உரிய நிய மங்களைப் பின்பற்றாத நிறு வனங்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் திட்டவட்ட மாகத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் உரிய நியமங்களைப் பின்பற்றாம லும் உற்பத்திக்கு அவசியமான வசதிகளைக் கொண்டிராதது மான நிறுவனங்கள், சிலவற் றுக்கு அனுமதி வழங்குவதில் அதிகாரிகள் இறுக்கமான போக் கைக் கடைப்பிடித்தனர். தேவை யான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு உரிய நியமங்க ளைப் பின்பற்றினால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என் பதில் அவர்கள் உறுதியாக நின்றனர்.

### தவராசாவின் பிரேரணை

இதனால் தமது உற்பத்தியை மீள ஆரம்பிக்க முடியாத உற் பத்தியாளர்கள் சிலர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஓரிரு தினங்களுக்கு முன்னர் சந்தித்துப் பேசினர். இந்த நிலையில் நேற்றைய தினம் வடமாகாண சபை அமர்வில் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும் அமைச்சர் டக்ள ஸின் சகாவுமான சி.தவராசா, அவசர கவன ஈர்ப்புப் பிரேர ணையாக இந்த விடயத்தை முன்வைத்தார். அதிசயமாக கூட்டமைப்பு உறுப்பினர்கள் அதனை ஆதரித்து அடுக்கடுக் காகப் பேசினார்கள்.

ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங் களின் மீதான திடீர் நடவடிக் கையால் பலர் பாதிக்கப்பட் டுள்ளனர் என்றார் தவராசா. முன்னறிவித்தல் ஏதும் இன்றி சோதனை நடத்தப்பட்டதாகவும் குறைப்பட்டார். குடாநாட்டில் உள்ள ஏனைய உணவகங் களில் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படாமல் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மீது மட்டும் சோதனை மேற்கொள் ளப்பட்டமை சந்தேகத்தை ஏற் படுத்துவதாகவும் தெரிவித்தார்.

### உறுப்பினர்களின் சீற்றம்

அவரது கருத்தை கூட்டமைப்பு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந் திரனின் சகோதரருமான க.சர் வேஸ்வரன் ஆமோதித் தார். "மாகாண சபை அதிகாரிகளின் நடவடிக்கை சந்தேகத்தை ஏற் படுத்துகிறது" என்று அவரும் கூறினார். "அதுவும் ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் போராட்டம் செய்த பின்னர் பல நிறுவனங் களுக்கு அனுமதி வழங்கப்பட் டமை மேலும் சந்தேகத்தை ஏற் படுத்துகின்றது" என்று மேலும் தெரிவித்தார். "உண்மை கண் டறியப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

"இவ்வாறு திடீரென நடவ டிக்கை எடுக்கப்பட்டதன் பின் னணி விசாரிக்கப்படவேண் டும்" என்று வலியுறுத்தினார் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் மருத்து வர் சிவமோகன்.

"இதன் பின் உள்ள வியாபார அரசியல் கண்டறியப்படவேண் டும்" என்று கூட்டமைப்பின் நியமன உறுப்பினரான அஸ் மின் தெரிவித்தார்.

எனினும் கூட்டமைப்பின் மன் னார் மாவட்ட உறுப்பினர் மருத்துவர் குணசீலன், "அதி காரிகளின் திடீர் நடவடிக்கை யைத் தவறு" என்று கூற முடியாது என்றார். "சோத னையிடும் அதிகாரிகளுக்குக் கடைகளை மூடும் அதிகாரம் இல்லை, அதனை நீதிமன்றமே செய்யவேண்டும்" என்றும் கூறினார்.

கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா கூறுகையில், யாழ்ப்பா ணத்தில் நீரிழிவு நோய் அதி கரித்து வருவதைச் சுட்டிக்காட் டியதுடன் யூஸ் விற்பனைக்குத் தொடர்ந்தும் அனுமதி மறுத் துள்ளமை நல்ல விடயம் என்று தெரிவித்தார்.

உறுப்பினர்கள் இவ்வாறு வலி யுறுத்தியபோதும் உண்மை யைக் கண்டறிவதற்கான விசா ரணைக்குழு ஒன்று நியமிக் கப்படுவது தொடர்பில் சபையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப் படவில்லை.

### அதிகாரிகள் விளக்கம்

இதேவேளை, மாகாண சபை உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக் குப் பதிலளித்த சுகாதாரத்துறை அதிகாரிகள் சில விடயங்க ளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

தவராசா சுட்டிக்காட்டியதைப் போன்று உணவகங்கள் மீது தாம் நடவடிக்கை எடுக்க வில்லை என்று கூறுவது பொய். சுகாதாரம் பேணல் தொடர்பில் அவற்றின் மீதுதான் முதலில் நடவடிக்கை எடுக்கப் பட்டது. உணவகங்களின் சுகா தார நிலைக்கேற்ப அவை 'ஏ', 'பி', 'சி' என்று மூன்றாகத் தரப் படுத்தப்பட்டன. அந்தச் சான்றி தழ்கள் மக்களுக்கு காட்சிப்படுத் தப்படவேண்டும் என்றும் உத் தரவிடப்பட்டது. தவராசா யாழ்ப் பாணத்தில் உள்ள உணவகங் களுக்குச் சென்றால் அவற்றை இப்போதும் பார்க்கலாம். இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போது கூட கடை உரிமையாளர்களி டம், நாம் அதிகம் கெடு பிடி செய்கிறோம் என்ற கோபம் இருந்தது. அரசியல் தலையீடு இல்லாத காரணத்தால் அது சுகாதார நடவடிக்கையாக மட் டுமே பார்க்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நீர் மூலம் பரவும் நோய்களால் பாதிக்கப் படுவோரின் எண்ணிக்கை அதி கம் என்பதால்தான், ஐஸ்கிறீம் வகைகளில் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. குளிர் நிலையில் கிருமிகள் பல்கிப் பெருகும் வாய்ப்பு அதி கம் உண்டு. அதனால் ஏற்படும் சுகாதாரக் கேட்டைக் கட்டுப் படுத்துவதற்காகத்தான் நாம் நடவடிக்கை எடுத்தோம். அவ் வாறு நடவடிக்கை எடுக்காமல் விட்டிருந்தோமானால் பணத்தை வாங்கிக்கொண்டு நாம் எதுவும் செய்யாமல் இருந்தோம் என்று குற்றஞ்சாட்டி இருப்பார்கள். எனவே மக்களின் சுகாதார நலனிலேயே நாம் அக்கறை கொண்டிருந்தோம். செய்யா விட்டாலும் குற்றம் என்பார்கள் செய்தாலும் சந்தேகம் என்பார் கள் என்றால் எப்படிப் பணியாற் றுவது? இவ்வாறு சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### விசாரணை கட்டாயம்

இதேவேளை, இந்த விடயத்தை சபையில் பேசுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் உண்மையி லேயே விசாரணை நடத்தி, இந்த விடயத்தில் யார் அரசியல் செய் தார்கள்? யார் தவறு செய்தார்கள்? நடவடிக்கையின் பின்னணி என்ன? என்பன போன்ற உண்மை களை வடமாகாண சபை வெளிக் கொண்டு வந்து சபையில் பகிரங் கப்படுத்த வேண்டும் என்று பொது மக்கள் வலியுறுத்துகின்றனர்.

## மிரட்டிய

கொள்ள முடியாது. அத்து டன் அவரை வேறு பாடசாலைக்கு இடமாற்றமும் செய்ய முடியாது. இருப்பினும் எமது இரு அலு வலர்கள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நேரில் ஆய்வு செய்துள்ளனர்.

இதேவேளை எனது அமைச் சின் செயலாளருக்கு 4 தட வைகள் மேற்படி விடயம் தொடர் பில் கடிதம் எழுதியிருந்தேன். பதில் கிடைக்கவில்லை. தற் போது வடக்கு மாகாண ஆளு நருக்கு கடிதம் எழுதுகின்றேன். அவரூடாக மேற்படி அதிபருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ந-5)

# எதிர்வரும் தேர்தல் மு.கா.வுக்கு சவால்

## சுற்றுலாத்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



மட்டக்களப்பு, நவ.20

தீர்மானம் எடுப்பதில் முஸ்லிம் காங்கிரஸ் பெரிய சவாலை எதிர்கொள்கின்ற தேர்தலாக இது அமையலாம் என்று கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமியகைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி சுற்றுலாத்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நாட்டின் தலைமைத்துவம் தற்போது கடும் குழப்பத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

மாகாண விவசாயிகள் 51 பேருக்கு உள்ளீடுகள் வழங்கும் நடவடிக்கையும், பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர்கள் 21 பேருக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வும், ஏறாவூர் அஷ்ஹர் மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

"மக்களின் இன்றைய அவநம்பிக்கையான நிலைமைக்கு நியாயமான பல காரணங்கள் உள்ளன. எந்தவொரு விடயத்தையும் அணுகும்போது அதை அக்கறையுடன் அணுக வேண்டும்.

ஒரு பயங்கரவாத இயக்கத்தை பூண்டோடு ஒழித்து விட்டோம் என்பதற்காக, பயங்கரவாதம் உருவாகுவதற்குக் காரணமாக இருந்த அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று அர்த்தமில்லை.

பயங்கரவாதம் அழிக்கப்பட்ட பின்னர் இனப்பிரச்சினை பற்றி பேசத்தேவையில்லை என்று அரசு எடுத்த நிலைப்பாடே, இன்று அரசை இந்தளவு இக்கட்டில் மாட்டியிருக்கிறது.

பிரச்சினை என்று ஏதோவொன்று இருந்ததாலேயே, தமிழ் மக்களில் ஒருசாரார் ஆயுதம் ஏந்தவேண்டி வந்தது. அதனாலேயே வன்முறைகள் வியாபித்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அழிய நேரிட்டது.

பிரபாகரனை கொன்றொழித்ததுடன், இந்த நாட்டில் சிறுபான்மை இனங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்பதை அரசு அடியோடு மறந்துவிட்டது. இது இந்த அரசின் மீது, சிறுபான்மை இனத்தவர்கள் வெறுப்படையக் காரணமாக அமைந்துள்ளது. இதுவே அடிப்படையில் நடந்த தவறு.

போருக்குப் பின்னர் நாட்டை அபிவிருத்தி செய்வதில் அரசு அதிக பிரயத்தனம் எடுத்து, அதில் வெற்றி கண்டுள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகளவான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அதற்குச் சமாந்தரமாக மக்களின் மனங்களை வெல்வதில் குறிப்பாக, சிறுபான்மை இனங்களின் மனங்களை வெல்வதில் அரசு தோல்வி கண்டுள்ளது. சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவரை, இந்த நாட்டில் பிரச்சினைகள் முடிவுக்கு வராது. அது நீறுபூத்த நெருப்புப்போல என்றும் இருந்து கொண்டிருக்கும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கமுடியாதொரு இக்கட்டான சூழ்நிலைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது. நாங்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றோம். அரசுக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறோம். ஆனால், ஒரு சமூகத்தின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு வழங்கப்படாத வரையில், நாம் தொடர்ந்து அரசுடன் இருப்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

எதுவாக இருந்தாலும், ஒரு சமூகத்தினுடைய தீர்மானங்களை எடுக்கின்ற பொழுது, அதில் முஸ்லிம் காங்கிரஸுக்குப் பெரிய பொறுப்புள்ளது. சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையும் உத்தரவாதமும் கிடைக்கும் பொழுதே, நாங்கள் ஆதரவு வழங்குவது பற்றி தீர்க்கமான முடிவெடுக்க முடியும். நாட்டின் அரசியலில் அடுத்துவரும் குறுகிய மணித்தியாலங்களுக்குள் எதுவும் நடக்கலாம். தீர்மானம் எடுப்பதில் முஸ்லிம் காங்கிரஸ் பெரிய சவாலை எதிர்கொள்கின்ற தேர்தலாக இது அமையலாம்"- என்றார். (வ)

# படகுப் பயணிகளின் ஆஸி.வருகை வீழ்ச்சி

## அந்தநாட்டு பிரதமர் கூறுகிறார்



படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வரும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா ஊடாக ஆஸ்திரேலிய கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இதற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்தோனேஷியாவிலிருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு கடந்த காலங்களில் முற்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் கடந்த 10 மாதங்களில் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை என்று ஸ்கொட் மொறிசன் தெரிவித்ததாக 'பிபிஸி' செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

# இலங்கையின் வயதான வரவேற்பாளர் காலமானார்



கொழும்பு,நவ.20

இலங்கையின் பழைமையான விடுதிகளில் ஒன்றான கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலின் மூத்த ஊழியர் கே.சட்டுகுட்டான் தனது 94 ஆவது வயதில் காலமானார். சர்வதேச ரீதியில் பேசப்படும் நபராகவும், உலக பிரபலங்கள் பலரோடு நட்புறவைப் பேணுபவராகவும் அவர் திகழ்ந்தார். இலங்கையின் வயதான வரவேற்பாளராக கோல்பேஸ் ஹோட்டலில் கடமையாற்றிய சட்டுகுட்டான் 72 வருடங் களாக தனது சேவையை வழங்கியுள்ளார். 1942 ஆம் ஆண்டு சாதாரண பணியாளராக இணைந்த அவர் கோல்பேஸ் ஹோட்டலில் மரியாதைக்குரிய நபராக அனைவராலும் நோக்கப்பட்டார்.

சட்டுகுட்டான் தனது 90 ஆவது அகவையை கொண்டாடிய போது ஏ.எப்.பி. செய்திச் சேவைக்கு பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

உலகப் பிரபலங்கள் பலருக்கு சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியளிப்பதாகவும் இலங்கையின் பாரம்பரியத்தை எடுத்தியம்பும் வகையில் உடை அணிவது பெருமைக்குரியது என்றும் அந்தப் பேட்டியின் போது அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# எபோலாவுக்கு எதிராகப் போராட 285 மில். அமெரிக்க டொலர்

## உலக வங்கி ஒதுக்கீடு

எபோலா நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வரும் மேற்காபிரிக்க நாடுகளுக்கு அந்த நோயை எதிர்த்துப் போராடுவதற்காக உலக வங்கியால் 285 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் கினியா, லைபீரியா, சியாரா லியோன் ஆகிய மேற்காபிரிக்க நாடுகளுக்கு எபோலாவை அழிக்கும் நோக்கில் உலக வங்கியால் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட தொகையிலிருந்தே முதற்கட்டமாக இத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக ஷிங்குவா செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் உலக வங்கியால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தத் தொகையின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச சேவையாளர்களை பாதுகாக்க முடிவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சேவைகளையும் வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொஸ்லந்த பகுதியில்அண்மையில் இடம்பெற்ற மண்சரிவால் பாதிக்கப்பட்டு பூனாகலை தேயிலை தொழிற்சாலை முகாமில் தங்கியிருக்கும் மக்களை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் இயக்குநர் ஷெரீ கார்லின் நேற்றுச் சந்தித்தார். இயற்கை இடரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த முகாம் தங்குமிட வசதிகளை வழங்குகின்றது. 'வேள்ட் விஷன்' மனிதாபிமான பிரதிநிகளுடன் இணைந்து சிறுவர்களுக்கு கல்வி உபகரணங்களை அவர் விநியோகித்தார். (வ)

## தொடர்ச்சிகள்

### பதவி

போராளியாக நகுலேஸ்வரன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பதவி நிலைகள் பாராது கைதுகள் நடக்கும் என்று தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண, அந்தப் பிரிவு கிராம அலுவலர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மட்டுமல்லாது சாட்சியங்கள் ஊடாக, கொலையுடன் சம்பந்தப்பட்ட எவராக இருந்தாலும் கைது செய்யப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றிய முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் கடந்த புதன்கிழமை அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து அங்கு தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், வெற்று ரவைக் கோது ஒன்றையும் மீட்டிருந்தனர்.

விசாரணை வளையத்துக்குள் இருந்த பிரதேச செயலர் சிலமணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொலிஸ் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பிரிவு கிராம சேவகர் உட்பட இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். மீட்கப்பட்ட தடயப்பொருள்கள் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவுள்ளன. அவை தொடர்பான விரிவான தகவல்கள் சில நாள்களில் அறிவிக்கப்படும். தடயவியல் ரீதியாக முக்கிய தடயங்களும், சாட்சிகளும் கிடைத்துள்ளன"- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, சுட்டுக்கொலை செய்யப்பட்ட நகுலேஸ்வரனின் உடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றப் பணிப்புக்கு அமைய புதைக்கப் பட்டது.

(ற4,56)

### பணத்தை

தடுக்க முடியாது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இதனை அங்கு நின்ற காணி உரிமையாளரும் உறுதிப்படுத்தியதால் காணி அளவீட்டை தடுக்கச் சென்ற மக்களும், மாகாண சபை உறுப்பினர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

நீண்ட காலமாக தமது நிலத்திலே கடற்படையினர் ஆக்கிரமித்திருந்தனர், அதனை எப்போது மீளஒப்படைப்பார்கள் என்று தெரியாமல் இருந்தது. இந்த நிலையில் காணியைக் கடற்படையினருக்கே விற்பனை செய்ய முடிவு செய்துள்ளேன் என்றும் காணியின் உரிமையாளர் கூறினார்.

காணி உரிமையாளர்கள் காணியை, இராணு[illegible] தேவைக்காக வழங்க [illegible]கின்ற சந்தர்பங்களிலே[illegible]. அந்தக் காணிகளில் அ[illegible] செய்ய முடியாமல் நில[illegible]வையாளர்கள் திரும்பிச் [illegible]கின்றனர். [illegible]

## பகிடிவதை என்ற போர்வையில் பாலியல் இம்சைகள்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களைப் பகிடிவதை என்ற போர்வையில் பற்றைக்காட்டுக்கு அழைத்துச்சென்று அங்கு அவர்கள் மீது பாலியல் ரீதியான இம்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிரூபணமாகியதைத் தொடர்ந்தே அந்தப் பகிடிவதையில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்றுமுன்தினம் அமைச்சில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பகிடிவதை என்ற போர்வையில் பற்றைக் காட்டில் சகதி நிறைந்த குழிகளைத் தோண்டி புதிய மாணவ, மாணவியரை அரை நிர்வாணமாக்கி அந்தக் குழிகளில் இறக்கிச் சேற்றால் அபிஷேகம் செய்தும் அந்தக் கோலத்தில் அவர்களைப் புகைப்படம் எடுத்தும் இம்சைப்படுத்தியுள்ளார்கள்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்கள் இவ்வாறு கொடூரச் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதாக உபவேந்தருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து அவர் விரிவுரையாளர்கள் குழுவொன்றை அந்தப் பற்றைக் காட்டுக்கு அனுப்பி பாதிக்கப்பட்ட மாணவர்களை மீட்டிருக்கிறார் -என்றார். (த-4)

# எங்கள் தனித்துவங்களை அடையாளப்படுத்துவோம்

### கலைப் பீடாதிபதி வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், நவ. 20

எமது தனித்துவங்களையும் அடையாளங்களையும் நாம் அவசியமாக அடையாளப் படுத்தவேண்டும். ஏனெனில் அவை வெறும் அடையாளங்கள் மட்டுமல்ல, எம் சார்ந்த நாளைய வரலாறு.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன்.

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஊடகத்துறைப் பிரிவு மூன்றாம் வருட மாணவர்களால் நேற்று அடையாளம் என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

சஞ்சிகை வெளியிடப்படுவது சிறப்பான விடயம். ஆனால் அவ்வாறு வெளியிடப்படும் சஞ்சிகைகள் எமது கலாசாரங்களையும், பண்பாடுகளையும், அடையாளங்களையும் சமுதாயத்தின் இருப்பையும் பிரதிபலிக்கும் வகையில் அமையவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வரலாற்றுத் துறை தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடக இணைப்பாளரும், தமிழ்த்துறை தலைவருமான பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், நூலுக்கான ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், சந்தைப்படுத்தல் துறைத்தலைவருமான பேராசிரியர் இ.ரட்ணம் வழங்கினார். (த-ரி)

# 1,870 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

### யாழ். கரையோரப் பகுதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். கரையோரப் பகுதிகளில் ஆயிரத்து 870 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 858 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் கொட்டித் தீர்த்த மழையினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு உடனடியாக ஒரு வார காலத்துக்குரிய நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் தெரிவித்தார்.

6 லட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உலர் உணவுப் பொருள்களை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரிசி, சீனி, பருப்பு, கோதுமை மா போன்ற பொருள்கள் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் கூறினார்.

நாவாந்துறை, பொம்மைவெளி, வசந்தபுரம், உதயபுரம் போன்ற கரையோரப் பிரதேசங்களில் குடியிருக்கும் அனேகமான மக்கள் இந்த வெள்ள இடரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனைவிடப்பண்ணைமீனாட்சியும், கொட்டடி, துண்டி, எழிலூர் போன்ற பகுதிகளிலும் வெள்ளம் குடியிருப்புக்களுக்குள் புகுந்துள்ளது. கரையோரப் பகுதிகளில் உள்ள மொத்தம் 9 கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளில் இந்த வெள்ள இடரினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# சந்தேகத்துக்கிடமாக நடமாடிய சிறுவர்கள்

### சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதி

தென்மராட்சி, நவ. 20

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இரவுவேளையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய பரந்தன் சிவபுரத்தைச் சேர்ந்த 10, 13, 14 வயது சிறுவர்களைப் பொலிஸார் பிடித்துச் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து ஏ-9 வீதியில் நடந்து வந்த சிறுவர்களையே பொலிஸார் பிடித்து மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தச் சிறார்களுடன் உரையாடியபோது, முன்னுக்குப் பின் முரணான தகவல்களைத் தெரிவித்தபோதிலும் வேலை செய்து உழைத்த காசில் நுணாவில் பகுதியில் உள்ள நீச்சல் குளத்தில் பணம் செலுத்தி, நீராடிவிட்டு வரும் போதே பொலிஸார் தம்மைப் பிடித்ததாகத் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவர்களின் பெற்றோரை வரவழைத்து சிறுவர்கள் தொடர்பான விவரங்கள் பெறவுள்ளதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தங்கவேல் நிரோஜன் ( வயது-10), தேவராசா சிறிதரன் (வயது-13), சண்முகம் கேதீஸ்வரன் (வயது-14) ஆகியோரே பிடிக்கப்பட்டவர்களாவர்.

இந்த மூவரும் பரந்தன் சிவபுரத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## கிளிநொச்சி குளங்களின் நீர் மட்டங்கள் உயர்வு

கிளிநொச்சி, நவ. 20

மழைவீழ்ச்சி அதிகரித்ததன் காரணமாக குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்தார். கடந்த இரவு 82.3 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக இரணைமடுக்குள நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. குளங்களின் நீர் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 14அடி 10 அங்குலமாக உள்ளது .

கனகராயன் ஆறு வழியாக நீர் வரவு காணப்படுகின்றது-என்றார் அவர். (த-18)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 02.10.1982

உதிர்வு 21.10.2014

அமரர் குமாரசூரியர் ராஜவடிவேல் சந்திரகாசன் J.P

(அபிவிருத்தி அலுவலர்-காணி ஆணையாளர் நாயகம் அலுவலகம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம்)



மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகம்
- சென்றவனே!

ஆறாத்துயரம் மனதில் பதிந்து விட்டதடா
உனை நினைத்து கண்ணீரும் தீரவில்லை
கடலளவில் சேர்ந்து விட்டதடா!
நாங்கள் விட்டகண்ணீர்
மலையென வளர்ந்துவிட்டு
திடீரென சிலையென சரிந்து உடைந்து
- விட்டாயடா!

மென்மையான உள்ளங் கொண்டவனே
எம்மோடு பாசமாய் வார்த்தைகள் பேசிட
யார் இனி உன்னைப்போல் அன்பாய் அணைத்திட
நீங்காத துயரிலே எம்மை நிறுத்தி விட்டு
நீ மறைந்து அணையாத தீபமாக எம் நெஞ்சில்
- சுடர் விடுகின்றாய்.

மாதங்கள் வருடங்கள் கடந்து சென்றாலும்
உன்புன்னகை தவழும் திருவுருவம் எம்
- நினைவுக்கு
வந்து எம்மை வாட்டி வருத்தி விடுகின்றதடா!

எமது உடன்பிறப்பு திடீரென மறைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, கொழும்பு லங்கா மருத்துவமனை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கீரிமலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அந்தியேட்டியையடுத்து இன்று (20.11.2014) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.